



# தேவாலய ரகசியங்கள்

**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்




**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்

**பதிப்பாளர்**
**இந்து ஞான மேடை**
(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 47 முதல் அச்சிடுதல் : ஏப்ரல் - 2025
பிரதிகள்: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே.செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

## பொருளடக்கம்


| விஷயங்கள் | பொருள் | பக்கங்கள் |
|---|---|---|
| | எழுத்தாளர் முதல் வார்த்தை | 05 |
| 1. | தேவாலய ரகசியங்கள் | 09 |
| 2. | லிங்க பிரதிஷ்டா | 15 |
| 3. | உருவம் பிரதிஷ்டா (பகவானின் உருவம் பிரதிஷ்டா) | 24 |
| 4. | மூலம் அம்மா பெத்தம்மா | 29 |
| 5. | ஏழு துவாரங்கள் | 36 |
| 6. | கோபுரம் | 41 |
| 7. | ராட்சச உருவம் | 45 |
| 8. | கொடி மரம் | 47 |
| 9. | மணி | 52 |
| 10. | சிம்மதலயாட்டம் | 54 |
| 11. | கர்ப்பக் கோயில் | 57 |
| 12. | சங்கு சக்கரங்கள் | 58 |
| 13. | ஆயுதங்கள் | 60 |
| 14. | நாமம் | 62 |
| 15. | ஹஸ்தம் | 64 |
| 16. | மயில் இறகு | 71 |
| 17. | முரளி (புல்லாங்குழல்) | 75 |
| 18. | பாதங்கள் | 77 |
| 19. | தேகம் நீல வண்ணம் | 79 |
| 20. | ஆராதனை | 79 |
| 21. | தீபம் | 83 |
| 22. | தாம் பூலம் | 85 |
| 23. | பூ மாலை | 88 |
| 24. | அபிஷேகம் | 91 |
| 25. | கொப்பரைகாய் (தேங்காய்) | 94 |
| 26. | தலை முடிகள் வழுங்குதல் | 101 |
| 27. | நமஸ்காரம் | 104 |
| 28. | ஷட கோபம் (சடாரி) | 106 |
| 29. | பரதக்ஷணங்கள் | 108 |

## பொருள்


| | |
|---|---|
| 30. கற்பூரம் | 109 |
| 31. கோவிந்தா | 112 |
| 32. தெப்பக்குளம் | 115 |
| 33. ஊரேகிம்பு (ஊர்வலம்) | 116 |
| 34. திரு நாள் | 118 |
| 35. பட்டபயல் (ரகசியம் வெளிப்படுவது) | 120 |
| 36. தேவதாசிகள் | 124 |
| 37. தேசதாசுகள் | 126 |
| 38. நட்சத்திரம் | 127 |
| 39. சந்திரன் | 128 |
| 40. சிறகுகள் கொண்ட குதிரை | 129 |
| 41. பீர்கள் (மொஹரம்) | 131 |
| 42. தேவாலயகளில் சுவாமிகள் விதானம் | 134 |
| 43. இறுதி வார்த்தை | 150 |

## எழுத்தாளர் முதல் வார்த்தை

தேவாலயம் என்றால் கடவுள் ஆலயம். கடவுள் ஒருவர் தான் என்று ஞானம் தெரிந்தவர்கள் சொல்வது கேட்டிருப்போம். கடவுள் ஒருவராக இருக்கும்போது ஒரு கடவுள் ஆலயம் இருக்காமல் பலவிதமான தேவதைகள் ஆலயங்கள் இருப்பதை பார்த்துக் கொண்டே இருக்கிறோம். இதில் அந்த ஒரு கடவுள் யார் என்று கேள்வி வராமல் இருக்காது. எத்தனையோ ரகமான தேவாலயங்களில் யார் உண்மையான கடவுள் என்ற கேள்வி கூட வரலாம். எல்லாத்தையும் விட மீறிய கேள்வி கடவுள் யார் என்பது. கடவுள் யார் என்பதற்கு, எது தேவாலயம் என்பதற்கு பதில் தெரிய வேண்டியது இருக்கும். இவ்வளவு பெரிய கேள்விக்கு ஒரு வார்த்தையில் பதில் யாரும் சொல்ல முடியாது. மனிதனுக்கு கடவுள் தெரிய வேண்டுமென்றால் எத்தனையோ விவரங்கள் தெரிய வேண்டும். கடவுளை பற்றி தெரிவிப்பதற்கு பூர்வமுள்ள ஞானிகள் வைத்தது தேவாலயங்கள். கடவுள் ஒருவர்தான், தேவாலயமும் ஒன்றுதான். கடவுளை தெரிந்து கொள்ள முறைகள் மட்டும் இரண்டு விதமாக இருக்கும். கடவுளை நிராகாரமாக மற்றும் சாகாரமாக தெரிந்து கொள்வது இரண்டு விதங்கள். நிராகாரத்தை தெரிவிப்பதற்கு நிர்மித்த தேவாலயங்கள் மூக்கு முகம் இல்லாத ஈஸ்வர லிங்க தேவாலயம். பூமி மீது தேவாலய சம்பிரதாயம் லிங்கத்திலிருந்து ஆரம்பித்தது. நிராகார, சாகார உருவத்தில் நிராகாரமானது லிங்கம் சாகாரமான ஆலயம் உருவமுள்ள பிரதிமையில் முதலானது. பூமி மீது இரண்டாவது தேவாலயம் சங்கு, சக்கரம் கொண்ட நெற்றி மீது நாமம் இருக்கின்ற பிரதிமை உள்ள ஆலயம். பூர்வம் உலகத்திலேயே தேவாலயங்கள் இரண்டு ரகம் மட்டும் இருந்தது. ஆயிரம், லட்சம் வருடங்கள் காலம் கடந்துக் கொண்டுயிருக்கும் போது எத்தனையோ கணக்கில்லாத தேவாலயங்கள் சிருஷ்டிக்கப்பட்டது.

கடவுளை பற்றி தெரிவிப்பதற்கு நிராகார, சாகார நடைமுறையில் முதலில் இரண்டே இரண்டு தேவாலயங்கள் பூர்வம் ஞானிகள் தயார் செய்து வைத்தபோது இன்று காலத்திற்கு நூற்றுக்கணக்கானது தயாரானது என்று சொல்லலாம். பூர்வம் நிர்மித்த லிங்கம், மற்றும் பிரதிமை ஆலயங்கள் தெய்வத்தை தெரிவிக்கும் அர்த்தத்தில் கூடி

இருக்கும்போது பிறகு தயாரானது அர்த்தமாகாமல் போனது. பூர்வம் தேவாலயங்கள் சம்பிரதாயமாக நிர்திஷ்டமாக இப்படியே கட்ட வேண்டும் என்று கட்டுவார்கள். இப்போது அப்படிப்பட்ட நிர்திஷ்டத்தை யாரும் பின்பற்றவில்லை. யார் இஷ்டம் பிரகாரம் அவர்கள் கட்டுகின்றார்கள். இறுதிக்கு சிறிய கூடு கட்டி அதற்குள் சிறிய பலகை கல் வைத்து அது ஒரு தேவாலயமாகி போகின்றது. இந்த விதமாக பல விதமான தேவாலயங்கள் தயாராகி மனிதர்களில் பூர்வ காலத்திற்கும் இப்போதும் பக்தி எந்த விதமாக இருக்கின்றதோ ஆலோசனை செய்து பார்க்கலாம்.

பூமி மீது தேவாலயங்கள் எல்லாம் ஒரு பாகமாக இருக்கும்போது, அவற்றின் இடத்திற்கு போகும் பக்தர்கள் எல்லோரும் ஒரு பாகமாக இருக்கின்றார்கள். பக்தர்களில் நான்கு ரகமான பக்தர்கள் இருக்கிறார் என்னும் கீதாவில் சொல்லியது போல் அவரவர்கள் பக்தியை பொறுத்து பக்தர்களை பிரித்து சொல்லலாம். **1.ஆர்த்துலு 2.அர்த்தார்துலு 3.ஜிக்னாசிலு 4.ஞானிகளை** பக்தர்களாக சொல்லலாம். இந்த காலத்தில் ஆர்த்துலு, அர்த்தார்துலு அதிகமாக இருக்கின்றார்கள். ஜிக்னாசிலு, ஞானிகள் பேருக்கு மட்டும் இருக்கின்றார்கள். ஆர்த்துலு என்றால் ஆபத்தில் மட்டும் கும்பிடுவார்கள். அத்தார்துலு என்றால் பணத்திற்காக கும்பிடுவார்கள். தற்போது காலத்தில் ஆபத்துக்கு கும்பிடுவது பணத்திற்காக வேண்டுவதற்கு மட்டும் தேவாலயங்களில் வேண்டுவது நடக்கின்றது. வரும் ஆபத்தை தீர்ப்பதற்கு செய்கின்ற வியாபாரத்தை லாபமாக செய்து பணக்காரர்களாக செய்வதற்கு தானே! கோயிலில் கடவுள் இருக்கின்றார் என்ற எண்ணத்தில் எல்லோரும் இருக்கின்றார்கள். தேவாலயங்கள் என்றால் கடவுளுடன் கோரிக்கை சொல்லிக் கொள்ளும் மையம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். கோரிக்கைகள் இருந்தால் தானே! கோயிலுக்கு போக வேண்டியது, கோரிக்கைகள் இல்லாமல் போனால் கோவில்களில் என்ன வேலை, அதில் உள்ள கடவுளுடன் என்ன வேலை என்று சொல்கின்றார்கள். அப்படிப்பட்ட எண்ணத்தில் பணியாளர்கள் அவர்கள் பிரமோஷன்காக, வேலையில்லாதவர்கள் வேலைக்காக, மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு, இளைஞர் இளம் பெண்ணுக்காக, போலீஸ்கள் லஞ்சத்திற்காக, திருடன் திருட்டு வேலை சுலபமாக நடப்பதற்கு கோயிலில் உள்ள தேவதைகளை

கும்பிடுகின்றார்கள். கடவுள் அவரவர் வேலை செய்து வைக்கும் நிலை உள்ளவர் என்னும், எந்த கடவுளுக்காவது நைவேத்தியம் இருக்க வேண்டும் என்பது போல், எந்த காரியத்திற்கும் சிறிது பணம் லஞ்சம் கொடுப்பது போல் கடவுளுக்கு கூட காணிக்கை என்ற பெயரில் சில காணிக்கை வடிவத்தில் லஞ்சத்தை கொடுத்து அவர்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பவர்கள் பல பேர் இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பக்தர்களை கோயிலில் உள்ள கடவுள்களை கூட ஊழல் செய்கின்றவர்களாக செய்கின்றார்கள். அவர்கள் வீட்டில் உள்ள சிறிய குழந்தைகளுக்கு கூட கடவுளிடம் இது கொடுக்க வேண்டும் என்று கும்பிடு, அது வேண்டும் என்று கும்பிட பழகிக் கொடுக்கின்றார்கள். கோரிக்கை இல்லாத சிறிய குழந்தைகளுக்கு அது வேண்டும் இது வேண்டும் கடவுளை கும்பிட்டு கேள் என்று பழகிக் கொடுக்கின்றார்கள். இந்த விதமாக தேவாலயங்கள் இடத்தில் கோரிக்கைகள் பக்தி மிக உயர்ந்த இடத்திற்கு சேர்ந்து போனது. தற்போது இந்த காலத்தில் கடவுள் என்றால் என்ன? தேவாலயங்கள் என்றால் என்ன? இந்த விஷயம் சாஸ்திரம் முறையாக, பகுத்தறிவு பிரகாரம் தெரிவிப்பதற்காக இந்த **"தேவாலய ரகசியங்கள்"** இந்த கிரந்தம் எங்களால் தயார் செய்யப்பட்டது. பூர்வம் முதலாவதான ஈஸ்வரலிங்கம், இரண்டாவதான சங்கு, சக்கரம், நாமம் உள்ள பிரதிமை எந்த நோக்கத்தில் வைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை வழக்கம் போல் தெரிவிக்க சிறிய முயற்சியே இந்த கிரந்தத்தில் உள்ள உள் நோக்கம். தேவாலயங்கள் நிர்மாணத்தில் உள்ள கோபுரம், கொடிமரம், மணி, பிரதிமை, பிரதிமை காட்டும் அஸ்தம், சங்கு, சக்கரம் நெற்றி மீது உள்ள நாமம் எல்லாத்தையும் பற்றி தெரிவித்து மனிதன் ஆராதிக்க வேண்டிய ஆராதனையின் அர்த்தங்களைப் பற்றி சொல்வது இந்த கிரந்தத்தில் எங்களுடைய முக்கிய நோக்கம். உண்மை வெறுப்புடன் சேர்ந்து கூடி இருக்கும் என்னும் பெரியோர்கள் சொல்லியது போல் சிலருக்கு எங்களுடைய வார்த்தை பிடிக்காமல் போகலாம். நடுவில் வந்த முறைகள் அவர்களுக்கு பிடித்து அதுவே சத்தியம் என்று நினைத்துக் கொள்ளலாம். அந்த முறையில் ஒரு புத்தகத்தை எழுதிக் கொண்டு சில பலான புத்தகங்களில் இருக்கிறது என்னும் அர்த்தம் இல்லாத முறைகளை சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். உதாரணத்திற்கு மாட்டு நெய்னால்

வத்திகள் ஆரத்தி கொடுக்க வேண்டும் என்னும் மாட்டு நெய் புனிதமானது என்று எழுதிக் கொண்டார்கள். நாங்கள் சொல்லிய கற்பூர ஆரத்திக்கு எதிர்ப்பாக சொல்லிக் கொண்டார்கள். ஆரத்தி என்றால் முடிந்து போனது என்று அர்த்தம் கற்பூரம் ஆரத்தியில் கற்பூரம் முடிந்து விடுகின்றது. மற்றும் ஆரத்தி என்பது கற்பூரத்திற்கே சேரும் மேலும் பஞ்சு வத்திக்கு மாட்டு நெய்க்கு எப்படி பொருத்தமாகும். இது தர்மமா அதர்மமா நினைக்காமல் புத்தகங்கள் எல்லாவற்றையும் சாஸ்திரங்கள் என்று நினைத்துக் கொண்டு பலான சாஸ்திரங்களில் சொல்லினார்கள் என்பது சரியானதா? யார் எத்தனை சொல்லிக் கொண்டாலும் உண்மை ஆகாத விஷயங்களை விட்டு விடுவது நம்முடைய கடமையாக வைத்துக் கொள்ள வேண்டும். அதனால் நாங்கள் எத்தனையோ பேர் முறையை செய்து கொண்டு இருக்கும் போது தப்பு முறைகளை கண்டித்து உண்மையான விஷயங்களை விவரித்து கொண்டு போனோம். எருது பெற்றெடுத்தது தூணில் கட்டினோம் என்றால் அது எவ்வளவு பெரியவர்கள் சொல்லினாலும் குருட்டுத்தனமாக நம்பாமல் விமர்சித்து எருது பெற்றெடுக்காது என்னும் நிரூபித்து பெற்றெடுப்பது மாடு மட்டும் தான் என்று சொல்ல வேண்டும். அதன் போலவே நமக்கு தெரிந்தது தான் ஞானம் என்னும் நினைப்பவர்களை கண்டித்து உங்களுக்கு தெரியாததும் கூட இருக்கிறது என்று விவரித்துக் கொண்டு போவது நடந்தது. மாய குருவினால் எங்களுக்கு சிறிது இடைஞ்சலாக இருந்தாலும் சத்தியத்தை சொல்லுவது தவறு இல்லை என்பதால் நீங்கள் செய்கின்ற பூஜையில் அர்த்தமில்லை என்னும் பிரதிமையை உண்மையான எண்ணத்தில் பார்க்கவில்லை என்று தெரிவித்தோம். ஒரு விஷயம் தெரியாத போது ரகசியம் ஆகும் என்னும் இப்போது தேவாலயங்கள் விஷயம் தெரியாமல் போனதினால் அது ரகசியமானது என்பதால் அந்த விஷயத்தை எல்லாம் இணைத்து **“தேவாலயரகசியம்”** என்று பெயர் வைத்தோம். ஒவ்வொரு விஷயத்திற்கும் விவரங்களை கொடுத்து ரகசியங்கள் எல்லாவற்றையும் சாத்தியமாகும் வரை விவரித்து சொல்லினோம். நீங்கள் சொல்லியது எங்கள் ஆகம சாஸ்திரத்தில் இல்லை. நாங்கள் நம்ப மாட்டோம் என்பவர்கள் கூட இருக்கின்றார்கள். நாங்கள் எல்லோரும் நம்புங்கள் என்று எங்கும் சொல்லவில்லை. உங்களுக்கு எது உண்மை என்று

தெரிந்தால் அதனை மட்டும் நம்புங்கள். சொல்வது வரை எங்களுடைய கடமை. அதனால் சொல்லினோம்.

**இப்படிக்கு**

**மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு, த்ரைத்த சித்தாந்த**

**ஆதிகர்த்தா**

***ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்.***

## 1. தேவாலய ரகசியங்கள்

தேவாலயங்கள் என்றால் கடவுள் நிவாசிக்கும் இடம் என்று எல்லோருக்கும் அர்த்தமாகும். தேவாலயங்களில் கடவுளின் பிரதிமை உள்ளது. பெரிய, சிறிய வண்ணம் உருவமாக இருக்கின்ற பிரதிமையை நம் எல்லோரும் கடவுளாக நம்பி பூஜை செய்து நமஸ்கரிக்கின்றோம். பிரம்ம வித்யா சாஸ்திரத்தில் எல்லாரில் வியாபித்தவர் கடவுள், அனைத்திலும் இருப்பவர் கடவுள். தேகத்துக்குள் அசைவு சக்தி கொடுக்கின்ற ஆத்மா கடவுளாக இருக்கும்போது, நான்கு சுவர் நடுவில் இருக்கின்ற பிரதிமை கடவுளா? என்ற சந்தேகம் வராமல் இருக்காது. கண்ணுக்கு தெரிகின்ற உருவம் இல்லாதவர் கடவுள் என்னும் சாஸ்திரவசனம் இருக்கும்போது, கண்ணுக்கு தெளிவாக தெரியும் பிரதிமை கடவுளா என்று சந்தேகம் வராமல் இருக்காது.

தேவாலயங்கள் பூர்வ காலத்தில் நிர்மிக்கப்பட்டது ஆனால் அந்த நாள் உள்ள பிரம்ம ஞானம் தெரிந்தவர்கள் (கடவுளைப் பற்றி தெரிந்தவர்கள்) எதற்கு தேவாலயங்கள் நிர்மிக்கப்பட்டது? கடவுளுக்கு உருவம் இல்லை என்னும் சொல்லியவர்கள் உருவமாக நிர்மிக்கும் காரணம் என்ன? சர்வ உலகத்திற்கு சர்வ ஜீவ ராசிகளுக்கு அதிபதி (கடவுள்) ஒருவர் தான் என்னும் தெரிந்தவர்கள் வெவ்வேறு தேவாலயங்களை சிருஷ்டித்து அதில் விபூதி ரேகைகள்

உள்ள கடவுள் என்னும், நாமம் கொண்ட கடவுள் என்னும் பிரித்து காட்டுவது எதற்கு? கடவுள் நிர்குணர், நிராகாரர் ஆகும்போது சாகார பிரதிமைகள் எதற்கு? சகுணோபாசனம் எதற்கு? இந்த விதமாக மனிதன் புத்திக்கு எத்தனையோ கேள்விகள் வரும்போது அவற்றுக்கு சரியான பதில்கள் கிடைக்கவில்லை. பதில் கிடைக்காத போது மனிதன் நாத்திகர்களாக மாறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. பல பேர் ஞானம் என்பது சிறிதளவு கூட தெரியாத நிலையில் இருந்து ஒருவர் எந்த விதமாக செய்து கொண்டிருந்தால் அதே விதமாக மற்றவரும் செய்து கொண்டு போகின்றார்கள். அதனால் நிராகார சாகார வித்தியாசங்கள் தெரியாதவர்கள் எதனையும் விவரித்துக் கொள்வதற்கு சக்தி இல்லாமல் அவர்கள் செய்கின்றது பூஜை என்றும், அவர்கள் கும்பிடுபவரை கடவுள் என்றும், கோரிக்கைகள் வேண்டுவது அவர்களின் முறை என்றும், நிறைவேற்றுவது கடவுளுடைய வேலை என்றும், அதற்காகவே தேவாலயங்கள் நிர்ணயிக்கப்பட்டது என்றும், அதில் ஒவ்வொரு தேவாலயங்களில் கடவுள் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றுவார், அதனால் அந்தந்த கடவுளுக்கு அதிகமாக காணிக்கைகள் பூஜைகள் நடக்கின்றது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். யார் என்ன நினைத்துக் கொண்டாலும் சத்தியமானது நித்தியமானது சாஸ்திரம். சாசனங்களில் கூடியுள்ளது சாஸ்திரமாகும் போது, சித்தாந்த பரமானது சாஸ்திரமாகும் போது, அனுபவம் கொண்டது சாஸ்திரமாகும் போது, சாஸ்திரம் அனுசாரம் கடவுள் எல்லோரிலும் இருக்கின்றவர், சாஸ்திரம் அனுசாரம் கடவுள் தெரியாதவர், அப்படியானால் நமக்கு தெரிகின்ற தேவாலயங்கள் அர்த்தமற்றதா? எவ்வளவோ சிரமம் பட்டு, தனத்தால் நிர்ணயிக்கப்பட்ட தேவாலயங்கள் எதற்கு பிரம்ம வெத்தர்கள் புத்தியால் நிர்ணயிக்கப்பட்டார்களா? பழமையாக உள்ள தேவாலயங்களுக்கு அர்த்தமே இல்லையா?.......... உள்ளது. பழமையாக உள்ள தேவாலயங்களுக்கு அர்த்தம் சம்பூர்ணமாக உள்ளது. ஆனால் இப்போது காலத்தில் அது தெரியாமல் போனது. பூர்வம் கடவுளை தெரிந்தவர்கள் பெரிய புத்தியை உபயோகித்து செய்த வேலை தேவாலயங்கள். இருந்தாலும் சிறிது காலத்திற்கு அவற்றின் அர்த்தங்கள் தெரியாமல் போனது. அது சகஜமாக மாயாவின் வேலை. “பகவத் கீதா ஞான யோகம் என்னும் அத்தியாயத்தில்”

**1.சுலோகம்:- இமாம் விவசாயத்தே யோகம் புரோக்த வானஹு மவ்வியயம் விவசுவான் மானவே பிரஹு மனோரிக்சகவே பிராவீத்**

**2.சுலோகம்:- ஏவம் பரம்பரா பிராப்த்த மிமம் ராஜர்ஷயோ ரிதும்**
**சகாலே நேஹா மஹாத்தா யோகோ நஷ்டக பரந்தபா!**

“நாசனம் இல்லாத இந்த வித்தையை முதலில் சூரியனுக்கு சொல்லி இருந்தேன் அவர் அது மனுவுக்கு சொல்லினார். மனு இச்சுவாகன் என்ற ராஜாவுக்கு சொல்லினார். இது இப்படியே ஒருவரிலிருந்து ஒருவருக்கு தெரிந்து கொண்டு போய் எல்லோருக்கும் தெரிந்ததாக இருந்தது. பல காலங்கள் கடந்து கொண்டு போய் இந்த காலத்திற்கு அந்த விஷயம் தெரியாமல் போனது.” என்று கடவுள் கூறியது போல் பூர்வ காலத்தில் இருந்தது அது தெரியாமல் போனது சகஜம்தான். அதனால் தர்மங்கள் அதர்மங்களாக மாறுகின்றது, அர்த்தம் அனர்த்தம் ஆகின்றது. தர்மங்கள் அதர்மங்களாக மாறியபோது அதை மறுபடியும் தர்மங்களாக மாற்றுவதும் கடமை. அர்த்தங்கள் அபார்தமாக மாறிய போது விவரித்து அர்த்தம் சொல்லுவதும் கடமை. அதர்மங்கள் தர்மங்களாக மாற்றுவது பகவானுடைய வேலை ஆகும் போது அனர்த்தங்களாக இருக்கின்ற அவற்றுக்கு அர்த்தங்கள் சொல்லிக் கொள்ளுவது நம்முடைய கடமை. பகவத்கீதா பக்தியோகம் என்னும் அத்தியாயத்தில் 10ஆவது சுலோகத்தில் “மத்கர்ம பரமோபவ, மதர்த மபி கர்மாணி குர்வான் சித்தி மாவாப்ஸ்யசி”. எனக்காக வேலை செய். என்னுடைய வேலை செய்வதினால் உனக்கு என் சன்னிதானம் (மோக்ஷம்) கிடைக்கும் என்று பகவான் கூறினார். விஷ்வ வியாப்தியான பரமாத்மா, சர்வ ஜீவிகளுக்கு அதிபதியான பரமாத்மா அதே வேலையாக மனித அவதாரத்தில் வந்து தர்மங்கள் இது என்னும் தெரியப்படுத்தும் போது மனிதர்களில் நான் ஒரு மனிதனாக பிரபோதானந்தாவாக குரு பிரசாதம் அடைந்த நான் மாறிப்போன அர்த்தங்கள் மறுபடியும் விவரிப்பது என்னுடைய கடமை என்று நினைத்தேன். ஞானம் பிரபோதமே என்னுடைய கொள்கையாகும் போது தேவாலய ரகசியங்கள் விவரிப்பது என்னுடைய கொள்கையில் ஒரு பாகம் தான்.

கடவுள் யார் என்பது எல்லாவற்றை விட பெரிய கேள்வி மற்றும் பதில் இல்லாத கேள்வி என்று சொல்லலாம். எதற்கு என்றால் கடவுள் என்னும் சொல்லின் அர்த்தம் தேடப்படுபவர் என்று உள்ளது. கடவுள் தேடப்படுபவர் தான் கிடைப்பவர் அல்ல. கடவுளுடைய விஷயம் கடவுளுக்கே தெரியும் ஆனதினால் கடவுளே பூமி மீது பிறந்து தன்னை அடைவதற்கு தேவைப்படும் விவரம் தெரியப்படுத்துவார். அந்த விவரத்தை தெய்வ ஞானம் என்று சொல்கின்றோம். ஹைதராபாத் நகரத்தை சேர வேண்டும் என்றால் அதற்கு ஒரு வழி இருக்கும் மற்றும் அந்த வழியில் கம்யம் சேர வேண்டிய தூரம், மார்க்கம், மார்க்கங்களில் உள்ள வளைவுகள், தடங்கலாக இருக்கின்ற நதிகள் ஏரிகள், ஏற்றாழ்வு பள்ளங்கள், ஆபத்து நடக்கின்ற இடங்கள் குறிக்கின்ற குறிப்புகள் எத்தனையோ இருக்கும். இவற்றை எல்லாம் தெரிந்து அவற்றை தாண்டி போகும்போது ஹைதராபாத் கம்யம் சேரலாம். அந்த விதமாக கடவுளிடம் சேர்வதற்கு, முக்தி என்னும் கம்யத்தை சேருவதற்கு எத்தனையோ குறிப்புகள் இருக்கும். அதுதான் ஞான குறிப்புகள் என்று சொல்ல வேண்டும். கம்யத்தை சேர்வதற்கு வழியில் எத்தனையோ குறிப்புகள் இருப்பது போல் கடவுளை சேர்வதற்கு தேவாலயங்களில் எத்தனையோ குறிப்புகள் வைத்து கடவுள் பகவான் உருவத்தில் வந்து தேவாலயங்கள் நிர்மாணம் செய்தார் என்று சொல்லலாம். குர்தாயுகத்தில் கடவுள் எந்த பெயரில் வந்தாரோ, எந்த உருவத்தில் வந்தாரோ நமக்குத் தெரியாது. மேலும் ஞானம் தெரிந்த பெரியோர்கள் நிர்மாணித்த தேவாலயங்கள் என்று சொல்லினோம்.

தேவாலயங்கள் கடவுளுடைய விஷயங்கள் தெரிவிக்கும் குறிப்பு மையமாக, ஆலயங்களில் உள்ள ஒவ்வொரு கட்டிடங்கள் ஒவ்வொரு முனையும் பரமாத்மா இந்த விதமாக இருக்கிறார் என்று தெரிவிக்கும் விதானமாக இருக்கின்றது. தேவாலயங்கள் மனிதனுக்கு கடவுளுடைய விஷயம் தெரிவிப்பதற்காக இருக்கின்றதால், அதில் உள்ள ஆராதனைகள் மனிதன் கடவுளுக்காக இருக்கின்ற நோக்கம் தெரிவிப்பதாக உள்ளது. மனிதன் தனக்குள்ள விசுவாசத்தை, தனக்குள்ள நோக்கத்தை காரிய உருவமாக வெளியில் தெரிவிப்பதற்காக ஆலயங்களில் ஆராதனை வடிவமாக ஏற்படுத்தப்பட்டது. காணாத கடவுளுடைய விஷயத்தை பற்றி

தெரிகின்ற அடையாளமாக மற்றும் மனிதனுக்கு கடவுளுக்கு செய்தி பாலம் போன்றது தேவாலயங்கள், தன்னுடைய எண்ணத்தை வெளிப்படுத்தி காரியங்களாக ஆராதனைகள் இருப்பது குர்தாயுகத்தில் பெரியோர்கள் ஏற்படுத்தி வைத்த விதானமாக இருக்கிறது. தெய்வமே மனிதன் உருவத்தில் வந்து தேவாலயங்கள் நிர்மானம் அதில் உள்ள ஆராதனை விதானங்கள் ஏற்படுத்தினார் என்று சொல்லலாம்.

அந்த நாள் எந்த நோக்கத்தை தேவாலயங்கள் தெரிவிக்கின்றதோ, எந்த நோக்கத்தில் ஆலயங்களில் பூஜை விதானங்கள் தெரிவிக்கின்றதோ அது இன்று யாருக்கும் தெரியாமல் போனது. குர்தாயுகத்தில் ஆரம்பமாகிய விதானங்கள் ரகசியமாகி, சிலர் அவரவர் சுயநலத்திற்காக பூர்வமுள்ள விதானத்திற்கு சிறிதளவு கூட சம்பந்தமில்லாத விதிகளை எழுதிக் கொண்டு, பகுத்தறிவு இல்லாத விஷயங்கள், சிறிதளவு கூட சாஸ்திரம் இல்லாத விஷயங்கள் சாஸ்திரம் என்னும் பெயர் வைத்து, இவை ரிஷிகள் சொல்லியது என்னும் வேதங்களில் உள்ள விஷயங்கள் என்று சொல்கின்றார்கள். இந்த விதமாக சில மனிதர்கள் உருவாக்கிய சாஸ்திரமல்லாதது ஆகம சாஸ்திரம் பகவான் குர்தாயுகத்தில் தெரிவித்த விஷயங்களுக்கு எதிர்ப்பாக பரமாத்மா விஷயங்கள் குறைவாக செய்த மாயா சாஸ்திரமாக உள்ளது.

இப்போது யார் என்ன சொல்லினாலும், மனிதன் தனக்குள்ள அஞ்ஞானத்தில் தேவாலயங்களில் கூட தெரிவித்த சைவம், வைஷ்ணவம் என்னும் வேறுபாடுகள் செய்யப்பட்டாலும், பூர்வம் முதலில் பகவத் புரோக்தமான விஷயங்கள் இன்றும் ரகசியமாக தெரியாமல் போனாலும் மறுபடியும் தன்னுடைய தர்மங்கள் நிலை மேலொங்க வேண்டும் என்று பகவான் கூறியது போல் அது வெளியில் வராமல் இருக்காது. அந்த ரகசியங்கள் இப்போது “தேவாலய ரகசியங்கள்” என்னும் புத்தக வடிவத்தில் வெளியில் வந்து ஆகம சாஸ்திரத்திற்கு பெரிய சவாலாக நின்று இருக்கின்றது. இதில் உள்ள ஆலயம் விவரங்கள் தெய்வ ஞானத்தை போதித்து ஆராதனை விவரங்கள் மனிதனுடைய விசுவாசங்களை தெரிவிக்கின்றது. தெய்வ ஞானம் போதிக்காத ஆலயங்கள், பக்தியை தெரிவிக்காத ஆராதனைகளும் வீணானது என்றும், இது சாஸ்திரம் முறை

அல்லாதது என்று தெரிவிக்கும் ஞான வடிவமே **தேவாலய ரகசியங்கள்.**

இன்று மனிதர்கள் பக்தி என்னும் பெயர் வைத்துக்கொண்டு அஞ்ஞானம் மார்க்கத்திற்கு தடையாக நிற்ப்பது இந்த சிறிய புத்தகத்தில் உள்ள எண்ணம். தேவாலயங்களில் கோரிக்கைக்காக நம்முடைய விஞ்ஞானம் அல்லவென்று பதில் அளிப்பதே இந்த புத்தகத்தின் நோக்கம். சிலர் தவறாக ஞான மார்க்கம் என்னும் நினைத்துக் கொண்டு அஞ்ஞான மார்க்கத்திலிருந்தவர்களை திசை திருப்பி தூய்மையான ஞான மார்க்கத்தை தெரிவிப்பதே இந்த புத்தகம் எழுத்தாளருடைய நோக்கம்.

ஆதியில் ஆத்ம ஞானம் தெரிந்தவர்கள் எதுவும் தெரியாத மனிதர்களுக்கு ஆத்ம விஷயங்கள் தெரிவிப்பதற்கு, அஞ்ஞானம் இருட்டில் இருக்கின்றவர்களுக்கு பரமாத்மா விஷயம் தெரிவிப்பதற்காக எந்த உருவம் எந்த பெயரும் இல்லாமல் இருக்கின்றவர் பற்றி தெரிவிப்பதற்காக, ஆத்மஞானத்தை அணுஅணுவில் வைத்து நிர்மித்தது தேவாலயங்கள். தேவாலயங்கள் வெளியில் எப்படி தெரிந்தாலும் அவற்றில் ஆத்மா பிரபோதமே இருக்கின்றது. உருவத்தை காட்டி உருவம் இல்லாத வரை அர்த்தம் ஆகும்படி செய்வது தேவாலயங்கள். நான்கு சுவற்று நடுவில் இருக்கின்ற பிரதிமையை காட்டி எல்லையில்லாத பரமாத்மா விஷயங்கள் தெரிவிக்கப்பட்டது தேவாலயங்கள். எவ்வளவோ ஞானமுள்ள யோகிகள் யோசனை செய்து நிரந்தரமாக பரமாத்மா அர்த்ததில் இணைந்து நிர்மிக்கப்பட்ட நிர்மாணங்களே தேவாலயங்கள்.

பூர்வ காலத்திலுள்ள மனிதர்கள் எல்லோருக்கும் ஆத்ம ஞானம் இருந்தது. காலம் கடந்து கொண்டிருக்கும்போது மனிதர்களில் ஞானம் இல்லாமல் அஞ்ஞானம் வளர்ந்து கொண்டு வந்தது. அப்படிப்பட்ட நேரத்தில் ஞான சக்தி உள்ள பிரம்ம ரிஷிகள் யோசனை செய்து சிறிது காலத்திற்கு ஆத்மா ஞானம் இல்லாமல் போகும் என்னும் நினைத்து, அப்படிப்பட்ட நிலை வராமல் இருப்பதற்கு எந்த விதானம் சரியாக இருக்குமோ மிகப்பெரியதாக யோசனை செய்து இறுதிக்கு தேவாலயங்கள் கட்டப்பட்டது. தேவாலயங்கள் நிர்மாணத்தில் எவ்வளவோ

புத்தியை உபயோகித்து ஒவ்வொன்றும் ஆத்ம ஞானம் அர்த்தத்தில் இருக்கும் படி நிர்மாணம் செய்தார்கள். அந்த விதமாக நிர்ணயிக்கப்பட்ட நிர்மாணங்கள் முதன் முதலில் தேவாலயம் லிங்க பிரதிஷ்டத்தில் ஆரம்பமானது.

## 2. லிங்க பிரதிஷ்டா

உலகமே இல்லாத நேரத்தில் இருந்தது ஒரு பரமாத்மா மட்டும் தான். அந்த நிலையில் இருந்து சில காலத்திற்கு உலகம் உற்பத்தியானது. உலகம் உற்பத்திக்கு ஒரே ஒரு சக்தி காரணம், அது பரமாத்மாவே. பரமாத்மாவில் இருந்து உருவானது உலகம். உலகம் என்றால்! பிர என்றால் பிறப்பது, பஞ்சங்கள் என்றால் ஐந்து. உலகம் என்றால்! பிறந்தது 1.ஆகாசம், 2.காற்று, 3.அக்னி, 4.நீர், 5.பூமி என்று அர்த்தம். இந்த ஐந்து பாகங்கள் இணைத்து பிரக்ருதி என்பது கூட நடந்தது. பிரக்ருதி என்றால் பிரபஞ்சம் என்றால் ஒன்றுதான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். பிரக்ருதியின் ஐந்து பாகங்களில் இருந்து எத்தனையோ ஜீவராசிகள் உருவானது. ஜீவராசிகள் ஜீவித்து மரணிப்பதற்கு தகுந்த பொறிமுறை எல்லாம் பிரக்ருதியில் இருந்து ஏற்பட்டது. பிரக்ருதியால் தயாரனது தேகம், பிரக்ருதியினால் உருவானது குணங்கள். சமஸ்த ஜீவராசியின் தேகங்கள் பிரக்ருதியில் பிறந்து, பிரக்ருதியில் வளர்ந்து பிரக்ருதிலேயே அழிகின்றது. மறுபடியும் பிரக்ருதிலேயே பிறக்கின்றது.

ஜீவராசிகள் பிறக்க வைப்பதற்கு பிரக்ருதிக்கு சுயம் சக்தி இருக்கின்றதா? இந்த விதமாக யோசனை செய்யும் போது பிரக்ருதிக்கு அந்த சக்தி இல்லை என்று தெரிகின்றது. பிரக்ருதியினால் நடக்கின்ற எல்லா காரியங்களுக்கு ஒரு சக்தி தேவை. அதுவே பரமாத்மா சக்தி. பகவத்கீதாவில் ராஜவித்யா ராஜகுஹ்யா யோகம் என்னும் அத்தியாயத்தில்

**சுலோகம்:-10 மாயா தக்ஷேனா பிரக்ருதி சூயதே சராசரம்,**
**ஹேத்து நானேன கௌந்தையா! ஜெகத்வி பரிவர்த்ததே**

“பிரக்ருதி என் ஆதாரத்தினால் ஜீவ ராசிகள் பிறக்கும்படி இறந்து போகும் படி செய்கின்றது”. அதனால் நான் மூலமாக இருக்கிறேன். என்னை ஆதாரம் செய்து கொண்டு உலகம் சக்கரம் போல் சுற்றுகின்றது என்று பரமாத்மா கூறினார்.

பிரம்ம வித்யா ஆரம்பத்தில் நாம் யார்? நம் பிறப்பு என்ன? அதன் போலவே மரணம் என்ன? இறப்பு, பிறப்புக்கு காரணம் யார்? எந்த சக்தியினால் இது எல்லாம் நடக்கின்றது என்று தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி விவரித்து கொண்டால் பிரக்ருதியில் நம் தேகம் தயாராகின்றது என்னும், தயாரான தேகத்தில் ஆத்மா சைதன்ய சொரூபமாக அசைவு கொடுக்கின்றது என்னும், அதனால் தேகத்தை தயார் செய்து ஒரு வடிவத்தை கொடுக்கின்றது பிரக்ருதி என்று தெரிகின்றது. மேலும் அதனை அனைத்து ஜீவிகளுக்கு தாயாக சொல்கின்றோம். அசையாத தேகத்திற்கு அசைகின்ற சக்தியை கொடுத்து அசையவைக்கின்ற ஜீவ சொரூபம் ஏற்படுத்துகின்றது பரமாத்மா சக்தி மற்றும் பரமாத்மாவை அனைத்து ஜீவராசிகளுக்கு தந்தையாக சொல்கின்றோம். சர்வ பிரபஞ்சத்தில் ஜீவராசிகளுக்கு தாய் பிரக்ருதி, தந்தை பரமாத்மா என்னும் பிரம்மவித்தையில் பிரதான அம்சமாக தெரிந்து கொள்ள வேண்டும். மூலமான பரமாத்மா சக்தியிலிருந்து வெளியே வந்து பிரக்ருதி ஆதாரத்தினால் தேகத்தை அணிந்து பிறந்து இறந்து இருக்கின்ற விஷயம் முதன் முதலில் எல்லோருக்கும் தெரிய வேண்டிய ஞானம்.

இந்த விஷயம் தெரிவிப்பதற்காக தாய் தந்தையின் மீது கருணை இல்லாத புத்திரன் பிறந்தால் என்ன இறந்தால் என்ன புற்றுக்குள் செதில்கள் பிறக்காதா இறக்காதா என்று வேமன யோகி கூறினார். என்றால் பரமாத்மா பிரக்ருதியைப் பற்றி தெரியாதவன் பிறந்து இருந்தாலும் பிறக்காதவனுக்கு சமமானவன். யாருக்கும் தெரியாமலே புற்றுகுள் செதில்கள் பிறந்தது இறந்தது போல் நம்முடைய ஜென்மம் கூட வீண்தான் என்று அவருடைய எண்ணம். அதனால் ஒவ்வொரு ஜீவன் உண்மையான தாய் தந்தை யாரோ தெரிந்து கொள்ள வேண்டும். அனைத்து ஜீவராசிகளுக்கு உண்மையான தாய் தந்தை தெரிந்துகொண்டு பகவத்கீதாவில் குணத்திரைய விபாக யோகம் என்னும் அத்தியாயத்தில்

**சுலோகம்:-3 மம யோநிர்மஹ பிரம்மா தஸ்மின் கர்ப்பம் ததாமியஹம்,**
**சத்பவ சர்வபூதானாம் ததோபவதி பாரதா!**

**சுலோகம்:-4 சர்வ யோனிஸ்சு கௌந்தேய!**
**மூர்தயஹ சம்பவந்தியஹ**
**தாசாம் பிரம்மா மஹதோனி ரஹம் பீஜ பிரதஹ பிதா!**

**கருத்து:-**"பிரக்ருதி எல்லாம் எனக்கு ஸ்ரீயாக (பெண்ணாக) உள்ளது. அதற்கு நான் பீஜ தாத்தனாக இருக்கிறேன். அதனால் சமஸ்த்த ஜீவராசிகள் எங்களுக்கு பிறக்கின்றது. எந்த கர்ப்பத்திலிருந்து எந்த வடிவத்திலும் பிறக்கின்ற எந்த ஜீவராசியும் என்றால் சமஸ்த்த ஜீவராசிகளுக்கு மாதா மூலம் பிரக்ருதி, பீஜ தாத்தனாக நான் தந்தை என்று தெரிந்து கொள்ள வேண்டும்". பூர்வ காலத்தில் சாஸ்திரம் பிரகாரம் தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாவை தெரிந்தவர்கள் இந்த விஷயம் மறந்து போகாமல் எல்லோரும் கிரகிக்கும் படி செய்த விதானம் லிங்க பிரதிஷ்டா. பரமாத்மாவுக்கு உருவம் இல்லை மேலும் மூக்கு முகம் இல்லாத ஒரு கல்லை வைத்து அதை கடவுள் என்பது முதல் நடந்தது. பரமாத்மா புருஷனாக புருசாங்கம் காரணமான லிங்கத்தை பிரதிஷ்டித்தார்கள். பிரக்ருதியை ஸ்ரீயாக அடையாளம் காணும் படி ஸ்ரீயோனி உருவமாக பாணி மட்டம் வடிவில் வடிவமைக்கப்பட்டது. **ஸ்ரீ அங்காகாரமான பாணி மட்டத்தை புருஷ அங்காகாரமான லிங்கத்தை பிரதிஷ்டித்து பிரக்ருதி புருஷர் இணைந்து இருக்கிறார் என்று அர்த்தம் வரும்படி செய்தார்கள். பாணி மட்டம் நடுவில் லிங்கத்தை வைப்பது பிரக்ருதிக்கு பரமாத்மாவுக்கு ஆதாரம் உள்ளது என்று தெரிகின்றது. பாணிமட்டம் மேல் லிங்கத்தை வைத்ததினால் பிரக்ருதிக்கு மேல் பரமாத்மா இருக்கிறார் என்று எண்ணத்தில் கூட தெரிகின்றது. லிங்கம் சிறிது பாணிமட்டம் உள்ளே, சிறிது பாணி மட்டம் வெளியில் தெரிவது பரமாத்மா பிரக்ருதி உள்ளே பிரக்ருதி வெளியிலும் இருக்கிறார் என்று விஷயம் தெரியப்படுகின்றது.** இந்த விதமாக பெரியோர்கள் அர்த்தம் இருக்கும்படி வைப்பது சுங்காரத்துக்காக அல்ல.

பிரக்ருதி புருஷர் ரகசியம் இது என்று தெரிவிப்பதற்காக தான் வேறு அல்ல. பிரக்ருதி புருஷர் இணைந்திருப்பதே ஜெகத்துக்கு மூல காரணம் என்பதை

தெரிவிப்பதற்கே இதில் உள்ள எண்ணம் தவிர வேறு அல்ல. அனைத்து ஜீவராசிகளுக்கு மாதா பிரக்ருதி பிதா பரமாத்மா என்று தெரிவிப்பதற்காகவே இந்த லிங்கப்பிரதிஷ்ட நடந்தது. அனைத்து ஜீவராசிகள் பரமாத்மா சக்தியினால் பிரக்ருதியில் இருந்து ஒரு வடிவத்தில் பிறக்கிறது என்னும் தெரியும்படி லிங்கம் மேல் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் தண்ணீரை ஊற்றி ஒவ்வொரு சொட்டு லிங்கம் மீது விழும்படி செய்தார்கள். லிங்கத்தின் மீது விழுந்த தண்ணீர் சொட்டு லிங்கத்திலிருந்து வழுக்கி பிரக்ருதியாக ஒப்பிட்ட பாணி மட்டத்தில் சேர்ந்து அங்கு இருந்து ஒரு மார்க்கத்தினால் வெளி வருகின்றது. இந்த விதமாக ஒவ்வொரு தண்ணீர் சொட்டு வழுக்கி போகின்றது. ஒவ்வொரு ஜீவ ராசி பிரக்ருதி புருஷரினால் ஜென்மிக்கின்றது என்பதற்கு சாட்சியாக லிங்கபிரதிஷ்டம் மீது தண்ணீர் சொட்டு சொட்டாக போவதற்கு ஒரு பாத்திரத்தை வைத்தார்கள். தண்ணீர் சொட்டுகளை ஜீவிகளாக ஒப்பிட்டு பரமாத்மா பிரக்ருதியினால் உற்பத்தியாகும் படி தண்ணீர் சொட்டுளை லிங்கத்திலிருந்து வழுக்கி பாணி மட்டத்திலிருந்து வெளியே போகும் படி செய்தார்கள். கீழ் உள்ள தண்ணீரை என்றால் ஏரி அல்லது குளம் கிணற்றில் இருந்தும் கொண்டு வந்து பாத்திரத்தில் ஊற்றி வைத்து எப்போதும் குறையாமல் லிங்கம் மீது தண்ணீர் சொட்டு விழுகும்படி செய்வதினால் குறையாமல் ஜீவிகள் இறப்பும் பிறப்பும் நடக்கின்றது என்று தெரிகின்றது. லிங்கத்திலிருந்து நீர் பாணிமட்டத்து வழியாக போவது சிருஷ்டி உள் அர்த்தமாக பெரியோர்கள் நிர்மித்தார்கள்.

இப்போது சொல்லப் போவது முக்கியமானது, அனைத்து ஜீவராசிகள் உள் அர்த்தம் இதில் ஈடுபட்டு உள்ளது. பரமாத்மா சொரூபம் மூன்று பாகங்களாக பிரிந்து பிரக்ருதி எல்லாம் வியாபித்து உள்ளது. அப்படியே வியாபித்த விதானம் இந்த விதமாக இருக்கின்றது என்று தெரியபடுத்துவது இதில் உள்ள சாரம்சம். பரமாத்மா பிரக்ருதியை விட தனியாக இருந்து மூன்று புருஷர்களாக வியாபித்து இருக்கிறார் என்பதற்கு சாட்சியாக ஈஸ்வர லிங்கம் மீது விபூதி ரேகைகள் மூன்றாக காட்டப்பட்டது. பகவத்கீதாவில் புருஷோத்தம பிராப்தி யோகம் என்னும் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட ஷர, அக்ஷர புருஷோத்தமர்கள் மூன்று புருஷர்களாக ஒரு புருஷனே பிரிந்து இருக்கிறார் என்னும் அர்த்தம் வரும்படி லிங்கம் மீது

மூன்று வெள்ளை சாரையாக (ரேகையாக) காட்டப்பட்டது. அதில் கீழ் உள்ள ரேகை ஜீவாத்மா என்னும் நடுவில் உள்ள ரேகை அனைத்து ஜீவிகளில் இணைந்து இருக்கின்ற ஆத்மா என்னும், மேல் உள்ள ரேகை பரமாத்மா என்னும் அர்த்தம் வரும்படி தயார் செய்தார்கள். லிங்கம் மீது மூன்று ரேகைகள் வைப்பது மட்டுமல்லாமல் நடுவில் உள்ள ரேகைக்கு மட்டும் சந்தனத்திலும் குங்குமத்திலும் பொட்டு வைப்பதினால் அதற்கு தனித்துவம் ஏற்பட்டது. அப்படி அடையாளிப்பதற்கு காரணம் என்னவென்றால்!

ஒவ்வொரு தேகத்தில் ஒவ்வொன்றும் வெவ்வேறாக இருக்கின்றது. "ஜீவாத்மாக்கள்". எல்லா தேகத்திலும் ஒரே அம்சமாக இருந்து ஒவ்வொரு தேகத்தில் தனித்தனியாக இருக்கின்றது "ஆத்மா". தேகத்திலும் வெளியில் அனைத்திலும் ஒன்றாக வியாபித்து இருக்கின்றது "பரமாத்மா". ஜீவாத்மா ஆத்மாக்கள் சஜீவமாக இருக்கின்ற தேகத்தில் மட்டும் இருக்கும். பரமாத்மா சஜீவ, நிர்ஜீவ தேகத்திலும் கூட இருக்கும். ஜீவாத்மா இருக்கின்ற இடத்திலேயே ஆத்மாவும் கூட இருக்கும். அதனால் கூட்டஸ்தன் என்னும் பெயர் கூட ஆத்மாவுக்கு இருக்கிறது. பகவத்கீதா புருஷோத்தம பிராப்த்தியோகத்தில்

**சுலோகம்:-16 துவவிமௌவ் புருஷோ லோகேஷ் ஷராக்சர ஏவச்சா,**
**ஷரசர்வாணி பூதானி கூடஸ்தோ ஷர உச்சத்தே,**

"லோகத்தில் இரண்டு புருஷர்கள் இருக்கின்றார்கள், அவரே ஷர அக்ஷரர்கள். ஷரன் சர்வ ஜீவிகளில் இருக்கிறார். அக்ஷரன் ஷரன் எங்கு இருக்கிறானோ அங்கு அவனிடம் இருப்பார்".

இந்த இருவர் புருஷர்களை விட வேறாக உத்தமமானது ஒன்று இருக்கிறது என்பதை 17ஆவது சுலோகத்தில் தெரிவித்தார், அதனை பரமாத்மா என்று சொல்லுவது கூட நடக்கின்றது. ஆத்மாவை விட பரமாக (வேறாக) இருக்கிறது மேலும் மூன்றாவது பரமாத்மா என்று சொல்லுவதில் அர்த்தம் உள்ளது. இந்த விதமாக இருக்கின்ற மூன்று புருஷர்களை பற்றி தெரிவிப்பதே லிங்கத்தின் மீது மூன்று ரேகை அடையாளம். ஜீவாத்மா பரமாத்மாவில் சேர்ந்த

போது ஜென்மங்கள் இல்லாமல் போய் ஜீவ எண்ணம் நசித்து போய் தெய்வ எண்ணம் ஏற்படும். என்றால் ஜீவாத்மா அணுஅணுவில் வியாபித்து உள்ள பரமாத்மாவில் சேர்ந்து தானும் கூட சூன்யமாகி போவார். இந்த விதமாக ஜீவாத்மா பரமாத்மாவில் சேர வேண்டும் என்றால் இரண்டாவதான ஆத்மாவை தெரிந்து கொள்ள வேண்டும். ஆத்மாவை தெரிந்து கொண்டு ஆத்மாவின் ஞான சக்தியினால் ஜென்மங்களுக்கு காரணமான கர்மங்கள் எல்லாவற்றையும் நிர்மூலம் செய்து கொண்ட பிறகு ஜீவாத்மா பரமாத்மாவில் சேர்வான். ஜீவாத்மா தேகத்தில் இருக்கும் போது ஆத்மாவை தெரிந்து கொண்டாலும், தேகம் விட்ட பிறகு பரமாத்மாவை தரிசிப்பான். அதனால் தேகத்தில் யாரும் கூட பரமாத்மாவை தெரிந்துக் கொள்ள முடியாது. பரமாத்மா தேகம் இல்லாதவர்களுக்கு தெரியும். எந்த ஜீவனும் வாழ்க்கையில் ஆத்மாவை தெரிந்து கொண்டு தியானம் செய்ய வேண்டும். பரமாத்மாவை தியானிக்க முடியாது, பூஜையும் செய்ய முடியாது. அதனால் லிங்கம் மீது மூன்று ரேகைகளாக அடையாளித்தவற்றில் நடுவில் உள்ள ரேகைக்கு சந்தனம், குங்குமம் அடையாளம் கொடுத்தார்கள்.

ஆத்மாக்கள் தூய்மையானது என்னும் அடையாளிப்பதற்கு தூய்மையான வெள்ளை நிறத்தில் ரேகைகள் அடையாளித்தார்கள். முக்கியமாக பாணிமட்டத்தை விட்டு லிங்கத்தை பூஜை செய்வோம். அதனால் பிரக்ருதியை விட புருஷன் தான் முக்கியம் என்று தெரிகின்றது. மேல் சொல்லப்பட்ட மூன்று ரேகைகளைப் பற்றி பல பேருக்கு வேறு அபிப்பிராயம் இருக்கிறது. விமர்சனங்களுக்கு நிற்காத கட்டுக்கதை ஞானம் அல்ல. விமர்சனங்களுக்கு நிற்கும் விஷயங்களே உண்மையான ஞானம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.



ஈஸ்வர லிங்கம்

தனேசனா, தரேஷனா, புத்ரேஷனா என்னும் இந்த மூன்றை விவரித்து லிங்கம் மீது வைத்து மூன்று ரேகைகளை சொல்கின்றார்கள். இது அசத்தியம் என்று பல பேருக்கு தெரியாது. விமர்சனைகள் மூலமே உண்மைகள் தெரியும். அதனால் இப்போது விமர்சனம் செய்யாமல் இருக்க முடியாது. ஜீவனுக்கு இருக்கின்ற குணங்களில் 1.காமம் (ஆசை) 2.குரோத, 3.லோப, 4.மோஹ, 5.மத, 6.மஸ்தரியம் என்பது முக்கியமானது. அவற்றில் முதல் ஆசை (காமம்) ஆசை என்றால் எத்தனையோ ரகமாக இருக்கின்றது. தின்பண்டம் மீது ஆசை, துணிகள் மீது ஆசை, பூமி மீது ஆசை, இதன் போல எத்தனையோ ரகமாக இருக்கலாம். தனம் மீது ஆசை, மனைவி மீது ஆசை, புத்திரர்கள் மீது ஆசையை சங்கரன் எரித்து சாம்பல் செய்து அந்த சாம்பலை தன் நெற்றியில் வைத்துக் கொண்டது போல், அந்த மூன்று ஆசைகளை ஜெயித்தேன் என்னும் அடையாளமாக அவற்றை நெற்றி மேல் வைத்து காட்டி நீங்கள் இதன் போல ஆசைகளை ஜெயிக்க வேண்டும் என்னும் அவர் விபூதி ரேகைகளை வைத்துக்கொண்டார் என்று பல பேர் சொல்கின்றார்கள். அப்படியானால் சங்கரனுக்கு தனம், மனைவி, புத்திரன் மீது ஆசை மட்டும் இல்லை என்னும் மற்ற ஆசைகள் இருக்கிறது என்று தெரிகின்றது. ஞான மார்க்கத்தில் ஆசைகளை எல்லாம் ஜெயிப்பது சரியானது. மேலும் மூன்று ஆசைகள் மட்டுமே ஜெயிக்க வேண்டும் என்று சொல்லுவது சரியானதா?

சங்கரனுக்கு தனம் மீது ஆசை இல்லை பூமி தங்கம் மீது ஆசை இருக்கலாம். அதன் போலவே மற்ற ஆசைகள் எல்லாம் இருக்கும். அப்படிப்பட்ட போது அவர் காம தகனன் எப்படி ஆகுவார்? இந்த கேள்விக்கு சரியான பதில் இல்லை. மேலும் தனேஷனா தரேஷனா புத்ரேஷனா என்னும் இந்த மூன்றை விவரித்த எண்ணம் விபூதி ரேகைகளுக்கு சரிபடாது. உண்மையாக, லிங்கத்திற்கு சங்கரனுக்கு சிறிதளவு கூட சம்பந்தம் இல்லை எப்படி என்றால்!

பூர்வம் பரமாத்மாவை தெரிவிப்பதற்காக லிங்கப்பிரதிஷ்டை செய்தர்கள் இன்று அதற்கு எதிர்ப்பாக லிங்கத்தை சங்கரனாக ஒப்பிடுவது நடக்கின்றது. ஈஸ்வரனுக்கு சங்கரனுக்கு எவ்வளவோ வித்தியாசம் இருந்தபோதும் இந்த காலத்தில் ஈஸ்வரனே சங்கரனானார், சங்கரனே ஈஸ்வரனானார். கோடீஸ்வரன் என்றால் கோடிக்கு அதிபதி. லக்ஷாதீஸ்வரன் என்றால் லட்சத்திற்கு அதிபதி. போகீஸ்வரர் என்றால் போகத்திற்கு அதிபதி. யோகீஸ்வரர் என்றால் யோகத்திற்கு அதிபதி என்று அர்த்தம் ஆகின்றது. ஈஸ்வரன் என்ற சொல்லுக்கு அதிபதி என்னும் விவரமாக தெரிகின்றது. உலகத்திற்கு அதிபதியான பரமாத்மா ஒருவரை ஈஸ்வரன் என்று பிரம்ம வித்தையில் சொல்லப்படுகின்றது. பிரக்ருதிக்கு அதிபதியானவர் பரமாத்மா என்ற எண்ணத்தில் லிங்கத்தை வைத்தபோது அதனை கழுத்தில் பாம்பு வைத்துக் கொண்ட சங்கரனாக ஒப்பிடுவது அர்த்தம் இல்லாத வேலை.

ஆதிகாலத்தில் இருக்கின்ற ஞானம் தற்போது காலத்தில் தலைகீழானது. அதற்கு காரணம் மதத்தில் பிரிவினைகள், சுயநலம், பண்டைய காலங்களில் இருந்தது ஒரே ஒரு மதம். காலம் கடந்து கொண்டிருக்கும்போது ஒரு மதத்தில் இருந்து எத்தனையோ மதங்கள் பிரிந்தது. முதல் மதமாக இருந்தது இந்து மதம். அந்த மதம் இந்த நாள் ஹிந்து மதமாக ஆனது. முதலில் இந்து மதத்தில் உள்ள சில பேர் ஒரு சமூகமாக மாறி போய் நாங்கள் பெரியோர்கள் என்னும் சொல்லிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தில் எங்களுடையது சைவ மதம் என்னும் சைவ மத கடவுள் சிவன் என்னும், அந்த சிவனே இந்த லிங்கம் என்னும், அந்த லிங்கத்தை பூஜை செய்கின்றவர் எல்லோரும் எங்களுடைய சைவர்கள் தான் என்னும் ஈஸ்வர லிங்கத்தை பூஜை

செய்கின்ற எல்லோரும் சைவர்கள் என்னும் அபிப்பிராயம் இணைத்துக் கொண்டு அதற்கு தேவையான பல மாற்றங்கள், சேர்த்தல்கள், கோர்வைகள் இவை எத்தனையோ செய்தார்கள். அப்படி செய்வதில் ஈஸ்வர லிங்கம் முன்பு நந்தீஸ்வரன், பக்கத்தில் பார்வதியை வைக்க நடந்தது.

சிவனுக்கு மனைவி பார்வதி, வாகனம் நந்தி. மற்றும் இவர் இருவரையும் ஈஸ்வர லிங்கத்தில் சம்பந்தப்படுத்தி ஈஸ்வரலிங்கம் சிவனாக கணக்கிட்டு மேலும் பார்வதியை பக்கத்தில், நந்தியை முன்னாடி வைத்தார்கள். லிங்க பிரதிஷ்டை முதலிலேயே ஆதியிலே நடந்திருந்தது. மேலும் பார்வதியை தனித்துவமாக பக்கத்தில் வைத்தார்கள். மற்றும் அந்த லிங்க பீடத்தில் தொடர்புபடுத்தாமல் போனார்கள். அதனால் எங்கேயாவதும் பார்வதி தனித்துவமாக பக்கத்திலேயே இருக்கும். மற்ற தேவதைகளுக்கு மட்டும் கணவன் பீடத்தில் மனைவி கூட இருப்பது கவனிக்கலாம். அதன் போலவே அவரவர் வாகனங்கள் கூட அந்த பீடத்திலேயே பொருத்தப்பட்டு இருக்கும். மேலும் முதலிலேயே தயாரான ஈஸ்வரலிங்கம் ஒன்றும் செய்யாமல் பார்வதியை, நந்தியை வெவ்வேறாக வைக்கப்பட்டது. அப்படி செய்வது மட்டுமல்லாமல் அதற்கு ஆதரவாக சொல்வதற்கு புராணங்கள் கூட தயார் செய்யப்பட்டது. நந்தியை லிங்கத்திற்கு எதிராக சிறிது தூரத்தில் வைத்து அதற்கு கூட ஒரு கட்டுக்கதை சொல்லப்பட்டது. உருவம் இல்லாத கடவுளை அடையாளிப்பதற்கு மூக்கு முகம் இல்லாத கல்லை சங்கரனாக வர்ணித்தும் கூட ஒரு கதையை கோர்த்து சாபத்தினால் சங்கரன் உருண்டையாக மாறிப்போனான் என்று விவரிக்கப்பட்டார்கள்.

எது என்ன ஆனாலும் புத்தி கூர்மை உள்ளவர்கள் லிங்கத்திற்கு பார்வதிக்கு நந்திக்கு சம்பந்தமே இல்லை என்னும் சுலபமாக கிரகிப்பீர்கள் என்று நினைக்கிறோம். இந்த காலத்திலும் கூட அங்கங்கு ஈஸ்வரப் பிரதிஷ்டா தேவாலயங்களில் பார்வதி இல்லை. ஒரு நந்தி மட்டும் லிங்கத்திற்கு எதிராக இருப்பது கவனிக்கலாம். தனித்துவமாக பார்வதி தேவாலயம் தயார் செய்வதற்கு அதிகம் செலவு ஆகுவதனால் பார்வதியை விட்டுவிட்டு தேவாலயம் தேவையில்லாமலே இருக்கின்ற நந்தியை மட்டும் வைத்து ஈஸ்வர தேவாலயங்கள் ஆங்காங்கே தெரிகின்றது.

ஞான தீபம் என்றும் அணையாது, மேலும் இன்று வெளிப்படையாகின்றது என்னும் நாங்கள் நினைக்கின்றோம். பூர்வம் பெரியோர்கள் எவ்வளவோ கடின உழைப்பு செய்து ஞானத்தை கண்டறியப்பட்டு நிர்மித்த ஈஸ்வர தேவாலயம் சங்கரன் தேவாலயமாக மாறுவது துரதிர்ஷ்டகரமானது. ஆனால் பெரியோர்கள் உழைப்பு வீணாகாது. மேலும் இப்போதும் சிவன் கோயில் சொல்லுவது மட்டுமல்லாமல் ஈஸ்வர தேவாலயம் என்று சொல்லுவதும் கூட இருக்கிறது. சிவன், ஈஸ்வரன் வெவ்வேறாக இருக்கின்றவர் என்று முக்கியமாக தெரிந்து கொள்ள வேண்டும். ஈஸ்வரர் என்றால் அதிபதி என்னும் முதலிலேயே சொல்லி உள்ளோம். சிவன் என்றால் திருமூர்த்திகளில் ஒருவர் என்று எண்ணம் உள்ளது. திருமூர்த்திகளுக்கு கூட அதிபதி ஒருவர்தான்! அந்த ஒருவர் ஈஸ்வரர் (பரமாத்மா)

## 3.உருவம் பிரதிஷ்டா (பகவான் உருவம் பிரதிஷ்டா)

ஆதியிலேயே ஈஸ்வரலிங்க பிரதிஷ்டா நடந்தது என்று தெரிந்து கொண்டோம். இது உருவம் இல்லாத கடவுளைப் பற்றி தெரிவிக்கின்ற விவரமாக இருக்கின்றது. உருவம் இல்லாத அணுஅணுவில் வியாபித்து இருக்கின்ற கடவுளுடைய விஷயம் மனிதர்களுக்கு தெரியாது கடவுளுடைய விஷயம் கடவுளுக்கே தெரியும் ஏனென்றால் அவருடைய விவரம் அவரே மனிதர்களுக்கு தெரிவிக்க வேண்டியது இருக்கும். சுயமாக மனிதன் கடவுளுடைய விஷயம் தெரிந்து கொள்ள முடியாது. அதனால் தர்மங்களை கடவுளே தெரிவிக்க வேண்டியது இருக்கும். மனிதன் தர்ம பிரதிஷ்டாபனா செய்ய முடியாது. கடவுள் தன்னுடைய தர்மத்தை அவரே தெரிவிப்பதற்கு உருவமில்லாத அவர் ஒரு உருவத்தை எடுத்து பிறக்க வேண்டியது இருக்கும். அனைத்திலும் வியாபித்து இருந்தும் ஒரு தேகத்தில் மாயாவில் கூடிய ஜென்மம் எடுத்துக்கொண்டு அந்த தேகத்தினால் அவர் தெரிவிக்க வேண்டிய ஞானம் தர்மம் முறையாக தெரிந்து போகும். அந்த விதமாக ஜென்மம் எடுத்தவரை "பகவான்" என்று கூற வேண்டும். பாகத்திலிருந்து

(தாய் கர்ப்பத்தில் சஜீவமாக) பிறந்தவரை பகவான் என்று சொல்ல வேண்டும். சர்வதேகத்தில் சர்வ வகையான பொருட்களிலும், விஸ்வமெல்லாம் அணுஅணுவில் வியாபித்து உள்ளவர் பரமாத்மா. ஆதி முழுவதும் வியாபித்து இருந்த அதுவே ஒரு தேகத்தில் நிவாசிக்கின்ற போது அதனை அல்லது அவரை பகவான் என்று சொல்ல வேண்டும்.

விஸ்வம் எல்லாம் வியாபித்து இருந்த உருவமில்லாத கடவுளை பற்றி தெரிவிப்பதற்கு லிங்க பிரதிஷ்டை செய்தோம். அதே கடவுள் எப்போதாவது அவருக்கு தேவைப்படும் போது அவருடைய விஷயம் தெரிவிப்பதற்காக அவரே ஒரு தேகத்தில் பிறப்பார் என்பதற்கு அடையாளமாக உருவம் இருக்கின்ற கடவுளைக் கூட காட்டுவதற்கு மூக்கு முகம் உள்ள பிரதிமை இருக்கின்ற ஆலயங்களை கூட பெரியோர்கள் தயார் செய்தார்கள். உலகத்தில் முதன்முதலாக ஈஸ்வரலிங்கம் தேவாலயங்கள் தயாராகி அதன் பிறகு சிறிது காலத்திற்கு பரமாத்மா மனித உருவமாக தேகம் அணிந்து வருவார் என்னும் தெரிந்த பெரியோர்கள் உருவமுள்ள கடவுளை தெரிவிக்கின்ற தேவாலயங்கள் தயார் செய்தார்கள். அந்த காலத்தில் லிங்கத்துக்கு பிறகு தயாரான பிரதிமை கோயில் ஸ்ரீரங்கன் தேவாலயம். பரமாத்மா கர்ப்பத்திலிருந்து பிறந்தாலும் ஜென்மத்தை குறிக்கின்றது ஸ்ரீரங்கம் தேவாலயம் மேலும் ஸ்ரீரங்கன் கடந்த கால வரலாறு இல்லாதவர். வரலாறு உள்ள தேவாலயங்கள் பிறகு எத்தனையோ தயாரானது மேலும் ஸ்ரீரங்கனுக்கு வரலாறு இல்லை. உருவம் இல்லாத நிறுவிக்காரர் (நிராகாரர்) சாகாரமாக வந்தை அடையாளமாக காட்டிய பிரதிமையாக ஸ்ரீரங்கனை குறிப்பிட வேண்டும். நிறுவிக்கார பரமாத்மாவை லிங்க வடிவமாக காட்டி கீழ் பாணிமட்டம் மேல் விபூதி ரேகை வைத்து அதற்கு மேல் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் இருந்து சொட்டு சொட்டாக நீர் விழும் படி ஏற்படுத்தி எவ்வளவோ அர்த்தம் தெரிவித்தவர்கள் ஸ்ரீரங்கன் மீது கூட பலவிதமான பரமார்த்தத்தை தெரிவித்தார்கள். அவர் உருவமே பெரிய ஆன்மீக குறிப்பானது.

இதன் போன்று தயாரான லிங்கம், ஸ்ரீரங்கன் தேவாலயங்களை ஈஸ்வர ஆலயங்களை பற்றி புராணங்களை உருவாக்கி இது திருமூர்த்திகளில் ஒருவரான சங்கரன் ஆலயம் என்னும் சைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போது

அவர்களுக்கு வித்தியாசமாக வைஷ்ணவர்கள் தயாராகி ஸ்ரீரங்கன் ஆலயம் எங்களுடையது என்னும் திருமூர்த்திகளில் ஒருவராகப்பட்ட விஷ்ணு ஆலயமே ஸ்ரீரங்க ஆலயம் என்னும்



பகவான் உருவம் பிரதிஷ்டா

புராணங்களை தயார் செய்து கொண்டு பிரச்சாரம் செய்து கொண்டார்கள். திருமூர்த்திகளில் சிவன் சங்கரன் என்று பெயர் வாங்கிய சிவனே பெரியவர் என்று சைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும்போது, அப்படி அல்லவே அல்ல சிவனை விட விஷ்ணுவே பெரியவர் என்று வைஷ்ணவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சிவனே பெரியவர் என்பதற்கு சிவபுராணத்தை சைவர்கள் தயார் செய்து கொண்டு விஷ்ணுவே பெரியவர் என்பதற்கு விஷ்ணுபுராணத்தை வைஷ்ணவர்கள் தயார் செய்து கொண்டார்கள். லிங்கம் எங்களுடைய மதம் என்பது போல் லிங்கம் மீது உள்ள விபூதி ரேகைகளை சைவர்களுக்கு அடையாளமாக நெற்றி பாகத்தில் வைத்துக்கொண்டு வைஷ்ணவர்கள் எங்களுடைய சமூகம் வேறு என்பது போல் ஸ்ரீரங்கன் நெற்றியில் மேல் உள்ள நாமத்தை அவர்களுடைய புருவம் நடுவில் வடிவத்தை (நாமத்தை) வைத்துக் கொண்டார்கள். இந்த விதமாக இந்து மதத்தில் முதலில் சைவர்கள் ஒரு பிரிவினையாகும்போது பிறகு அவர்களுக்கு சிறிது எதிர்ப்பு திசையில் வைஷ்ணவர்கள் சமூகம் தயாரானது. மக்களை நாமம் போட்டவர்களாக விபூதி பட்டைபோட்டவர்களாக மாற்றி வித்தியாசங்கள் தெரிவித்தார்கள். பூர்வம் பெரியோர்கள் மக்களுக்கு தெய்வ

ஞானம் தெரிவிப்பதற்கு எவ்வளவோ யோசனை செய்து உருவம் இல்லாத கடவுளை உருவமுள்ள கடவுளை தயார் செய்து காட்டிய போது தெய்வத்திற்கு எதிர்ப்பு கொண்ட மாயா மக்களுக்கு மற்றொரு வழியை காட்டி சாகார நிராகாரமாக காட்டிய தெய்வத்தை பிரிவு வடிவமாக அர்த்தம் ஆகும்படி செய்தது. அன்றும் இன்றும் லிங்கம் உருவம் கொண்ட தேவாலயம் ஒன்று இருந்தது மூக்கு முகம் உருவமுள்ள ஆலயங்கள் பலவிதமான பெயரில் தயாரானது. வைஷ்ணவர்கள் பல பேர் நாமம் கொண்ட கடவுள்களை தயார் செய்து கொண்டார்கள். பூர்வமுள்ள எண்ணத்தின் நோக்கம் முறை பிரகாரம் ஸ்ரீரங்க தேவாலயம் நிர்மித்து பிறகு மனிதர்கள் மற்ற தேவதைகள் பெயர் வைத்து நிர்மித்தது மாயா விளைவுகளே என்று சொல்லலாம். பூர்வம் பெரியோர்கள் மக்களுக்கு ஞான அர்த்தத்துடன் சாகாரமே நிராகாரம் நிராகாரமே சாகாரமாகும் என்னும் நோக்கத்தில் நிராகார லிங்கத்தை சாகார ஸ்ரீரங்கன் ஆலயங்களை குர்தாயுகத்திலேயே நிர்மித்தார்கள். குர்தாயுகம் முதலில் சில எண்ணிக்கை சிறிது வருடத்திலேயே சிவாலயங்களை ஸ்ரீரங்கன் ஆலயங்களை நிர்மித்தார்கள். அந்த முதல் தேவாலயங்கள் எங்கு நிர்மித்தது என்று தெரியாமல் போனதற்கு சிந்திக்கின்றோம். லிங்கம் என்றால் புருஷன் அடையாளமாக, உலகத்திற்கு எல்லாம் கணவனான புருஷன் ஒருவர் இருக்கிறார் என்பதை தெரிவித்து ஜெகத் கணவனை தெரிவிக்கும் லிங்கத்திலிருந்து அதன் மீது த்ரைத்த புருஷர்கள் அடையாளமாக என்றால் ஜீவாத்மா, ஆத்மா, பரமாத்மா அடையாளமாக மூன்று குறுக்கு விபூதி ரேகைகள் வைத்தார்கள். அந்த விதமாகவே பரமாத்மா ஜென்மம் எடுத்துக்கொண்டால் புருஷனாகவே பிறப்பார் என்னும் புருஷாகாரமான ஸ்ரீரங்கன் பிரதிமையை நிர்மித்தார்கள். “ஸ்ரீ” என்றால் சுகம் கொண்ட மோக்ஷத்தை தெரிவிக்கும் போது “ரம்” என்பது மந்திர விதை எழுத்துக்களாக இருக்கிறது. “ரம்” நாசனம் செய்கின்றது என்னும் “க” என்றால் கத்துலு என்னும் ரங்கா என்றால் இறப்பு பிறப்புகளின் கத்துலு (நிலை) இல்லாமல் செய்கின்றவர் என்னும் கர்ம கத்துலு இல்லாமல் செய்கின்றவர் என்னும் மோக்ஷத்தை உண்டாக்குபவர் என்னும் அர்த்தம் வரும்படி பெயர் வைத்தார்கள். சூன்யமாக இருக்கின்ற பரமாத்மாவிலிருந்து பிறந்து வந்தவர் ஸ்ரீரங்கன் என்னும் தெரியும்படி பூமி மீது பிறந்து இறந்து போன வரலாறு கொண்டவர்கள் தவிர, வரலாறு இல்லாத எங்கோ

பிறந்து இறந்து போனவர் அல்லாத ஸ்ரீரங்கனை பிரதிமையாக வைத்து காட்டினார்கள். அதன் போன்ற வரலாறு இல்லாதவரை வைப்பதில் பரமாத்மா நிராகாரமாக இருக்கின்றவர் கடந்த ஜென்மம் இல்லாதவர் அனைத்திலும் வியாபித்த சூன்யன் என்று அர்த்தம் இருக்கிறது. பிறந்த சாமான்யமானவன் கிரஹ விக்ரஹ ஆகுவான் பிறக்காதவன் கிரஹ விக்ரஹ ஆக மாட்டான். அதனால் ஸ்ரீரங்கன் பிரதிமை விக்ரஹம் அல்ல. மற்ற பிரதிமைகள் எல்லாம் விக்ரஹங்கள் ஆகும். பூர்வம் இந்த விதமாகவே உருவம் இல்லாதவருக்கு ஒரு உருவத்தை காட்டி பகவானாக பரமாத்மா வருவார் என்னும் தெரிவிக்கும் போது காலம் கடந்து கொண்டிருக்கும்போது பூர்வம் ஞானிகள் வைத்த எண்ணம் அதனுடைய ஞானம் எல்லாம் தெரியாமல் போனது. இன்று காலத்தில் தேவாலயங்கள் எல்லாம் வரலாறு இருக்கின்றவர்களுடையது தான் உள்ளது. பிறந்து இறக்காத ரங்கன் தேவாலயம் அப்போது அடையாளமாக எங்கேயோ ஒரு இடத்தில் இருக்கும்போது இன்று பலவிதமாக இறந்து பிறந்தவர்களுடைய ஆலயங்கள் பலவிதமான பெயர்களில் தயாரானது. இறுதிக்கு 100 வருடங்களுக்கு கீழ் இறந்து போன மனிதர்களைக் கூட ஆலயங்களில் நிர்மிக்கப்பட்டு கும்பிட ஆரம்பித்தோம். இதெல்லாம் மாயா விளைவுகள் தான் என்று அர்த்தமாகின்றது. பரமாத்மாவை தெரியாமல் பரமாத்மாவுடைய ஞானம் சிறிதளவு கூட இல்லாமல் செய்வது மாயாவின் வேலை. மாயா விளைவுகளில் உள்ள மனிதர்கள் எல்லோரும் பக்தி மார்க்கத்தில் இருந்தாலும் அந்த பக்தி பரமாத்மாவின் மீது அல்ல மாயாவின் பக்தியே என்று தெரிகின்றது.

இப்போதும் மீறிப் போனது ஒன்றுமில்லை. நம்முடைய சம்பிரதாயங்கள் பெரியோர்கள் சொல்லியதை கௌரவிக்க வேண்டும். ஜென்மங்கள் இல்லாமல் ஏற்படுத்தும் பக்தி மார்க்கத்தை அனுசரிக்கலாம். கிரஹ ஆராதனை விட்டு பகவான் ஆராதனை செய்யலாம். ஆலயங்களில் உள்ள பிரதிமைகள் எல்லாம் கடவுளுடைய பிரதி பிம்பங்கள் அல்லவென்று தெரிந்து கொள்ளலாம். சம்பிரதாயம் உள்ள தேவாலயங்களை தரிசித்து அதில் உள் இருக்கின்ற அர்த்தம் தெரிந்து கொள்ளலாம். ஞானத்தை தெரிவிக்கும் ஆலயங்களில் உள்ள சின்னங்களை அர்த்தம் செய்து கொள்ளலாம். இந்து மதத்தில் சனாதன தர்மங்கள்

இருக்கின்றது அது எந்த மதத்திற்கு எதிர்ப்பாக இல்லை என்று தெரிந்து கொள்ளலாம். நம்முடைய விதானம் நாம் தெரிந்து கொள்ளாதபோது இந்த மதத்தில் எதுவும் இல்லை என்றும் வேறு மதத்தில் ஏதோ இருக்கிறது என்றும் வேறு மதத்தில் சேருவதற்கு வாய்ப்பு இருக்கும்.

## 4. மூலம் அம்மா பெத்தம்மா

விஷ்வம் எல்லாம் அணுஅணுவில் வியாபித்து எல்லோரில் இருக்கின்ற பரமாத்மா என்பவர் பெயர் உருவம் இல்லாத கடவுளாக தெரிவித்து உள்ளதால் லிங்க வடிவத்தை நிர்மித்தார்கள். அதே கடவுள் தன்னுடைய விஷயம் தானே மனிதர்களுக்கு தெரிவிப்பதற்காக தன்னில் இருக்கின்ற பாகம் (அம்சம்) உருவமுள்ள பகவானாக பிறப்பார் என்பதை தெரிவிப்பதற்காக உருவம் உள்ள பிரதிமை உருவத்தை நிர்மித்தார்கள். இந்த விதமாக முதலில் ஈஸ்வர லிங்க ஆலயம் பிறகு பகவான் உருவம் உள்ள ஆலயம் தயாரானது. இப்போது ஒரு சந்தேகம் வரலாம் பெண் தேவதைகள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் அல்லவா! அவர்களுடைய தேவாலயங்கள் எப்போது தயாரானது என்று சிலர் கேட்கலாம். அதற்கு பதில் விவரமாக இப்படி இருக்கின்றது.

ஆதி மத்திய ரஹிதன் என்றால் ஆரம்பம் நடுவில் இறுதி இல்லாதவர் என்று அர்த்தம். இன்னொரு விதமாக பிறப்பு என்றால் முதல், வளர்வது என்றால் நடுவில், மரணம் என்றால் இறுதி என்பது இல்லாதவர் என்று அர்த்தம். இதனை இறப்பு பிறப்பு இல்லாதவர் என்று ஒரு வார்த்தையில் சொல்லலாம். ஆதி மத்திய ரஹிதன் என்பது பெயர் அல்லவென்று கடவுளின் பெருந்தன்மை, அவருடைய நிலையை தெரிவிக்கின்றது என்று அர்த்தமாகின்றது. பிரபு என்றால் பு என்பது பிறந்தது, பிர என்றால் முக்கியமானது, என்ற சாராம்சம் கொண்டது, பெரியது என்று அர்த்தம் இருக்கின்றது. பிறந்த அவற்றுக்கு எல்லாம் தனித்துவமானது, சிருஷ்டிக்கு எல்லாம் முக்கியமானது மற்றும் பெரியது,

சாராம்சம் கொண்ட அர்த்தம் இருக்கின்றது மேலும் பிரபு என்பதும் கூட பெயர் அல்ல.

சிருஷ்டி எல்லாவற்றுக்கும் ஷர அக்ஷரன் புருஷர்கள் இருக்கும்போது அவர் இருவரை விட அதீதமான அனன்யமான, உத்தமமானவர் பரமாத்மா, மேலும் அதே அர்த்தத்தில் புருஷோத்தமர் என்று சொல்லினார்கள். புருஷோத்தமர் என்பது கூட பெயர் அல்ல என்னும் அவருடைய நிலை தெரிவிக்கும் சொல் என்று தெரிந்து கொள்ள வேண்டும். பரமாத்மாவுக்கு ஒரு நிவாசம் இடம் இல்லை. ஒரு ஊர் மட்டும் அல்லாமல் அவர் விஷ்வம் எல்லாம் ஊசிமுனை முழுவதும் வியாபித்து இருக்கிறார். ஒரு இடம் ஒரு ஊர் இல்லாதவரானதினால் நிவாசத்திற்கு அதீதமானவர் என்ற அர்த்தம் இருக்கும்படி பரந்தாமன் என்று சொல்லினார்கள். பரந்தாமா என்பது கூட அவருடைய வியாபகம் தெரிவிக்கும் சொல் தான் அது ஒரு பெயர் அல்ல. ஆத்மா ஜீவாத்மாக்கள் பரமாத்மா அம்சத்தில் இருக்கின்றது. ஜீவாத்மாவை விட ஆத்மா எவ்வளவோ பெரியதாக இருந்து, ஆத்மாவை விட வேறாக இருக்கின்றவர் பரமாத்மா, பர என்றால் வேறு என்று அர்த்தம். பரமாத்மா என்றால் ஆத்ம கூட அல்லாமல் அதனை விட வேறாக இருக்கின்றவர் என்று அர்த்தம். பரமாத்மா என்னும் இந்த சொல் கூட பெயர் அல்ல என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

உலகத்தில் எல்லோரையும் ஆடவைக்கின்றவர் வேலை செய்ய வைக்கின்றவரை விதி அல்லது கர்மம் என்று சொல்கின்றோம். யாரும் கூட தன் சுயமாக எந்த முடிவு எடுத்துக் கொள்ள முடியாது எந்த வேலையும் செய்ய முடியாது. எல்லோரும் கர்மம் ஆதீனத்தில் இருந்து அதன் பிரகாரம் நடந்து கொள்ள வேண்டும். பரமாத்மா ஒருவர் மட்டும் கர்மம் ஆதீனத்தில் இல்லை. எல்லோரையும் ஆடவைக்கும் கர்மம் பரமாத்மாவை ஆடவைக்க முடியாது. பரமாத்மா ஆதீனத்தில் கர்மம் இருக்கிறது அதனுடைய ஆதீனத்தில் அவர் இல்லை. ஏதாவது செய்ய வேண்டியது இருந்தால் பரமாத்மாவே சுயமாக நிர்ணயம் எடுத்துக்கொண்டு அவரே சுயமாக செய்வார். எதுவும் அவர் சொந்தமாகவே செய்வார் மேலும் இப்படிப்பட்டவரை தெரிவிப்பதற்காக அவரை குதா என்று சொல்லினார்கள். குதா என்பது சுயம் நிர்ணய அதிகாரி தெரிவிக்கும் சொல் தான் பெயர் அல்ல.

பரமாத்மா தெரிகின்றவர் அல்ல, கேட்கக்கூடியது அல்ல. எந்த இந்திரியங்களுக்கும் தெரியாத இந்திரியாதிதர். தேகத்தில் இருக்கின்றவர் யாராக இருந்தாலும் எந்த சாதனை செய்தாலும் அவர் தெரியப்பட மாட்டார். யோகிகளுக்கு கூட தெரியபட மாட்டார். உலகம் எல்லாம் வியாபித்து நமக்கு வெளியில், நம் முன்பு நம் உள் கூட இருக்கின்ற பரமாத்மா யாருக்கும் எந்த விதமாக தெரியப்பட மாட்டார். அதனால் அவரை அவ்யக்தா என்று சொல்லினார்கள். இந்த சொல் கூட அவருடைய நடைமுறையை தெரிவிப்பதற்கு மட்டும்தான் குறிப்பிட்ட பெயர் அல்ல.

எல்லோர் மீது ஆதிக்கம் செலுத்துபவரை ராஜா என்று சொல்லுவார்கள். எல்லோரை விட எல்லாவற்றிலும் பெரியவரை ராஜா என்று சொல்ல நடக்கின்றது. சிறிது ராஜ்ஜியத்தின் மீது அதிகாரம் கொண்டு தான் என்ன நினைத்துக் கொண்டாலும் அதை அமல் செய்யும் சுயம் அதிகாரம் கொண்டு இருக்கின்றவர் ராஜா. தன்னுடைய ராஜ்ஜியத்தில் இருக்கின்றவர் எல்லோரிலும் மகத்துவம் கொண்டு இருந்து எல்லோர் மீது அதிகாரம் கொண்டு எல்லோரையும் ஷாசித்து தன்னுடைய பின்பற்றுதலால் வழிநடத்துபவர் ராஜா. பரமாத்மாவுக்கு விஷ்வமே ராஜ்ஜியமாக இருக்கின்றது. அவர் அனைத்திலும் வியாபித்து எல்லாவற்றின் மீது அதிகாரம் கொண்டு இருக்கின்றார். பரமாத்மா ஒவ்வொரு மனிதன் மீதும் ஒவ்வொரு ஜீவ ராசியின் மீதும் தன்னுடைய பிரக்ருதியால் அதிகாரம் கொண்டு ஜெந்த்ரக்காரன் பொம்மைகளை ஆட்டும்படி எல்லோரையும் ஆடவைக்கின்றார். உலகத்தில் அவரை விட பெரியவர் அவருடைய கட்டளையை மீறியது எதுவும் இல்லை மற்றும் அவர் எல்லோருக்கும் ராஜா. ராஜா என்ற சொல் அவருடைய நிலையை தெரிவிப்பதற்கு தான் பெயர் அல்ல.

எல்லாவற்றுக்கும் பெரியது பரமாத்மா, பரமாத்மாவை மீறியது சர்வ ஜெகத்திலும் அனைத்து உலகத்தில் எதுவும் யாரும் இல்லை. மற்றும் எல்லாவற்றுக்கும் பெரியவராக இருக்கின்ற பரமாத்மாவை பெரிய என்ற சொல்லில் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த எண்ணத்தில் மூன்று நபரை பெற்றெடுத்த அம்மா மூலம் பெத்தம்மா என்று சொல்லினார்கள். பிரக்ருதிக்கு மூன்று குணங்களை உருவாக்கியவர் பரமாத்மா ஆனதினால் மூன்று நபரை

பெற்றெடுத்த என்று சொல்லினார்கள். எல்லாவற்றுக்கும் மூலமாக ஆதாரமாக இருக்கின்றதினால் மூலம் என்று சொல்லினார்கள். எல்லாவற்றுக்கும் பெரியவராக இருக்கின்ற பரமாத்மா பெண்ணா ஆணா யாருக்கும் தெரியாது அதற்காக பரமாத்மாவை ஓரிடத்தில் அது என்னும் மற்றொரிடத்தில் அவர் என்று சொல்கின்றோம். எல்லோரையும் பிறக்க வைத்தது சிலர் அம்மா என்று சொல்லினார்கள். எல்லோருக்கும் பெரியவராக இருக்கின்றதால் பெத்தம்மா என்று சொல்லினார்கள். அதனால் பெண்ணாக ஒப்பிடுவார்களோ என்னமோ என்னும் பரமாத்மா பெண் அல்ல ஆண் என்று தெரிவிப்பதற்கு பெத்தம்மாவுக்கு மீசையை வைத்தார்கள். இப்போதும் எங்கேயாவது பெரியம்மா கோவிலில் பிரதிமைக்கு மீசைகள் வைக்கும் சம்பிரதாயம் இருக்கின்றது. அழைக்கபடுவது பெத்தம்மா என்னும், தெரிகின்றது முகத்தின் மேல் மீசைகள் அடையாளம். இதனுடன் பரமாத்மா பெண்ணா ஆணா யாருக்கும் அர்த்தம் ஆகாது. அப்படி எதுவும் அல்ல என்ற விஷயம் தெரிவிப்பதற்கு பூர்வம் பெரியோர்கள் கோரை மீசைகள் வைத்தார்கள். ஆண் ஜாதி விலங்குகளுக்கு கோரைகள் இருப்பதினால் ஆம்பள ஜாதியை தெரிவிக்கும் கோரமீசைகள் வைத்து பெத்தம்மா என்று சொல்லினார்கள். இதனுடன் பெண்ணா ஆணா இதுவும் அல்ல என்னும் எதுவும் அல்லாததே பரமாத்மா என்று தெரியப்படுகின்றது. பூர்வம் ஞானம் தெரிந்த பெரியோர்கள் தன்னில் இருக்கின்ற ஞானத்தை வேறு அவர்களுக்கு தெரிவிப்பதற்காக பெரிய என்ற பெயர் முக்கியமாக வைத்து, அய்யாவோ அப்பாவோ அர்த்தம் ஆகாத படி தாய் தந்தை எல்லாம் அவரே என்பது போல் அடையாளமாக பெத்தம்மா என்று வைத்தார்கள். இன்று அந்த எண்ணம் சிறிதளவு கூட இல்லாமல் போய் பெத்தம்மாவுக்கு கூட ஆறு தங்கை ஒரு தம்பியை உருவாக்கி கதை கோர்த்து சாதாரணமான தேவதைக்கு கீழ் சுத்திரதேவதை போல சேர்த்தினார்கள். அக்காவுக்கு இருக்கிறது மேலும் தங்கைகளுக்கு கூட இருக்க வேண்டும் என்னும் சுங்குலம்மா, மாரியம்மா, போலேர்ம்மா, மாச்சம்மா, போச்சம்மா, மைசம்மா என்பவருக்கு சில இடத்தில் வெள்ளி மீசைகள் கோரைகள் வைக்கின்றது கூட இருக்கின்ற விஷயம் தான். இவர்கள் எல்லோரும் கிராம தேவதைகளாக இருக்கும்போது இவரில் பெத்தமாவில் இணைப்பது தவறானது. ஏழு நபர் அக்கா தங்கைகள் இருப்பது

உண்மைதான் பெத்தம்மா இவரில் இருக்கின்றவர் அல்ல. எல்லம்மா என்னும் கிராம தேவதை சேர்த்திக் கொண்டால் 1.சுங்குலம்மா 2.மாரியம்மா 3.எல்லம்மா 4.போலேரம்மா 5.மாச்சம்மா 6.போச்சம்மா 7.மைசம்மா. இவர்கள் எல்லாருடையது வாஸ்துவமாக பெயராக இருக்கும்போது பெத்தம்மா என்ற சொல் பெயர் அல்ல வென்று தெரிந்து கொள்ள வேண்டும். எல்லோரை விட உயர்ந்தவரை தெரிவிக்கும் பரமாத்மா அடையாளமாக இருக்கின்றது என்று அர்த்தமாகின்றது. பரமாத்மா பெண்ணுக்கு ஆணுக்கு தனித்துவமாக இருக்கின்றவர் என்பதால் பெத்தமாவுக்கு கோரை மீசைகள் வைத்தார்கள். எல்லாவிதமாக பரமாத்மாவுக்கு பெரிய என்ற சொல் சரியாக இருக்கும் என்னும் புருஷோத்தம என்ற சொல்லில் உத்தம என்ற சொல் விசேஷமான அர்த்தம் தெரிவிக்கும்படி, பெத்தம்மா பெத்தண்ணா இந்த சொல்லில் பெரிய என்ற சொல் விசேஷமான அர்த்தத்தை தெரிவிக்கின்றது. மற்றும் அனைத்து லோகங்களுக்கு தாய் தந்தை இரண்டும் ஆனானதினால் பரமாத்மாவுக்கு பெரிய என்ற சொல் சரியாக இருக்கும் என்று சொல்லலாம். தாய் தந்தை எல்லாம் அவர்தான் என்பதை தெரிவிப்பதற்கு பெரிய என்பதற்கு அம்மா என்னும் சேர்த்து பெத்தம்மா என்று தாயை காட்டி, மீசைகள் வைத்து தந்தையை காட்டி பெத்தம்மா என்ற பொம்மையை காட்டினார்கள். பெத்தம்மாவுக்கு மீசைகள் வைக்கலாம் மேலும் சுங்காலம்மா முதலியன கிராம தேவதைகளுக்கு மீசைகள் வைக்கக்கூடாது. பகுதிகளைப் பொறுத்து மற்ற தேவதைகளுக்கு பெயர்கள் மாறலாம் மேலும் பெரியம்மா என்பது பெயர் அல்ல அதனால் பெத்தம்மா என்று சொல்லுவதில் மாறாமல் எங்கேயாவது பெரியம்மாவாகவே இருக்கும். தற்போது காலத்தில் மீசைகள் இல்லாத பெத்தம்மா ஆலயங்கள் கூட தயார் செய்தார்கள். இது சம்பிரதாயத்திற்கு எதிர்ப்பு, அர்த்தமில்லாமல் செய்யும் வேலை ஆகும்.

இந்த விதமாக பெண் தேவதைகள் பெயரில் முதலில் தேவாலயங்கள் காணப்படமல் காலம் கடந்து கொண்டிருக்கும் போது எத்தனையோ பேர் பெண் தேவதைகளை மனிதர்கள் தயார் செய்தார்கள். முதல் தயாரானது அர்த்தத்தில் கூடி இருக்கின்றது முக்கியமாக ஈஸ்வர ஆலயம், பிறகு ரங்கன் ஆலயம், அதன் பிறகு பெத்தம்மா ஆலயங்கள் மூன்று

மட்டும் இருந்தது இன்று சில நூற்றுக்கணக்கான தேவாலயங்கள் அர்த்தம் இல்லாமல் தயாரானது. அப்படியே தயாரான ஆலயங்களுக்கு மனிதர்களே புராணங்களை எழுதிக் கொண்டார்கள். ஏதோ ஒரு கட்டுக்கதை எழுதி இது பலான புராணத்திற்கு சம்பந்தப்பட்டது என்னும் அஷ்ட தச புராணங்களில் ஏதோ ஒரு புராணத்திற்கு சேர்த்துக் கொண்டார்கள். இப்படி சிலர்கள் கட்டுக்கதைகள் புராணங்கள் சொல்லுவதினால், மற்றொருவர்கள் ஏதோ ஒன்றை எழுதி சாஸ்திரம் என்னும் பெயர் வைப்பதினால் தேவாலயங்களில் பூர்வமுள்ள நோக்கங்கள் போனது. பக்தர்களில் கூட பூர்வமுள்ள எண்ணங்கள் போய் கடவுள் முக்திக்காக அல்ல கோரிக்கைகள் தீர்ப்பதற்கு என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தேவாலயங்கள் தெய்வ ஞானம் தெரிவிப்பதற்கு பாலம் போன்றது என்று தெரிந்து கொள்ளாமல் போனார்கள். அந்த நாள் திரேதாயுகத்தில் ராமன் கோயிலில் ஆரம்பித்த ஆலயங்கள் பிறகு ஆஞ்சநேயனுடையது, அதன் பிறகு நரசிம்ம சுவாமி உடையது, விக்னேஸ்வரனுடையது, இதன் போல புதியதாக சாய்பாபா ஐயப்ப சுவாமி வரை தயாரானது. எதிர்காலத்தில் இன்னும் எத்தனை தயாராகுமோ.

தேவாலயங்கள் சில முக்கியமான பகுதிகளில் மட்டும் இருந்து. பூர்வம் முக்கிய சேத்திரமாக அழைக்கப்படுவது சில இடத்தில் மட்டும் இருந்தது. திரேதாயுகத்தில் ராமன் பிறகு ஆரியர்கள் விளைவுகளினால் எல்லா கிராமங்களில் ராமன் ஆலயங்கள் நிர்மித்தார்கள். திரேதாயுகம் விட முதலில் குர்தாயுகத்தில் ஈஸ்வரன் ஆலயங்கள், ரங்கன் ஆலயங்கள், மூலபுட்டு அம்மா பெத்தம்மா ஆலயங்கள் மிக தூரமுள்ள பகுதிகளில் இருந்தது. ஹிமாச்சலத்தில் இருந்து கன்னியாகுமரி வரை ஐந்து ஆறு ஈஸ்வர ஆலயங்கள் விட அதிகமாக இருக்கின்றது அல்ல. அதே எண்ணிக்கையில் ரங்கனுடைய ஆலயங்கள் இருந்தது. ஐந்தாறுகளை விட மீறி பெத்தம்மா ஆலயங்கள் கூட இல்லை. எங்கு எந்த ஆலயங்கள் இருந்தாலும் அது ஊருக்கு வெளியில் தூரமாக மலைகள் மீது, காட்டுப் பகுதிகளில், கடலோரமாக, நதிகள் பக்கம் இருந்தன.

ஊரில் எந்த ஆலயங்கள் இருக்காது. ஒவ்வொரு சின்ன ஊரிலும் கூட ஊருக்கு நடுவில் (மையகல்) இந்த

பெயரில் குண்டுகள் இருந்தது. அந்த நாள் உள்ள மக்களுக்கு அதனுடைய விவரம் என்னவென்று தெரியும், இந்த நாள் நமக்குத் தெரியாமல் போனது. மேலும் அதனைப் பற்றி தெரிந்து கொள்ளலாம். பூர்வ காலத்தில் ஒரு ஊர் தயார் செய்த போது முதலில் பொட்டுராயை (மையகல்லை) புதைத்து வைத்து அதை சுற்றி ஊரை நிர்மித்துக் கொண்டிருப்பார்கள். எப்படி பார்த்தாலும் ஊருக்கு நடுவில் இருக்கும் படி பொட்டு ராய் வைத்தார்கள். அப்படி வைப்பதில் பூர்வீகர்கள் நோக்கம் இந்த விதமாக இருந்தது. சர்வ உலகத்திற்கு மூலமானவர் மற்றும் ஆதாரமாக இருப்பவர் பரமாத்மா என்னும் பரமாத்மாவை ஆதாரம் செய்து கொண்டு பிரக்ருதி பரிபிரம்மிக்கின்றது என்று அவர்களுடைய நோக்கம். அந்த நோக்கம் பிரகாரமே பொட்டுராயை நடுவில் வைத்து, அதை பரமாத்மாவாக எண்ணிக்கொண்டு ஊரை உலகமாக எண்ணம் கொண்டு கட்டுவார்கள். மனிதனுக்கு நடுவில் தொப்புள் (பொட்டு) உள்ளது தொப்புளின் ஆதாரத்தினால் தாய் வயிற்றில் குழந்தை வளர நடக்கின்றது. தேகம் முதல் தயாராகுவதற்கு தொப்புள்தான் மூலாதாரம். உலகத்திற்கு மூலாதாரம் பரமாத்மாவே. அதனால் ஊர் நடுவில் புதைக்கபட்ட கல்லுக்கு பொட்டுராய் என்று பெயர் வைக்கப்பட்டது. பொட்டு ராய் பூமியில் பாதியை புதைத்து பாதி வெளியில் தெரியும்படி வைக்கப்பட்டிருக்கும். பொட்டுராய் ஈஸ்வர லிங்கம் வடிவம் கொண்டு இருக்கும். கோயிலில் ஈஸ்வரலிங்கம் பாணி மட்டத்தின் உடன் இருக்கும். நடு ஊரில் உள்ள பொட்டுராய் பாணிமட்டம் இல்லாத ஈஸ்வரலிங்கமாக தெரியும். பாணி மட்டம் இல்லாததினால் பூமிக்கு உள்ளே புதைத்த குண்டு ராய் கல் போன்று தெரியும். பொட்டு ராய் உலகத்திற்கு ஆதாரமான பரமாத்மாவை தெரிவிக்கும் அடையாளமாக இருக்கின்றதினால் அதனை புருஷன் என்னும் தெரியும்படி போத்துலையா என்று சொல்லுவதும் கூட நடந்தது. போத்துலையா என்றால் புருஷோத்தமன் என்று அர்த்தம். சர்வ உலகத்திற்கு சிருஷ்டி கர்த்தாவாக இருக்கின்றதினால் ஊர் ஆரம்பமாகுவதற்கு முதலிலேயே பொட்டு ராய் வைத்து பிறகு ஊரை தயார் செய்வார்கள். ஊருக்கு ஆதாரமானது, ஊருக்கு மூலம் மற்றும் தொப்புள் போன்றதினால் அதனை பொட்டு ராய் என்று சொல்லினார்கள். ஊரெல்லாம் உலகம் என்னும் நடுவில் உள்ள கல் புருஷனான பரமாத்மா என்னும் தெரியும்படி மற்றும் புருஷோத்தமன் என்னும் தெரியும்படி பொட்டு ராய்

போத்துலையா என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதனால் பொட்டு ராய்யில் போத்துலையாவன பரமாத்மா உடைய எண்ணம் தெரியும் என்று சொல்லலாம்.

## 5. ஏழு துவாரங்கள்

தேவாலயங்களில் ஏழு துவாரங்களுக்கு எவ்வளவோ விசேஷம் இருக்கின்றது. ஆலயம் முன்பே பெரியதாக உயரமாக கோபுரம் இருக்கும், அந்த கோபுரம் மீது கீழ்யிருந்து மேல் வரை ஏழு துவாரங்கள் நிர்மித்து வைத்துயிருபார்கள். அதன் போலவே கோபுரத்தை தாண்டி உள்ளே போன பிறகு கர்ப்ப கோயில் பிரதிமை வரை ஏழு துவாரங்களை தாண்ட வேண்டியது இருக்கும். முதலில் இருக்கின்ற கோபுரம் ஏழு துவாரங்களுக்கு, அதன் போலவே கர்ப்ப கோயில் முன் இருக்கின்ற ஏழு துவாரங்களுக்கு இருக்கின்ற எண்ணம் என்னவென்று பூர்வமுள்ள பெரியோர்கள் எந்த நோக்கத்தில் கோபுரத்துக்கு மேல், கோயில் முன் ஏழு துவாரங்கள் வைத்தார்கள் அதைப்பற்றி தெரிந்து கொள்ளலாம். நம் தேகத்தில் இருக்கின்ற 3.50 லட்சம் நாடிகளில் 72 நாடிகள் முக்கியமானவை ஆனால் அதில் 10 சிரோ நாடிகள் முக்கியமாக இருக்கின்றதால் அவற்றை விட முக்கியமானது மூன்று இருக்கின்றது. அவற்றின் பெயர்கள் இட, பிங்களா, சுஷ்மாங்க என்று சொல்வார்கள். சூரிய சந்திர பிரம்ம நாடிகள் என்று கூட அவற்றுக்கு பெயர் இருக்கின்றது. தேகத்தில் இருக்கின்ற பத்து சிரோ நரம்புகள் இந்த மூன்று நாடிகளில் இருந்து ஆரம்பமானது. மற்றும் தேகத்திலிருந்து ஒவ்வொரு சின்ன நாடிகள் இந்த மூன்று நாடிகளில் ஒன்றின் ஒன்றாக இணைந்து இருக்கின்றது. தேகத்தில் இருக்கின்ற நாடிகள் அமைப்பு சூரிய சந்திர பிரம்ம நாடிகளே ஆதாரமாக இருக்கின்றது. சூரிய சந்திர பிரம்ம நாடிகளில் மிக முக்கியமானது பிரம்ம நாடி. பிரம்ம நாடியில் தேகத்தில் உள்ள ஆத்மா நிவாசிக்கின்றது. என்றால் பிரம்ம நாடியை ஆத்மா ஆதாரம் செய்து கொண்டு அங்கு இருந்து ஒன்றின் ஒன்றாக இணைந்து நாடிகளினால் தேகமெல்லாம் வியாபிக்கின்றது. பிரம்ம நாடியில் இருக்கின்ற ஆத்மா நாடிகளினால் தன்னுடைய சக்தியை தேகத்திற்கு எல்லாம்

வியாபித்து தேகத்தை அசைய வைக்கின்றது. தேகத்தில் இருக்கின்ற இணைந்த ஆத்மாக்களான ஜீவாத்மா ஆத்மாக்களில் ஆத்மா பிரம்ம நாடியில் இருக்கின்றது என்று தெரிகின்றது.

தேகமே தேவாலயம், ஆத்மாவே கடவுள் என்னும் பெரியோர்கள் வாக்கியம் பிரகாரம் தேகத்தில் இருக்கும் பிரம்ம நாடியில் இருக்கின்ற ஆத்மாவே கடவுள் என்று தெரிகின்றது. உன் தேகத்தில் நீ ஜீவனாக உன் தேகத்தில் ஆத்மா கடவுளாக இருக்கின்றார். ஜீவோ தேவோ சனாதனஹு சொல்லியது போல் தேகத்தில் ஜீவன் மற்றும் கடவுள் எப்போதும் இருக்கின்றார். தேவ தேவனான பரமாத்மா கூட ஆத்மாவை விட வேறாக தேகத்திலேயே இருக்கின்றார். பரமாத்மா தேகத்தை விட்டு முக்தி அடைந்த பின் தெரியுவார். முக்தி அடைவதற்கு முதலில் ஆத்மாவை தெரிந்து கொள்ளலாம். ஆத்மாவை தரிசனம் செய்வதே தெய்வதரிசனம் என்று சொல்லலாம். தெய்வ தரிசனத்திற்கு சம்பந்தப்பட்ட பரிக்ஞானத்தை தெரிவிப்பது தேவாலயம். மேலும் தேவாலயங்களில் ஏழு துவாரங்கள் தேகம் உள்ளே தெய்வ தரிசனத்திற்காக அர்த்தம் இருக்கும்படி நிர்மிக்கப்பட்டு இருக்கின்றது. சூரியன் ஆகாசத்தில் இருந்து தன்னுடைய கதிர்களினால் உலகம் அனைத்திற்கும் வெளிச்சம் கொடுக்கின்றது போல ஆத்மா பிரம்ம நாடியிலிருந்து தேகம் அனைத்திற்கும் சக்தியை கொடுக்கின்றது என்னும் கீதாவில் பகவான் கூட கூறினார். தேகத்தில் தெய்வமாக அழைக்கப்படுகின்ற ஆத்மா பிரம்ம நாடியில் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டோம். ஆகாசத்தில் சூரியன் எங்கு இருக்கின்றார் என்றால் பலான ராசியில் இருக்கிறார் என்னும் சொல்லியது போல் தேகத்தில் ஆத்மா எங்கு இருக்கிறார் என்று கேட்டால் பிரம்ம நாடியில் பலான இடத்தில் இருக்கிறார் என்று சொல்லலாம். ஆகாசத்தில் சூரியன் 12 ராசிகளில் ஏதோ ஒரு ராசியில் இருப்பார். அதன் போலவே தேகத்தில் ஆத்மா எங்கு இருக்கிறார் என்று கேட்டால் பிரம்ம நாடியில் பலான இடத்தில் இருக்கிறார் என்று சொல்ல வேண்டியது இருக்கும். அப்படி சொல்ல வேண்டுமென்றால் முதல் பிரம்ம நாடியை பற்றி முழுமையாக தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தேகத்தில் பிரம்ம நாடி என்பது தலையில் இருந்து ஆசனவாய் வரை இருக்கின்ற முதுகெலும்பு நடு பாகத்தில்

வியாபித்திருக்கின்றது. முதுகெலும்பு இருக்கின்ற நாடி அதற்கு தண்டுவடு என்ற பெயர் கூட இருக்கின்றது. தண்டுவடு அல்லது பிரம்ம நாடி ஏழு பாகங்களாக பிரிக்கப்பட்டது என்று சொல்லலாம். ஒவ்வொரு பாகத்தில் ஒவ்வொரு நாடி மையம் இருக்கிறது. என்றால் பிரம்ம நாடி ஒன்றாக இருந்தாலும் அதில் ஏழு நாடி மையங்கள் இருக்கின்றது. அவற்றை சிலர் ஏழு பத்மங்களாக சொல்லிக்கொண்டு ஒவ்வொரு பத்மத்தின் மீது ஒவ்வொரு கடவுள் இருக்கிறார் என்று கூட சொல்லிக் கொண்டிருப்பார்கள். வாஸ்தவமாக பிரம்ம நாடியில் ஏழு நாடி மையங்கள் இருக்கின்றது மற்றும் அங்கு பத்மங்கள் எனப்படும் பூக்கள் இல்லை மற்றும் தேவதைகளும் இல்லை. பிரம்ம நாடியில் ஆத்மா சிரசில் ஏழாவது நாடி மையத்தில் இருந்து மற்ற ஆறு மையத்திலும் கூட தன்னுடைய சக்தியை நிறைத்து மொத்தம் ஏழு மையங்களினால் தேகத்தை நடத்துகின்றது. முக்கியமாக நம்முடைய தேகத்தில் நம் நிவாசிக்கின்றதற்கு நடப்பதற்கு சுவாசையை இந்த ஏழு நாடி பாகங்கள் நடத்துகின்றது. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை ஜீவனுடைய ஆயுள் சுவாசை வடிவத்தில் இருக்கும். ஜெனனத்திலிருந்து மரணம் வரை ஏழு நாடி மையங்களே ஒன்று பிறகு ஒன்று சுவாசையை திருப்புகின்றது. ஜீவன் தேகத்தில் இருக்க வேண்டும் என்றால் சுவாசை நடக்க வேண்டும், சுவாசை நடக்க வேண்டும் என்றால் 24 மணி நேரம் பிரம்ம நாடியில் மையங்கள் வேலை செய்ய வேண்டும். அதனால் ஒவ்வொரு ஜீவராசிக்கு சுவாசையை நடத்துகின்றவர் அந்த தேகத்தில் உள்ள கடவுளே என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாளுக்கு 21,600 சுவாசைகள் நடக்க வேண்டியது இருக்கும்போது அந்த சுவாசைகள் இந்த விதமாக ஏழு மையங்களினால் நடக்கின்றது. கீழ் உள்ள நாடி மையம் தேகத்தில் ஆசன வாய்க்கு சமமாக முதுகெலும்பில் உள்ளே பிரம்ம நாடியில் இருக்கின்றது. அந்த நாடி மையத்திற்கு 1.ஆதாரம் என்று பெயர் வைத்தார்கள். ஆதார நாடி மையங்களில் இருந்து 600 சுவாசை நடக்கும்.




ஏழு துவாரங்கள்

ஆதார நாடி மையத்திலிருந்து சில நரம்புகள் ஆரம்பித்து நுரையீரல் வரை வியாபித்து இருப்பதினால் ஆத்மா தன்னுடைய சக்தியினால் நுரையீரலை அசைத்து உச்சுவாச நிச்சுவாசைகள் ஏற்படுத்துகின்றது. அதன் போலவே லிங்க ஸ்தானத்திற்கு சரியாக மற்றொரு நாடி மையம் இருக்கிறது. அந்த நாடி மையங்களுக்கு 2.சுவாதிஷ்டானா என்று பெயர் வைத்தார்கள். சுவாதிஷ்டானம் நாடி மையங்களினால் 6000 சுவாசைகள் நடக்கின்றது. பிறகு மையம் நாபிக்கு சமமாக இருக்கின்றது. அதற்கு 3.மணிப்புரம் என்று பெயர் வைத்தார்கள். இந்த மையத்தினால் 6000 சுவாசைகள் நடக்கும். அதன் போலவே பிறகு மையம் இதயத்திற்கு சமமாக இருக்கின்றது அதற்கு 4.அனாஹதம் என்று பெயர் வைத்தார்கள். அனாஹதம் நாடி மையத்தினால் கூட 6000 சுவாசைகள் நடக்கின்றது. ஐந்தாவது மையம் கழுத்துக்கு சமமாக இருக்கின்றது, 5.விசுத்தம் என்று ஐந்தாவது மையத்தை சொல்கின்றோம். இந்த மையத்தினால் 1000 சுவாசைகள் நடக்கின்றது. பிறகு ஆறாவது மையம் 6.ஆக்னேயம் என்று அழைக்கப்படுகின்றது. இதனால் கூட 1000 சுவாசைகள் நடக்கின்றது. இனி எல்லாவற்றை விட முக்கியமானது ஏழாவது மையம். இந்த ஏழாவது மையத்தில் ஆத்மா நிவாசிக்கின்றது. இந்த மையத்தின் பெயர் சஹஸ்ரம்.

சஹஸ்ரத்தினால் கூட 1000 சுவாசைகள் நடக்கின்றது. தலையில் மூளை பாகத்தில் ஏழாவது மையம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு நாள் 21,600 சுவாசைகள் நடத்திக் கொண்டு தேகத்திற்கு சக்தியை கொடுத்து தூக்கத்திலும் முழிப்பிலும் பலவிதமான வேலைகள் செய்ய வைக்கின்றது ஆத்மா தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஏழு நாடி மையங்களில் வேலைகள் சுவாசையில் நடக்கின்றது அவற்றினால் மனிதன் வாழ்க்கை நாடகம் ஏற்படுகின்றது என்னும் தெரிவிப்பதற்காக ஏழு துவாரங்கள் தேவாலயங்கள் மீது காண்பித்தார்கள். தேகத்தின் மீது நினைவு விட்டபோது ஏழாவது மையத்தில் நினைவு வைத்திருக்கும் போது அங்குள்ள ஆத்மா தெரியும் என்று மேல் ஏழாவது துவாரம் வைத்தார்கள்.

தேகம் தேவாலயம் என்றால் ஆத்மா தான் கடவுள் என்று சொல்லினோம் அல்லவா! கடவுளான ஆத்மா தேகத்திற்கு சக்தியை கொடுத்து அசைய வைத்து வலுவாக இருந்து ஆரோக்கியம் அனாரோக்கியம் கூட ஏற்படுத்துகின்றது. தேகத்தில் உள்ளே காரியங்கள் எத்தனையோ நடத்திக் கொண்டு வெளியில் தெரிகின்ற பலமாக ஆரோக்கியத்தை அனாரோக்கியங்களை கர்ம பிரகாரம் ஏற்படுத்துகின்றது. வலிமை மற்றும் பலவீனங்கள் 7 நாடி மையங்களில் இருந்து கிடைத்துக் கொண்டிருக்கும் போது ஆரோக்கியங்கள் அனாரோக்கியங்கள் தேகத்துக்குள்ளே ஏழு கிரந்திகளினால் வருகின்றது. ஆத்மா பிரம்ம நாடியில் 7 ஆவது மையத்தில் நிவாசித்து சக்தியை கொடுத்து மற்றும் கிரந்திகளிலும் கூட நிவாசிக்கிறது. கிரந்திகளில் ஆறு தேகத்துக்குள்ளே வெவ்வேறு பாகத்தில் இருக்கும் போது ஏழாவது கிரந்தி சிரசில் புருவத்தின் நடுவில் மேல் பாகத்தில் சமமாக தலை நடு பாகத்தில் இருக்கின்றது. அதனை ஏழாவது கிரந்தியை கிரந்தி ராஜம் என்று சொல்லுவார்கள். இந்த கிரந்தி ராஜமில் கூட ஆத்மா நிவாசம் இருந்து மற்ற ஆறு மையங்களுக்கு தன்னுடைய சக்தியை கதிர்களினால் அனுப்பி கிரந்திகளை வேலை செய்யும்படி செய்து கிரந்திகள் ரசங்களினால் ஆரோக்கியம் அனாரோக்கியங்களை ஏற்படுத்துகின்றது. தேகத்தில் கர்ம பிரகாரம் வேலையின் அனுபவம் மற்றும் கர்ம பிரகாரம் ஆரோக்கிய அனுபவம் ஜீவனுக்கு இருக்கும். மேலும் வேலை நடப்பதற்கு தேவைப்படும் சக்தி நாடி மையங்களினால் பிரம்ம

நாடியில் இருந்து மற்றும் கிரந்திகளினால் கிரந்தி ராஜமிலிருந்து இருந்து ஆத்ம சக்தி (தெய்வ சக்தி) அனுப்புகின்றது. தேகத்தில் தெய்வம் இரண்டு விதமாக ஜீவிகளில் தன்னுடைய கடமையை நிறைவேற்றுகின்றது. அதற்காக தேவாலயங்களில் இரண்டு விதமாக மேல் ஏழு துவாரங்கள், உள்ளே ஏழு துவாரங்கள் வைத்து காட்டினார். ஆறு நாடி மையங்கள் நின்று போய் தேகத்தின் நினைவு போய் ஏழாவது மையத்தில் லக்னமாகும் போது மற்றும் தேகத்தில் ஆறு கிரந்திகள் நின்று போய் ஏழாவது கிரந்தி மேல் நினைவு வைத்தபோது தேகம் உள்ளே தெய்வம் தெரியும் என்னும் நோக்கத்தில் இரண்டு ரகமாக துவாரங்கள் வைத்தார்கள். இரண்டு விதானமும் மனசு நிறுத்துவதை பொருத்து ஆதாரப்பட்டிருக்கும் என்ற நோக்கத்தில் துவாரங்களை தெரிவித்தார்கள். பலத்திற்கும் ஆரோக்கியங்களுக்கும் உனக்கு உள்ளே இருக்கின்ற கடவுள் தான் காரணம் என்னும் அந்த கடவுளே உன்னுடைய தேகத்தில் இந்த விதமாக உட்கார்ந்து இருக்கிறார் என்பதை தெரிவிப்பதற்காக மேலே உள்ளே இரண்டு விதமாக துவாரங்களை வைத்தார்கள். திருப்பதியில் கோபுரம் மேல் ஏழு துவாரங்கள் உள்ளே ஏழு துவாரங்கள் காணலாம்.

## 6. கோபுரம்

தேவாலயங்களில் கோபுரம் அதற்கு ஏழு துவாரங்கள் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டோம். கோபுரத்திற்கு நடுவில் கீழ் இருந்து மேல் வரை துவாரங்கள் இருந்து ஏழு அடுக்குகளாக தெரிந்து கொண்டிருக்கும். அது மட்டுமல்லாமல் கோபுரத்திற்கு கீழ் இருந்து மேல் வரை என்றால் ஏழு அடுக்கு நீட்டமாக சுற்று முற்றும் பல பொம்மைகள் தெரிந்து கொண்டிருக்கும். அந்த பிரதிமைகள் சுங்காரத்திலிருந்து பக்தி வரை, நட்பில் இருந்து பகையாளி வரை, திருமணத்திலிருந்து சந்தானம் வேண்டுவது வரை, வாத்தியங்கள் வாசித்தல் நாட்டியம் ஆடுவது குதிரைகள் ஏறி திரிவது போர் செய்வது கணவன் மனைவி பக்தியாக இருப்பது சுங்காரங்கள் எத்தனையோ ரகங்கள் முதலியன மற்ற எத்தனையோ மனிதர்கள் ஜீவிதத்தில் நடக்கின்ற சம்பவங்களை காட்டியது போல் இருக்கும். இதன் போல எத்தனையோ ஜீவித

நிகழ்வுகள் தெரியும்படி பொம்மைகளை வைத்து பூர்வமுள்ள பெரியோர்கள் நோக்கம் என்னவென்று யோசனை செய்து பார்த்தால் சிறிது விவரம் தெரியும்.

பொம்மைகள் வடிவத்தில் கோபுரம். மேல் பொம்மைகள் தயார் செய்தது எல்லாம் மனிதர்களுடைய வாழ்க்கையில் நடக்கின்றது போல் இருக்கின்றது. பிறந்ததிலிருந்து குழந்தை பருவம் இருந்து இறுதி மரணம் வரை நடக்கும் வேலையெல்லாம் தேகத்தில் பிரம்ம நாடியில் நாடி மையங்களினால் ஆத்மா செய்ய வைக்கின்றது. தேகத்தில் மேல் பாகத்தில் இருந்து கீழ் வரை வியாபித்து இருந்த நாடிகளினால் தான் இந்த வேலைகள் எல்லாம் நடக்கின்றது என்னும் மற்றும் பிரம்ம நாடியில் மேலிருந்து வியாபித்து இருக்கின்றது ஆத்மா இந்த வேலை நடத்துவதற்கு சக்தியை கொடுக்கின்றது என்று தெரியும்படி கோபுரத்தின் மீது கீழ் இருந்து மேல் வரை எத்தனையோ நிகழ்வுகள் பொம்மைகளை வைத்தார்கள். தேவாலயங்களிடம் கடவுளுடைய பொம்மை இருக்க வேண்டும் தவிர நாட்டியம் செய்வது போர் செய்வது ஸ்ரீ புருஷர் சம்பந்தங்கள் எதற்கு இருக்க வேண்டும் என்னும் கேள்வி வரும்போது பதிலுக்காக தேடிய போது ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு அசைவுக்கும் கர்மங்கள் எல்லாம் நடப்பதற்கு ஆத்மாவே ஆதாரம் என்று தெரிவதற்கு கோபுரத்தின் மேல் பல விதமான பொம்மைகளை வைத்தார்கள். சர்வ காரியங்கள் ஆத்மாவினால் நடந்து கொண்டிருக்கும்போது ஏழு துவாரங்களில் இரண்டு பக்கம் காரியங்கள் காட்சிகளை வைத்தார்கள். கோபுரத்தின் மேல் பலவிதமான பிரதிமைகள் வைப்பதினால் தேகத்தின் உள்ளே கடவுள் செய்யல்பாடுகளை தெரிந்து கொள்ளுவார் என்பது பெரியவர்கள் நோக்கம்.

பலவிதமான பொம்மைகள் இருக்கும்போது கோபுரம் கர்ப்ப கோயிலுக்கு முன்பு எதற்கு வைக்க வேண்டும் என்பது ஒரு சந்தேகம் வரும்போது ஆத்மாவை ஆத்மா உடைய கடமைகளை தெரிவிப்பது கோபுரமானால் கோயில் முன்பு வைக்காமல் கோவிலுக்கு பக்கத்தில் வைத்திருக்கலாம் அல்லவா! அல்லது கோயிலுக்கு பின்புறம் வைத்திருக்கலாம் அல்லவா! இந்த விதமாக கேள்வி வரும். அதற்கு பதில் என்னவென்று பார்க்கலாம்.



## கோபுரம்

கோபுரம் மீது பொம்மைகள் வைப்பது ஆத்மாவை பற்றி தெரிவிப்பதற்கு ஒன்றானால் கோபுரத்திற்கு பக்கம் கோயிலை நிர்மிக்கலாம். அப்படி கோயில் பக்கம் மட்டுமல்லாமல் கோயில் முன்பு நிர்மிப்பதில் மற்றொரு விதானம் இருக்கிறது என்று தெரிகின்றது. கோயில் முன்பு கோபுரம் இருந்தால் கோயிலுக்கு உள்ளே போகின்றவர்கள் கோபுரத்தை தாண்டி போக வேண்டியது இருக்கும். அது பக்கத்தில் இருந்தால் கோபுரத்தை தாண்டி போவதற்கு வாய்ப்பு இருக்காது. கோயில் முன்பு கோபுரம் இருப்பதினால் தவறாமல் அதனைப் பார்த்த பிறகு கோயில் தெரியும். அப்படி மட்டுமல்லாமல் பக்கத்தில் இருந்தால் முதல் கோபுரத்தை பார்க்காமல் நேராக கோயிலை பக்தர்கள் பார்ப்பார்கள். அதனினால் கோயிலுக்கு போவதற்கு முதலிலேயே தெரிய வேண்டிய விஷயம் தெரியாது. ஆத்மா அல்லது கடவுள் தேகத்துக்குள்ளே இந்த விதமாக இருக்கிறார் என்பது தெரியாமல் போவதினால் மற்றொரு விதானம் கூட தவறிவிடும். அது என்னவென்றால்!

கோபுரம் மீது பலவிதமான பொம்மைகள் இருக்கும் அல்லவா! அவற்றினால் நம்முடைய மனசு நகரக்கூடியவை, மறந்து போன விஷயங்கள் ஞாபகத்திற்கு வரும்படி

செய்கின்றது, சுலபமாக மனசை கவர்ச்சிக்கின்றது முன்பு தெரியும்படி நிர்மித்து இருப்பார்கள். சிங்கார ஆண்களுக்கு கெட்ட பொம்மைகள், போர் வீரர்களுக்கு போராடுகின்ற பொம்மைகள், சங்கீத வீரர்களுக்கு வாத்தியம் பொம்மைகள் இப்படி முதலியன பொம்மைகள் முதலியனவர்களுக்கு தெரிந்து கொண்டு இருக்கும். எல்லா ரகம் கொண்டவர்களுக்கு எல்லாரகமான பொம்மைகள் தெரியும்படி கோபுரம் நிர்மாணம் இருக்கும். தேவாலயங்களுக்கு போகின்ற ஒவ்வொருவரும் முதலில் கோபுரத்தை தரிசனம் செய்துகொண்டு பிறகு கடவுளை தரிசனம் செய்ய வேண்டியது இருக்கும். ஒவ்வொருவரும் முதல் பார்க்க வேண்டியது கோபுரம் தான் அதனால் கோயில் முன்பு கோபுரத்தை நிர்மித்து வைத்தார்கள். கோயிலுக்கு சென்றவர்கள் முதல் கோபுரத்தை பார்க்கும் போது அவற்றின் மீது பொம்மைகள் தெரியும். யாருக்கு இஷ்டமான பொம்மைகள் அவர்கள் பார்ப்பதினால் கோயில் முன்பு போகின்றவர்களுக்கு அவர்கள் தலையில் சிந்திக்க செய்கின்றது. அப்படியே அவர்கள் தலையில் யோசனைகள் வரும்படி செய்வது கோபுரத்தின் நோக்கம். ஒவ்வொரு மனிதனுக்கும் யோசனைகள் இருப்பது சகஜம்தான் இருந்தாலும் கடவுளின் சன்னிதானத்தில் மனசை யோசனைகளில் இருந்து மாற்றி கடவுள் மீது வைக்க வேண்டும் என்பது முக்கியமான நோக்கம். கோபுரம் இடத்திற்கு போகும்போது மறந்து போனது மனதில் இல்லாதது ஞாபகம் வருகின்றது. அப்படி உள் விஷயங்கள் வெளியில் வரும் போது அது இல்லாமல் செய்து கொள்வது முக்கியமான கடமை என்னும், அப்படி செய்து கொண்ட போது எந்த யோசனை இல்லாத நிர்மலமான மனசை கடவுள் மீது நிற்க வைக்கலாம் என்பது பெரியோர்கள் நோக்கம்.

ஆலயம் இடத்திற்கு போனவர்கள் கோபுரம் மீது ஏழு துவாரங்கள் அர்த்தம் அவற்றின் பக்கத்தில் உள்ள பொம்மைகளை பார்த்து ஆத்மாவின் பெரிய வேலை தெரிந்த போது சிலருக்கு பொம்மைகளை பார்த்து யோசனையில் மூழ்குவது சகஜம் தான். அப்படி யோசனைகள் வந்த உடனே சிலர் கடவுளின் ஆலயங்களில் அப்படிப்பட்ட யோசனைகள் வரக்கூடாது என்று நினைத்து கட்டுப்படுத்திக் கொள்வார்கள். அப்படி வந்த யோசனைகள் கட்டுப்படுத்துவதினால் பிறகு சிறிது நேரம் வரை யோசனைகள் வராமல் மனசு கட்டுப்பட்டு

கடவுள் மீது நினைப்பு இருக்கும் என்று பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

கோபுரத்தின் மீது பொம்மைகளை பார்த்து கலங்கிய மனம் உடனே நிற்க்காமல் போனால் கோபுரம் தாண்டி போன பிறகு கொடிமரம் தெரிவதினால் அதனில் உள்ள எண்ணத்தில் மனசு கலங்காமல் நின்று போகும். கோபுரத்திலிருந்து ஆரம்பித்த மன இயக்கம் கோபுரம் தாண்டியும் நிற்காமல் போனால் கொடி மரத்தின் இடமாவது நிற்க வேண்டும். அங்கும் கூட நிற்காமல் போனால் இறுதிக்கு கர்ப்ப கோயில் முன்னாடி இருக்கின்ற மணி இடத்தில் ஆவது நிற்க வேண்டும். மனசு யோசனைகள் நிற்பதற்கு கொடிமரத்தில் குணங்கள் விவரம், மணி நாதத்தில் யோசனை நின்று போகுவதின் அர்த்தம் தெரியும்படி வைத்தார்கள். சகஜமாக இருக்கின்ற குணங்கள் யோசனை உருவமாக வந்து கொண்டிருக்கும் என்னும் கோபுரம் இடம் குணங்கள் தூண்டும் படி செய்து அப்படி தூண்டப்பட்ட மனிதன் குணங்கள் நின்று போகும்போது கடவுள் தெரிவார் என்னும் தெரிவிப்பதற்காக கோபுரம் பிறகு கொடிமரம் இறுதியில் கர்ப்ப கோயில் முன்னாடி மணியை மணி ஓசை வைத்தார்கள். மனசு நிறுத்த முடியாத பக்தி நிஷ் பிரயோஜனம் தெரிவிப்பதற்காக ஆலயங்களில் நிர்மித்த நிர்மானங்களில் கோபுரம் கூட ஒரு பாகம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். தேகத்தில் கடவுள் ஆத்மா உருவத்தில் இருக்கிறார் என்னும், கடவுளினால் ஒவ்வொரு அசைவுகள் நடக்கின்றது என்னும், எல்லா வேலைகள் ஏழு நாடி மையத்தினால் நடக்கின்றது என்பதை தெரிவிக்க கோபுரம் நிர்மித்தார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

## 7. ராட்சச உருவம்

கர்ப்ப கோயில் முன்பு இருக்கின்ற கோபுரம் பல ரகமான பிரதிமையில் நிறைந்திருக்கும் போது, கோபுரம் மேல் கலசத்திற்கு கீழ் பக்கம் கீழ் தெரியும்படி விக்ருத உருவம் இருக்கும். அந்த விக்ருத உருவம் நான்கு பக்கம் தெரியும் படி வைக்கப்பட்டிருப்பது கவனிக்கலாம். இந்த விதமாக

சம்பிரதாய முறையாக கட்டிய தேவாலயங்களில் தெரியும் என்று மற்றொரு தடவை தெரிவிக்கின்றோம். கோபுரம் மீது பொம்மைகள் அனைத்துக்கும் மேல் விக்ருத உருவம் வைத்தது இப்போதும் தமிழ் நாட்டில் ராய வேலூரில் பார்க்கலாம், ஆந்திராவில் கூட பல புராதன தேவாலயங்கள் மீது கூட பார்க்கலாம். அப்படியே கோபுரம் மீது விக்ருத உருவத்தை வைத்து காட்டுவதில் அர்த்தம் என்னவென்றால்! கோபுரம் மேல் பொம்மைகள் எல்லாம் நம்முடைய வாழ்க்கை நிகழ்வுகள் என்று தெரிந்து கொண்டோம். நம்முடைய வாழ்க்கை நிகழ்வு காரியங்கள் எல்லாம் கர்ம ஊக்கத்தால் குணங்களினால் நடக்கின்றது, மேலும் கோபுரம் மீதுள்ள நிகழ்வு பொம்மைகள் மாயாவிற்கு சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். இந்த மாயாவை விட்டு விலகிய போகும்போது தெய்வம் தெரியும் என்னும் தகவலின் மூலம் கோபுரம் பிறகு கோயிலில் கடவுளை வைத்தார்கள். முதல் கோபுரம் மீது தயார் செய்த பொம்மைகள் மாயாவின் ஆதிக்கத்தில் இருக்கின்றது என்பதை தெரிவிப்பதற்காக கோபுரம் மேல் பாகத்தில் நான்கு பக்கம் தெரிகின்றது போல் விக்ருத உருவம் வைத்தார்கள்.

கோபுரம் மேல் விக்ருத உருவம் மாயாவிற்கு அடையாளம். கோயிலுக்கு உள்ளே சௌமியமான உருவம் கடவுளுக்கு அடையாளம். தேவாலயங்களில் வெளி கோபுரத்தில் விக்ருத உருவம் மாயா என்னும் கோயிலில் சௌமிய உருவம் கடவுள் அடையாளமாக நிர்மித்தார்கள். கோபுரம் மீது விக்ருத உருவம் பொறுத்து அது மாயா என்னும் அதற்கு கீழ் பக்கம் பொம்மைகள் எல்லாம் அதனுடையது தான் என்று தெரிகின்றது. விக்ருத உருவம் கோரை பல் கொண்டு, கூர்மையான பார்வை கொண்டு, வாயைத் திறந்து கிட்டத்தட்ட சிங்கம் தலை உருவம் போல் இருக்கும். மற்றும் மாயாவின் ஆக்ருதியை சிம்மதலயாட்டம் என்று கூட சொல்வதும் நடக்கின்றது. சிங்கம் தலை போல் உள்ள சிம்ம தலயாட்டத்தில் மாயா எத்தனை ரகமாக இருக்கின்றதோ கோபுரத்தின் மீது பலவிதமான பொம்மைகள் காட்டினார்கள். “குணமயி மம மாயா துரத்தியயா” என்னும் பகவானுடைய வாக்கியம் பிரகாரம் மாயாவை ஜெயிப்பது துசாத்தியம் என்பது போல் மாயா மிருகம் பலம் கொண்ட சிங்கம் போன்றது கூட தெரிவித்தார்கள். வாஸ்துவமாக கடவுளை தெரிய வேண்டுமென்றால் சுலபமான வேலை

அல்ல. மாயாவை முழுமையாக ஜெயிக்க வேண்டியது இருக்கும். மாயா பலம் கொண்டது என்று பயப்பட வேண்டிய அவசியம் கூட இல்லை. என்னை சரணடைய வேண்டுகின்றவன் மாயாவை சுலபமாக ஜெயிக்கலாம் என்று கடவுள் தெரிவித்து "மாமேவையே பிரபத்தியந்தே மாயா மேத்தம் தரந்திதே" என்று கூறினார். பகவத்கீதாவில் கூறியது போல் கடவுளை தெரிந்து கொள்ளாமல் போனால் மனிதன் காட்டில் பசியாக இருக்கின்ற சிங்கமிடத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாது என்பது போல் பலவிதமான நிகழ்வுகள் வடிவத்தில், சொந்தக்காரர்கள் வடிவத்தில், மனைவி வடிவத்தில், பலவிதமாக இருந்து எதிர்ப்பு கொண்டிருக்கும் மாயாவிடம் இருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. ஏகே 47 ரைபில் இருக்கும்போது பலம் கொண்ட சிங்கத்தையும் கூட சுலபமாக சுட்டுவிடலாம். அதன் போலவே தெய்வ ஞானம் தெரிந்து சர்வ விதங்களாக கடவுளை வேண்டிக் கொண்டவன் கடவுளுடைய ஞானம் என்கின்ற துப்பாக்கியால் மாயா என்ற சிங்கத்தையும் சுலபமாக கொன்று விடலாம். அதனால் மாயாவிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றால் தெய்வ ஞானம் என்கின்ற ஆயுதம் வேண்டும்.

## 8. கொடி மரம்

கோபுரம் தாண்டிய பிறகு முன் கொடிமரம் தெரியும். கொடிமரம் என்றால் பதாக மரம் அல்லது கொடிமரம் என்று அர்த்தம் உள்ளது. ஒரு ராஜ்ஜியத்தை தெரிவிப்பது கொடி அல்லது ஒருவருடைய பெருந்தன்மையை தெரிவிப்பது கொடி. இங்கு தேவாலயங்களில் கொடிமரம் எதற்கு இருக்க வேண்டும்? இங்கு யாருடைய தலமையை தெரிவிப்பதற்கு இருக்கிறது என்ற கேள்வி வராமல் இருக்காது. தேவாலயங்களில் கடவுளுடைய ராஜ்ஜியத்தை தெரிவிப்பதற்கு கொடிமரம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். கொடி மரத்திற்கு முன்பு இருக்கின்ற கோபுரத்தில் ஆத்மா அல்லது கடவுளை தெரிவிப்பதற்கு ஏழு துவாரங்கள் இருந்தாலும் அவற்றின் சுற்று முற்றும் மாயாவுக்கு சம்பந்தப்பட்ட பொம்மைகள்

காட்டப்பட்டிருக்கின்றது. கோபுரம் மேல் மாயா விக்ருத உருவம் தரிசனம் கொடுக்கின்றது. என்றால் தேகத்தில் கடவுள் இருந்தாலும் மாயா தேகத்தை ஆவகித்து இருக்கிறது என்று தெரிகின்றது. அது மட்டுமல்லாமல் மேல் தெரிகின்ற பொம்மைகள் எல்லாம் மாயாவுக்கு சம்பந்தப்பட்டது. அதனால் அவற்றை பார்த்துக் கொண்ட மனசு சஞ்ஜலிக்கின்றது. இதனைப் பொறுத்து கோபுரத்திலிருந்து கொடிமரம் வரை மாயாவின் ராஜ்ஜியம் என்னும் கொடிமரத்திலிருந்து கடவுளுடைய ராஜ்ஜியம் என்று தெரியும்படி கொடிமரத்தை வைத்தார்கள். கொடி மரத்தின் மீது மாயாவின் அடையாளத்தை வைத்து அதற்கு மேல் மாயாவை விட மீறிய கடவுளின் அடையாளம் கூட காட்டினார்கள். அது எப்படி இருக்கின்றது விவரித்துக் கொள்ளலாம்.

தேவாலயங்களில் கர்ப்ப கோயில் முன்பு கோபுரம் பிறகு கொடிமரம் இருக்கும். கொடிமரம் இந்த அளவு தான் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் இல்லை. மற்றும் ஒவ்வொரு தேவாலயங்களில் ஒவ்வொரு ரகமான உயரம் இருக்கும். கொடிமரம் சின்னதாகவும் பெரியதாகவும் அதன் மேல் பாகத்தில் வரைபடத்தில் இருப்பது போல் மூன்று வரிசை மணிகள் இருக்கும். ஒவ்வொரு வரிசையில் ஆறு மணிகள் தொங்க விட்டு இருப்பார்கள். மணிகள் சிறியதாக இருந்து காற்றுக்கு அசையும் படி இருக்கும். மூன்று வரிசை ஒரே பக்கம் இருப்பதினால் பார்த்தவர்களுக்கு கொடி போன்றே தெரியும். மணிக்கு மேல் கம்பத்திற்கு மேல் பாகத்தில் எண்ணெயை ஊற்றி திரியை போட்டு பெரிய தீபம் ஏற்றுவதற்கு சாதகமாக தயார் செய்து வைத்துக் கொண்டிருப்பார்கள். பூர்வம் ஒவ்வொரு நாளும் சாயந்திரத்தில் ஏணி உதவியுடன் மேல் ஏறி தீபம் ஏற்றுவார்கள். சிறிது காலம் பூசாரிகளில் சோம்பேறித்தனம் ஏற்பட்டதினால், வயிறு கனமாக ஆனதினால் ஒவ்வொரு நாள் ஏறுவதற்கு பதிலாக மாதத்திற்கு ஒரு தடவை ஏறி தீபத்தை ஏற்றுவார்கள். மற்றும் சிறிது காலம் மாதத்திற்கு ஒரு தடவை கூட ஏற்றுவதை விட்டுவிட்டு வருடத்திற்கு ஒரு தடவை ஏற்ற ஆரம்பித்தார்கள். இறுதிக்கு இன்றைய காலத்திற்கு அந்த முறையும் இல்லாமல் போனது. ஆனால் பலான சம்பிரதாயங்கள் இருக்கும் என்பதற்கு குறிப்புக்காக சில இடத்தில் மட்டும் வருடத்திற்கு ஒரு தடவை வைப்பார்கள். அது கார்த்திகை பௌர்ணமியன்று கொடி மரத்தின் மேல்

தீபத்தை ஏற்றவார்கள். வருடம் அனைத்திற்கும் நினைத்து ஒரு நாள் மட்டும் ஏற்றுவார்கள் மேலும் வருடத்திற்கு 365 நாட்கள் என்னும் கணக்கிட்டு 365 வத்திகள் ஒரே திரியாக செய்து வைப்பது ஆங்காங்கே இப்போதும் இருக்கிறது. சில தேவாலயங்களில் பூர்வம் சம்பிரதாயம் பிரகாரம் இருக்க வேண்டிய கொடிமரம் இல்லாமலே போனது. சில தேவாலயங்களில் சம்பிரதாயம் சித்தமாக கொடிமரம் இருந்தாலும் அதற்கு மூன்று வரிசை மணிகள் இல்லாமல் போவது, ஒரு வரிசை மட்டும் இருப்பது அல்லது ஒரு மணி மட்டும் இருப்பது, மணிகளே இல்லாமல் போவதும், தீபத்தை ஏற்றவதற்கு எண்ணெயை ஊற்றி வைப்பதற்கு சாதகமாக இல்லாமல் இருப்பது போல் பலவிதமான கொடிமரங்கள் தெரிகின்றது. காலம் கடந்து கொண்டிருக்கும்போது சில ஆலயங்களுக்கு கோபுரமே இல்லாமல் போய் சில ஆலயங்களுக்கு கொடிமரம் இல்லாமல் போனது.



**கொடி மரம்**

சில ஆலயங்களில் இருந்தாலும் அது பார்ப்பதற்கு மட்டும்தான் மணிகள் தீபமும் இருக்காது. இதன் போன்ற சம்பிரதாயங்கள் எல்லாம் இல்லாமல் போய் இந்து மதம் தனித்துவம் ஹிந்து மதமாக தயாரானது. தேவாலயங்கள் நிர்மிப்பதற்கு தனித்துவமாக ஆகம சாஸ்திரம் இருக்கிறது என்று சொல்லுவார்கள், நாங்கள் வேத வேதாந்தங்கள் படித்தோம் எங்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்வார்கள், சம்பிரதாயங்கள் எரிந்து கொண்டு போனால்

அவற்றை பற்றி என்ன சொல்லிக் கொள்ளுவது. இந்து மதமாக இருந்தது காலம் கடந்து கொண்டிருக்கும்போது ஹிந்து மதமாக மாறிப் போனது, இந்து மதத்தில் பூர்வம் இருந்த எல்லைகள் நடைமுறைகள் இல்லாமல் போனது. அதனால் உலகமெல்லாம் இருந்த இந்து மதம் இறுதிக்கு பாரத நாட்டில் மட்டும் ஹிந்து மதமாக நிலைத்தது. எதுவாக இருந்தாலும் நம்முடைய ஆச்சார விவகாரம் காப்பாற்றுவது மீண்டும் நம்முடைய கடமை. அதனால் தேவாலயங்களில் பூர்வமுள்ள நடைமுறைகள் சம்பூர்ணமாக தெரிந்து கொள்ளலாம்.

தேவாலயங்கள் எல்லாம் பூர்வம் ஆன்மீக மையமாக இருந்தது என்று நினைத்தோம் அல்லவா! அதன் பிரகாரம் கொடி மரத்திலும் கூட ஆன்மீக ஞானம் எவ்வளவோ இருக்கின்றது. அது என்னவென்றால் நம் தேகத்தில் மனசு இடைவெளி இல்லாமல் விஷயங்கள் சிந்தனைகள் கொண்டு வந்து வைக்கும். அது எந்த விஷயமானாலும் எந்த வெறுப்புக்கு தொடர்புடையது, அல்லது காமம் (ஆசை) தானத்திற்கு சம்பந்தப்பட்டதோ, லோப அவதாரியத்திற்கு சம்பந்தப்பட்டதோ, அப்படியல்லாமல் மோக வைராக்கியத்திற்கு சம்பந்தப்பட்டதோ, அல்லது கர்வ வினையத்திற்கு சம்பந்தப்பட்டதோ, அல்லது கோபம் கருணைக்கு சம்பந்தப்பட்டதோ ஆகியிருக்கும். மனசுக்கு வரும் எந்த விஷயமாவதும் அது சாத்வீக, ராஜச, தாமச என்ற குணபாகத்தில் இருப்பது தான். மூன்று குணங்களை மாயா என்னும் பகவத்கீதாவில் பகவான் “குணமயி மம மாயா” என்று கூறியுள்ளார். மாயா மூன்று வடிவத்தில் இருந்து ஒவ்வொரு பாகத்தில் ஆறு வர்க்கமாக இருக்கின்றது. ஒவ்வொரு வர்க்கத்தில் இரண்டு ரகமான குணங்கள் இருக்கின்றது. உதாரணத்திற்கு ஆசை எதிர்ப்புக்கள் ஒரு வர்க்கம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதன் போன்ற வர்க்கங்கள் ஆறு சாத்வீகத்திலும் ராஜசத்திலும் தாமசத்திலும் இருப்பதினால் கொடிமரம் மீது அவற்றுக்கு அடையாளமாக மூன்று வரிசைகள் மணியை வைத்தார்கள். ஒவ்வொரு குணபாகத்தில் ஆறு வர்க்கங்கள் இருப்பதினால் அந்த விவரம் தெரிவிப்பதற்கு குணவிஷயங்கள் அடையாளமாக ஒவ்வொரு வரிசையில் ஆறு மணிகளை வைத்தார்கள். காற்று வீசும்போது மணிகள் காற்றுக்கு அசைந்து ஒன்றன்பின் ஒன்று சப்தம் செய்யும். ஒரு மணி

அசைந்தால் அதனுடைய சப்தம் முடிவதற்கு முன்பே மற்றொரு மணி அசைந்து சப்தம் செய்து கொண்டிருக்கும். அதன் போலவே நம் தேகத்தில் உள்ளே மனசு இடைவெளி இல்லாமல் விஷயம் ஞாபகங்கள் கொண்டு வந்து வைக்கும். ஒரு விஷயம் ஞாபகம் முடிவதற்கு முன்பே மற்றொரு விஷயத்தை கொண்டு வந்து வைக்கும். இந்த விதமாக ஒன்றின் பின் ஒன்று வரும் விஷயங்களுக்கு அடையாளமாக மணி ஓசை இருக்கும் படி மணிகளை வைத்தார்கள். மாயாவிதானத்தை மணிகள் மணி ஓசைகள் தெரிவித்து, அதனை நசுக்கும் ஞானம் இருக்கின்றது, அதற்கு மீறிய தெய்வ ஞானம் இருக்கின்றது, மணிக்கு மேல் பாகத்தில் கொடிமரம் இறுதியில் பெரிய தீபத்தை வைத்தார்கள். இதனை பூர்வம் ஞான ஜோதி என்று சொல்வார்கள். இந்திரிய விஷயங்களை விட மேலான ஞானம் இருப்பதால் மணிக்கு மேல் பாகத்தில் ஜோதியை வைத்தார்கள். விஷயங்கள் மூலம் உற்பத்தியாகும் கர்மங்களை எரிப்பது ஞான அக்னி மேலும் மணிகளை குண விஷயங்களாக தெரிவித்து அதன் மேல் பாகத்தில் ஞான அக்னிக்கு சின்னமாக தீபத்தை வைத்தார்கள். கோபுரத்தின் மீது பொம்மைகளை பார்த்து ஆலோசனைகள் தலையில் அசையும் போது இதுவரை நீ மாயா என்னும் இருட்டு இடத்தில் நீ இருக்கிறாய். கொடி மரத்திலிருந்து தெய்வம் இடத்திற்கு ஞான வெளிச்சத்திற்குள் பிரவேசிக்கிறாய் என்று தெரியும் படி எரிகின்ற தீபத்தை கொடி மரத்தின் மேல் ஏற்றுவார்கள். பூர்வம் கொடிமரம் விவரம் தெரிந்தவர்கள் அங்கே அவர்கள் ஆலோசனைகள் இல்லாமல் செய்வதற்கு முயற்சி செய்வார்கள். கொடிமரம் அர்த்தம் பிரகாரம் அவர்களில் உள்ள ஞானத்தினால் ஆலோசனைகள் சிலர் இல்லாமல் செய்து கொண்டார்கள். சிலருக்கு மட்டும் விஷயத்தின் பலம் அதிகமாக இருப்பதினால் அங்கே நிற்காமல் இன்னும் விஷயங்கள் தலையில் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் இறுதிக்கு கர்ப்ப கோயில் முன்பு இருக்கின்ற மணி இருக்கும் இடத்தில் இல்லாமல் செய்து கொள்வார்கள். மாயாவின் பலத்தினால் நிற்காமல் இருக்கின்ற ஆலோசனை இறுதிக்கு அது கூட இல்லாமல் போய் நிர்மலமான மனசு கடவுளிடம் லக்னம் ஆகும் படி மணிகளை வைத்தார்கள். மணி ஓசையால் கொடிமரத்திடம் மனம் நிற்பது கண்டிப்பாக நடக்கும்.

# 9. மணி

ஒவ்வொரு தேவாலயங்களில் மூல பிரதிமை முன்பு ஒரு மணியை தொங்க வைத்து இருப்பார்கள். ஆலயத்திற்கு உள்ளே நுழையும் பக்தர்கள் (ஆஸ்திகர்கள்) முதல் மணியை அடிப்பது சம்பிரதாயமாக இருக்கின்றது. சாதாரணமாக மணியை அடிக்காமல் கடவுளை நமஸ்கரிக்க மாட்டார்கள். சிலர் குள்ளமாக இருக்கின்றவர்கள் எட்டி சிரமப்பட்டாவது மணியை அடித்து நமஸ்கரிப்பது பழக்கமாகி போனது. அதன் போல எதற்கு மணியை அடிக்க வேண்டும் என்று கேள்வி கேட்டால் இது முறை என்று சொல்கின்றார்கள். மற்றும் எந்த பக்தனும் விவரமாக சொல்லாமல் போகின்றார்கள். பக்தர்கள் ஆடு மந்தைகளாக ஒருவர் செய்யும் வேலையை விவரித்து கொள்ளாமல் இன்னொருவர் செய்கின்றார் என்றும், ஒரு வேளை ஆலயங்களில் பூஜை செய்கின்றவருக்கு இந்த விஷயம் தெரிந்திருக்கும் என்ற நோக்கத்தில் அவர்களை கேள்வி கேட்டால் “கடவுள் தூங்கும் நிலையில் இருப்பார் மணி ஓசை கேட்டு பக்தர்கள் வந்தால் எழுந்திருப்பார்” என்று சொல்கின்றார்கள். அப்படியானால் கடவுளை எழுப்புவதற்கு ஒரு பக்தன் மணி அடித்தால் போதுமல்லவா! பின்வந்த பக்தன் எதற்கு மணியை அடிக்க வேண்டும். ஒரு பக்தனை பார்த்த பின் இரண்டாம் அவனை பார்க்காமல் தூக்கத்திற்கு போகின்றவர் கடவுளா? என்று கேட்டதற்கு விவரித்து சொல்லாமல் இது நியாயமான கேள்வி அல்ல என்று சொல்பவரும் கூட இருக்கின்றார்கள்.

எல்லாவற்றக்கு அப்பாற்பட்ட யோகிகள், தேவாலயங்களில் அற்புதமான அர்த்தங்களை கொடுக்கின்ற ஆத்மஞானத்தில் இணைந்தவர்கள், மணி ஓசை பற்றி முதலிலேயே கொடிமரத்திடம் தெரிவித்தார்கள், மணி ஓசை விஷயம் அலை என்று தெரிவித்தார்கள். மனிதன் தேவாலயங்கள் உள்ளே வருவதற்கு முதலிலேயே பல விஷயங்கள் நிறைந்திருக்கும். அப்படிப்பட்டவர் எல்லா விஷயங்கள் நினைவு விட்டுவிட்டு ஒரு நொடியாவதும் ஆலயம் உள்ளே பிரதிமை மீது மனசு நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே மணியை பிரதிமை முன்பு வைத்தார்கள். ஒரு தடவை கோயிலில் மணியை அடித்து மணி ஓசை கேளுங்கள். டன்ங்.......ங்......ங்....ங்...ங் நீளமாக

ஒரு சீரான சப்தம் கேட்கும். பூர்வமுள்ள பக்தர்கள் அந்த விதமாக மணியை அடித்து அந்த மணி ஓசை மீது மனநிலையை வைத்து கேட்பார்கள். அப்படியே கேட்பதால் குரங்கு போல பல விஷயங்கள் மீது சுற்றுகின்ற மனசு அந்த ஓசையின் மீது ஐக்கியமாகி மணி ஓசை ஒரு நிலைக்கு வரும்படி மனசு கூட ஒரே நிலைக்கு வரும். ஓசை ஒரு நிலையாக சப்தம் வந்து கேட்காமல் போனது போல் மனசு ஒரே நிலையில் நின்று நகராமல் போகும். அந்த நேரத்தில் ஒரு நொடியாவது மனசை நிறுத்தி பிரதிமையின் மீது பார்வையை நிறுத்துவது நல்லதென்று பூர்வம் இருந்த யோகிகள் எண்ணம்.



மணி

இந்த நாள் ஒரு தடவை மட்டுமல்லாமல் கனகணம் என்று பல தடவை மணியை அடிக்கின்றதால் சிறிதளவு கூட அர்த்தமில்லை. எதற்கு மணியை அடிக்கின்றோம் என்று தெரியாமலே முன் இருக்கின்றவர் அடித்தான் அல்லவா! பின்னால் இருக்கின்ற நான் அடிக்க வேண்டும் என்ற நோக்கத்தை தவிர மணி ஓசை மனதை நிறுத்துவதற்கு என்று தெரிந்து கொள்ளாமல் போனார்கள். மனசை நிறுத்திக் கொள்ளாமல் போனால் பூஜைகள் வீணாகும். அதற்காக ஒரு தடவை மணியை அடியுங்கள், அந்த ஓசையின் மீது மனதை வையுங்கள். ஓசை நிலையில் மனசை ஒரு தடவை நிறுத்தாமல் வெளியில் உள்ள விஷயங்கள் ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தாலும் இரண்டாவது தடவை மணியை அடித்து மணி ஓசை முடியும் வரை கேட்டு மனசை நிறுத்தி பூஜை செய்தால் பிரையோஜனம் இருக்கும். அப்படி அல்லாமல் கோயிலுக்கு சாதாரணமாக போய், சாதாரணமாக மணியை அடித்தால் பூஜை கூட சாதாரணமாகவே இருக்கும்.

மேலும் சாராம்சமாக இருக்காது என்று கிரகித்துக் கொள்ள வேண்டும்.

## 10. சிம்மதலயாட்டம்

கோபுரம் தாண்டிய பிறகு கொடிமரம், கொடிமரத்தை அர்த்தம் செய்து கொண்டு தாண்டிய பிறகு கர்ப்ப கோயில் முன்பு மணி, மணியைத் தாண்டி சிறிது முன்னால் வரும்போது ஏழாவது துவாரம் உள்ளே தெய்வ பிரதிமை இருக்கும். பிரதிமை எந்த உருவத்தில் இருந்தாலும் அதனை அந்த கோயிலுக்கு மூலவிராட் என்று சொல்லுவார்கள். உருவம் இல்லாத தெய்வத்தை உருவமுள்ள பிரதிமையை கர்ப்ப கோயிலில் வைப்பது எதற்கு என்னவென்று வேறு மதங்களில் இருப்பவர்களுக்கு சந்தேகம் வரும். அதற்கு பதில் என்னவென்றால்! அணுஅணுவில் வியாபித்து கொண்டிருக்கின்ற உருவமில்லாதவர் பரமாத்மா. அனைத்தில் வியபித்திருக்கின்ற பரமாத்மாவை இந்து மதத்தில் "புருஷோத்தமன்" அல்லது பரமாத்மா என்னும், இஸ்லாம் மதத்தில் "அல்லாஹ்" என்னும் கிறிஸ்துவ மதத்தில் "எஹோவா" என்று சொல்லப்பட்டது. யார் எப்படி அழைத்தாலும் ஒருவரை தான். அப்படிப்பட்டவரை தெரிவிக்க வேண்டும் என்றால் ஏதோ ஒரு நடைமுறை தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேவாலயங்கள் சிருஷ்டிக்க நடந்தது. தெய்வம் நிராகாரன் என்பதற்கு உருவம் இல்லாத என்றால் மூக்கு முகம் கண்கள் முதலியன தேகம் உருவம் இல்லாத கல் குன்றத்தை காண்பித்தார்கள். தேகம் உருவம் இல்லாத லிங்கத்தை சில ஆலயங்களில் வைத்த போதும் சில கோவில்களில் மட்டும் உருவம் கொண்ட பிரதிமைகளை வைத்தார்கள். உதாரணத்திற்கு திருப்பதி வெங்கடேஸ்வர சுவாமியை எடுத்துக் கொள்ளலாம். அங்கு உருவம் கொண்ட பிரதிமையை வைத்தார்கள். கடவுள் நிராகாரன் என்பதற்கு லிங்கத்தை வைத்து அதே கடவுள் எப்போதாவது சாகார உருவத்தில் வருவார் என்பதற்கு மனித பிரதிமை வைத்தார்கள். கடவுள் உருவம் இல்லாதவராக இருந்து தர்ம பிரதிஷ்டாபனத்திற்கு தன்னை தானே சிருஷ்டித்துக் கொண்டு பரமாத்மா பிரதிநிதியாக அல்லது பரமாத்மா தூதாவாக பூமி

மீது மனித ஜென்மம் எடுக்கின்றார் என்னும் கீதாவில் கூட கூறியுள்ளார். எல்லையில்லாத பரமாத்மா சமாச்சாரத்தை கொண்டு வருபவர் ஆனதினால் அப்படிப்பட்டவரை அவதூதா என்று சொல்லப்பட்டது. அதே விஷயத்தின் மேல் இஸ்லாம் மதத்தில் கூட தெய்வ தூதா (பைகம்பர் அல்லது கலிபா) என்று கூறினார். பரமாத்மாவை தேவாலயங்களில் நிராகாரமாக தெரிவிப்பதற்கு லிங்கத்தையும், சாகாரமாக தெரிவிப்பதற்கு பிரதிமையும் நிர்மித்தார்கள். பிரதிமை இருக்கின்ற திருப்பதி வெங்கடேஸ்வரர் ஆலயத்தில் வெங்கடேஸ்வரர் பிரதிமை சுற்று முற்றும் கிரீடம் மேல்பாகத்தில் இருந்து சிம்ம தலயாட்டத்தை வைத்தார்கள். கிரீடம் மேல் பாகத்தில் சிங்கம் தலை வடிவம் கொண்ட உருவம் பக்கத்து வரை வியாபித்து இருக்கின்றது.

அப்படி இருப்பதில் அர்த்தம் என்னவென்றால்! உருவம் கொண்ட பகவான் கூட மாயாவின் எல்லையில் இருக்கிறார் என்று தெரிகின்றது. அப்படிப்பட்ட பகவானை தெரிவிய வேண்டும் என்றால் அவரை சுற்று முற்றும் ஆவகித்து இருக்கின்ற (சைத்தான் அல்லது சாத்தான்) தெரிந்து அதனை தாண்ட வேண்டியது இருக்கும். அவரை சுற்றி உள்ள மாயாவை தாண்டாமல் போனால் அவதூதாவாக வந்தவர் சாதாரண மனிதனாகவே தெரிவார். அவருடைய மாயாவை அடையாளித்து





சிம்ம தலயாட்டம்

தாண்டினால் வந்தவர் பகவான் என்று தெரியும். அப்படி அடையாளிக்காமல் போனால் எத்தனையோ தடவை மாயாவில் சிக்கிக் உள்ளோம். நான் வந்த போதும் நீங்கள் என்னை அடையாளிக்கவில்லை பிறகு வருகின்ற போதும் கூட என்னை அடையாளிக்க மாட்டீர்கள் என்று பரமாத்மா கூறினார். அதிக பலத்தை விலங்கு பலம் என்று சொல்வார்கள். மனிதர்களை விட விலங்குகளுக்கு பலம் அதிகமாக இருக்கும், மேலும் முடியாத போது எதிர் இருப்பவரை விலங்கு பலம் என்று சொல்லுவோம். விலங்குகளில் ராஜா சிங்கம். மாயா அதிகம் பலம் கொண்டதால் அதனை சிங்கதோடு ஒப்பிட்டார்கள். கடவுள் பக்கம் போக வேண்டும் என்றால் அவனுடை முயற்சியை அதிகம் பலம் கொண்டு விக்னம் (தடங்கல்) செய்வது மாயா. அப்படிப்பட்ட மாயாவை ஜெயிப்பது மிக கடினமானது என்று கீதாவில் கூட கூறினார். அந்த விஷயம் தெரிவிப்பதற்காக கடவுள் என்னும் எண்ணம் கொண்ட வெங்கடேஸ்வரர் பிரதிமை சுற்றி சிம்ம தலயாட்டத்தை வைத்தார்கள். சிங்கம் பலம் கொண்ட மாயா தலையில் யோசனை வடிவமாக, வெளியில் மனைவி கணவன் உறவு வடிவமாக, பல காரியம் உருவத்தில் எப்படியாவதும் இருக்கலாம். சிம்ம தலயாட்டத்தில் காட்டப்பட்ட மாயாவை ஜெயிப்பது கஷ்டமாக இருந்தாலும் நம்முடைய முயற்சியை விடக்கூடாது. சிங்கம் எதிர் நின்று பலத்தை உபயோகித்து ஜெயிக்க முடியாது. புத்தி பலம் உபயோகித்து எவ்வளவு பெரிய சிங்கமாக இருந்தாலும் எத்தனை சிங்கங்கள் இருந்தாலும் நம்முடைய ஆதீனத்தில் இருக்கும் படி நம்முடைய வார்த்தை கேட்கும் படி செய்து கொள்ளலாம். அதன் போலவே மாயா என்னும் சிங்கத்தை ஆர்வ ஞானம் என்னும் புத்தியினால் ஜெயிக்கலாம். மாயாவை ஜெயித்தால் தான் கடவுள் தெரியபடுவார் என்பதை தெரிவிப்பதற்கு தேவாலயங்களில் சிம்ம தலயாட்டத்தை வைத்தார் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

## 11. கர்ப்பக்கோயில்

தேவாலயங்களில் மூலவிராட் பிரதிமை இருக்கின்றதை கர்ப்ப கோயில் என்று சொல்கின்றோம். கர்ப்பத்திலிருந்து சஜீவமாக பிறக்கின்றவர் பகவான். உலகத்தில் ஒரு பகவான் தவிர எந்த மனிதனும் தாய் கர்ப்பத்திலிருந்து சஜீவமாக பிறக்க மாட்டார். அனைத்திலும் வியாபித்து இருக்கின்ற பரமாத்மா தாய் கர்ப்பத்திலிருந்து சஜிவமாக பிறப்பார். ஓரிடத்தில் இருக்கின்ற ஜீவாத்மா தாய் கர்ப்பத்திலிருந்து வெளியில் வந்த தேகத்தில் மட்டும் சேரும். மனிதன் பகவான் ஒரே விதமாக தெரிகின்றபோது பிறப்பிலேயே எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது என்னும், நம்மை போல் கர்மம் பிரகாரம் பிறக்க மாட்டார் என்றும், தாய் தேகத்திலும் கூட அணுஅணுவில் வியாபித்து இருக்கின்றவர் தாய் தேகத்திலேயே சஜிவமாக பிறப்பார் என்பதை தெரிவிக்கும் அர்த்தத்தில் அவரை பகவான் என்று சொல்கின்றோம். அதனால் பகவானை அடையாளமாக நிர்மித்த ஆலயங்களில் கடவுள் பிரதிமை இருக்கின்ற இடத்தை கர்ப்ப கோயில் என்று சொல்கின்றோம். கர்ப்ப கோயிலில் கர்ப்பத்தில் இருந்து என்றால் பாகத்திலிருந்து (தாய் கர்ப்பத்திலிருந்து) பிறந்த பகவான் இருப்பார் என்று அர்த்தம். எங்கேயாவதும் உருவமுள்ள பிரதிமை இருக்கின்றதை கர்ப்ப கோவில் என்று சொல்ல வேண்டும். மூக்கு முகம் உருவமில்லாத லிங்கம் உள்ள ஆலயங்களில் லிங்கம் இருக்கின்ற இடத்தை கர்ப்ப கோயில் என்று சொல்லக்கூடாது. எதற்கு என்றால் பரமாத்மா அடையாளம் உள்ளவர் பிறப்பவர் அல்ல. நிராகார சொரூபத்தை தெரிவிக்கும் லிங்கம் இருக்கின்ற இடத்தை கர்ப்ப கோயில் சொல்வது மிக தவறானது. மற்றும் சம்பிரதாயத்திற்கு எதிர்ப்பாக இருக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். லிங்கத்திற்கு சிம்ம தலயாட்டம் இருக்கக்கூடாது. அதன் போலவே லிங்கம் இருக்கின்ற இடத்தை கர்ப்ப கோயில் என்று சொல்லக்கூடாது. உருவமுள்ள பிரதிமை இருக்கின்ற இடத்தை கர்ப்ப கோயில் என்று சொல்ல வேண்டும். அதன் போலவே பிரதிமை உருவத்திற்கு தவறாமல் சிம்ம தலயாட்டம் இருக்க வேண்டும். பரமாத்மாவின் அம்சம் பூமி மீது அவதரித்தாலும் பரமாத்மா அணுஅணுவில் வியாபித்து இருப்பார். பிறந்த உருவத்திற்கு என்றால் பகவானுக்கு தாய் கர்ப்பம் இருக்கும்.

நிராகாரமான பரமாத்மாவுக்கு தாய் கர்ப்பம் இருக்காது, அவருக்கு பிறப்பும் இல்லை. அதனால் உருவமுள்ள பகவானை உருவத்திற்கு சமமாக இருக்கின்ற ஸ்ரீரங்க தேவாலயத்தை கர்ப்ப கோயில் என்று சொல்லலாம். உருவம் இல்லாத பரமாத்மாவுக்கு சமமாக இருக்கின்ற லிங்கம் உள்ள ஆலயத்தை கர்ப்ப கோயில் என்று சொல்லக்கூடாது. அதன் போலவே உருவம் இருக்கின்ற பகவான் மாயாவில் சிக்கி திரிகின்றவராக இருக்கின்றதினால் மாயாவிற்கு சமமாக சிம்ம தலயாட்டத்தை உருவமுள்ள பிரதிமைக்கு வைக்க வேண்டும். உருவம் இல்லாத பரமாத்மா மாயாவின் உள்ளே சிக்கி இருக்க மாட்டார் அதனால் பரமாத்மா குறிப்பாக இருக்கின்ற லிங்கத்திற்கு சிம்ம தலயாட்டம் வைக்கக்கூடாது. உருவம் கொண்ட பகவானுக்கு ஆயுதம் தேவை, உருவம் இல்லாத கடவுளுக்கு (பரமாத்மாவுக்கு) ஆயுதங்கள் தேவையில்லை, அவரே ஆயுதங்களில் வியாபித்து இருக்கின்றவர் அதனால் லிங்கத்திடம் ஆயுதங்கள் இருக்காது மேலும் வைக்கக்கூடாது. உருவம் இருக்கின்ற பிரதிமைக்கு மட்டும் ஆயுதங்கள் இருக்க வேண்டும்.

## 12. சங்கு சக்கரங்கள்

திருப்பதி முதலியன தேவாலயங்களில் சங்கு சக்கரம் நாமங்கள் மட்டும் பிரதிஷ்டித்து இருப்பதும் வைப்பதும் கவனிக்க வேண்டும். தமிழ் நாட்டில் சில தேவாலயங்களில் நுழைவு வழியின் மேல் சங்கு சக்கரம் நாமம் தரிசனம் இருக்கும். அதன் போலவே தேவதை படங்களோடு சங்கு சக்கர நாமங்கள் சித்திரங்கள் கூட இருக்கின்றது. எல்லாவற்றை விட திருப்பதி திருமலையில் அதிகமாக சங்கு சக்கர நாமங்கள் தரிசனமாகும். அதன் போலவே நாமங்கள் கொண்ட தேவதைகள் கையில் கூட சங்கு சக்கரங்கள் இருக்கும். தேவாலயங்களில் ஒவ்வொன்றிலும் ஆத்ம ஞானம் இருக்கும்போது சங்கு சக்கரம் நாமங்களுக்கு கூட விசேஷமான அர்த்தம் இருக்கும். அது என்னவென்றால்!

ஒரு போர் நடக்கும் என்று நினைத்துக் கொள்ளுங்கள், அங்கு சப்தங்கள், கூச்சல்கள், சங்கு

சப்தங்கள், டங்கராவங்கள் முதலியன பெரிய கோலாகலம் ஏற்படும். பிறகு நாசனம் ஏற்படும் அதன் போலவே கர்மம் நாசனம் ஆகுவதற்கு யோக சாதனை என்ற போர் செய்ய வேண்டும். அந்த யோக சாதனை போர் சப்தம் இல்லாமல் ஆரம்பிக்காது. குருவிலிருந்து ஆரம்பிக்கின்ற ஞான போதனை சப்தம் முதல் உருவாக வேண்டும். ஞான போதனை என்னும் சப்தம் தேகத்தின் உள்ளே மனசுக்கு சேர்ந்த உடன் யோக சாதனை என்ற போர் ஆரம்பிக்கும். சின்ன சண்டையிலிருந்து பெரிய போர் வரை சப்தம் இல்லாமல் சிறிதளவு கூட நடக்காதது போல், கர்மம் என்னும் எதிரி மீது யோக சாதனை என்னும் போர் ஞானம் சப்தம் இல்லாமல் சிறிதளவு கூட நடக்காது. அதனால் ஜென்மங்கள் இல்லாமல் செய்வதற்கு, ஆத்மா தரிசனத்திற்கு முதல் ஞானம் தேவை பிறகு யோகம் தேவை. ஞானம் இல்லாமல் யோகம் வராது. “ஸிரேயோகி ஞானமப்யசாத், ஞானாத்தியானம் விஷிஷ்டதே” என்று பகவத்கீதாவும் கூட போதிக்கின்றது.

சங்கிலிருந்து ஒலி பிறக்கிறது சப்தம். ஞானம் சப்தத்தில் கூடி இருக்கின்றது. அதனால் ஞானம் முதலில் ஒவ்வொரு மனிதர்களுக்கும் இருக்க வேண்டும்



**சங்கு சக்கரம் நாமம்**

என்னும் நோக்கத்தில் நாமத்திற்கு இடது பக்கம் சங்கை வைத்தார்கள். ஞானத்தினால் யோக சாதனை செய்கின்றவனுக்கு யோகம் கிடைத்து கர்மத்தை எரித்து விடும். அதனால் கர்மம் நாசனம் ஆகுவதற்கு சக்கரத்தை காட்டினார்கள். முதலில் ஞான சப்தம் என்னும் சங்கால் ஊதி பிறகு யோக சாதனை என்ற போர் செய்தால் யோக சக்தி என்கின்ற சக்கரத்தினால் கர்மம் என்னும் எதிரியை அழிக்க

வேண்டும் என்ற நோக்கத்தில் வலது பக்கத்தில் சக்கரத்தை வைத்தார்கள். ஞானம் இல்லாதது ஞான சக்தி இல்லை. மேலும் சங்கு இல்லாமல் சக்கரத்தை எங்கும் வைக்க மாட்டார்கள். எங்கேயாவதும் சங்கு சக்கரம் இரண்டு அடையாளங்கள் இருக்கும். இந்த இரண்டு அடையாளத்திற்கு நடுவில் நாமம் இருக்கும். அப்படி இல்லையென்றால் நாமம் கொண்ட கடவுளாவதும் இருப்பார். இந்த விதமாக சங்கு சக்கரம் நடுவில் நாமம் அல்லது நாமம் உள்ள கடவுள் இருப்பது காரணம் என்னவென்றால்!

ஞானம் தெரிந்து யோகத்தை அனுசரிக்கின்றவர்களுக்கு யோக சக்தியினால் (ஞான சக்தியினால்) கர்மம் எரிந்து போகும். அப்படிப்பட்டவன் மோக்ஷம் அடைவான். அதனால் பிரம்ம நாடியாக அடையாளம் அடைந்த நாமத்தை அங்கு காட்டினார்கள். நாமத்தின் மேல் பாகத்தில் இருக்கின்ற முனை சூன்யத்தை தெரிவிக்கின்றது. மேலும் சங்கு சக்கரம் இருந்த நான் மோக்ஷத்தில் இருக்கிறேன் என்னும் தேவாலயத்தில் உள்ள பிரதிமை தெரிவிக்கின்றது. அதன் போலவே ஞானம் யோக சக்தி இருக்கின்றவன் மோக்ஷத்தை அடைவான் என்னும் ஞான சின்னமாக சங்கை, மோக்ஷம் சின்னமாக நாமத்தை, கர்ம நாசனம் செய்யும் சக்தி சின்னமாக சக்கரத்தை காட்டப்பட்டது. பெரியோர்கள் வைத்த சின்னங்களில் இருந்த அவற்றுக்கு சம்பந்தப்பட்ட ஆத்மா ஞானம் விவரங்கள் இந்த நாட்களில் இல்லை. படிக்கின்றவர்கள் நன்றாக அர்த்தம் செய்து கொண்டு அனுசரிக்க வேண்டும்.



## 13. ஆயுதங்கள்

ஒரு சிவாலயங்களில் லிங்கத்துக்கு தவிர உருவம் கொண்ட எல்லா தேவதைகளுக்கு ஆயுதங்கள் இருப்பதை பார்த்திருப்பீர்கள். அந்த ஆயுதங்களும் கூட சிலருக்கு ஒன்று மற்ற சிலருக்கு இரண்டிலிருந்து ஏழு அல்லது எட்டு வரை இருக்கின்றதை பார்த்திருக்கிறோம். தேவதைகளுக்கு ஆயுதங்கள் வைப்பதில் உள்ள அர்த்தம் என்னவென்று கூட நாம் தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கும். வாயு என்றால்

காற்று நம்முடைய மூக்கு துவாரத்தில் ஆடுகின்ற சுவாசை வாயு தான் காற்று. சுவாசையின் கணக்கு பிரகாரமே நாம் வாழும் காலம் இருக்கும். ஒரு மனிதன் வாழ்வது சுவாசையினால் அதனால் வாயு அவனுடைய வாழ்க்கை அளவு. அதனால் பூர்வம் ஜோதிடம் பிரகாரம் அவனுடைய வாழ்க்கை இதுவரை இருக்கும் என்னும் அவனுடைய வாயு இவ்வளவு இருக்கிறது என்று சொல்லுவார்கள். அதுவே கால கடந்து கொண்டிருக்கும்போது வாயு என்னும் சொல் ஆயுள் ஆக மாறியதென்னும் முதலில் கூட சொல்லிக் கொண்டோம். மாறிய சொல் பிரகாரம் ஆயுள் முடியும்படி செய்வது ஆயுதம்.



ஆயுதங்கள்

ஆயுளை அனுசரித்து பிறந்தது ஆயுதம் என்ற சொல். அப்படிப்பட்ட ஆயுதங்களை தேவதைகளுக்கு வைப்பதில் உள் அர்த்தம் கண்டிப்பாக இருக்கும். இதற்கு முன்பு சங்கு சக்கரங்களை பற்றி சொல்லியபோது சக்கரம் கர்மம் நாசனம் சின்னம் என்று தெரிவித்தோம். அதன் போலவே இங்கு கூட பல ஆயுதங்களை காட்டுவதில் சூட்சுமாக இருக்கின்ற பலரகமான கர்மங்களை ஞானம் என்னும் ஆயுதங்களினால் கண்டிப்பது என்று அர்த்தம் இருக்கின்றது. எப்போது கர்மம் நாசனம் ஆகுமோ அப்போது ஜீவனுக்கு மோக்ஷம் கிடைக்கும். அந்த விதானத்தை தெரிவிப்பதற்கு பகவானிடம் இருக்கின்ற ஞானம் என்கின்ற வாள் நம்முடைய கர்மம் மீது உபயோகித்துக் கொள்ள வேண்டும். அப்படி நடக்க வேண்டும் என்றால் நாம் பகவானை முழுமையாக நம்பிய போது அவரிடம் இருக்கின்ற ஞானத்தினால் நம்முடைய கர்மம் இல்லாமல் போகும்.

# 14. நாமம்

ஈஸ்வர லிங்கம் மீது விபூதி ரேகைகளுக்கு க்ஷர அக்ஷர புருஷோத்தமர்கள் என்னும் அர்த்தம் இருக்கும்படி த்ரி நாமத்திற்கு கூட வேறொரு விதமாக ஆத்ம ஞானத்தை போதிக்கும்படி அர்த்தம் இருக்கும். அது என்னவென்றால்! ஒவ்வொரு ஜீவராசி தேகத்தில் 3லட்சத்தில் 50ஆயிரம் நாடிகள் இருக்கின்றன என்று கேட்டோம். அதில் 72ஆயிரம் முக்கியமானது. அவற்றை விட முக்கியமானது 10 மட்டும்தான். அந்த பத்தை விட மிக முக்கியமானது மூன்று நாடிகள் இருக்கின்றது. அது சூரிய நாடி, சந்திர நாடி, பிரம்ம நாடி. இந்த மூன்று நாடிகள் நம் தேகத்தில் உள்ளே நடுவில் தலையில் இருந்து ஆசனவாய் வரை முதுகெலும்பு அருகில் இருக்கின்றது. முதுகெலும்பு நடுவில் பிரம்ம நாடி இருக்கின்றது. அதற்கு இரண்டு பக்கத்தில் சூரிய சந்திர நாடிகள் பாசிகள் மாலை போல் வியாபித்து இருக்கின்றது. இதில் முக்கியமான நாடி நடுவில் இருக்கின்ற பிரம்ம நாடி. வலது பக்கம் இருக்கின்றது சூரிய நாடி, இடது பக்கம் இருக்கின்றது சந்திர நாடி என்று பெயர் இருக்கின்றது. சூரிய சந்திர நாடியில் நம்மில் உள்ளே இருக்கின்ற மனசு இருக்கின்றது. நடுவில் இருக்கின்ற பிரம்ம நாடியில் ஜீவாத்மாவை விட அதீதமான சர்வ ஜீவராசிகளில் இணைந்து உள்ள ஆத்மா இருக்கின்றது. சூரிய சந்திர நாடிகளில் உள்ள மனசு பிரம்ம நாடியில் சேருவது யோகம் என்று சொல்வார்கள். மனசு பிரம்ம நாடியில் சேர்ந்தாலும் அதில் உள்ள ஆத்மாவை ஜீவாத்மா அனுபவிக்கின்றது. என்றால் ஜீவாத்மா, ஆத்மா ஒன்றாக இருக்கின்றார்கள். ஜீவாத்மா ஆத்மாவில் இணைந்திருப்பது தெரிவிக்கும் ஞானமே மூன்று நாமங்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

வலது பக்கம் இருக்கின்ற நாமத்தை சூரிய நாடியாக, இடது பக்கம் நாமத்தை சந்திர நாடியாக நடுவில் இருக்கின்ற நாமத்தை பிரம்ம நாடியாக பெரியோர்கள் அடையாளித்தார்கள். மனசு நிவாசிக்கின்ற இடம் சூரிய சந்திர நாடிகளை விட ஆத்மா நிவாசிக்கின்ற பிரம்ம நாடி முக்கியமானது. அதனால் சூரிய சந்திர நாடிகளாக அடையாளிக்கும்படி வலது இடது பக்கத்தில் இருக்கின்ற

நாமங்களுக்கு வெள்ளை வண்ணத்தை வைத்து ஆத்மா ஸ்தானமான பிரம்ம நாடியை அடையாளிக்கும்படி நடுவில் இருக்கின்ற நாமத்திற்கு சிவப்பு நிறத்தை வைத்தார்கள். இந்த விதமாக வைப்பதினால் பார்த்தவுடனே நடுவில் இருக்கின்ற நாடி தனித்துவமாக தெரிகின்றது. நடுவில் இருக்கின்ற நாடியின் பெருந்தன்மை காண்பித்து பக்கத்தில் இருக்கின்ற இரண்டு நாடிகளை விட நீட்டமாக இழுத்தார்கள். எந்த ஜீவாத்மா இருந்தாலும் பிரம்ம நாடியில் இருக்கின்ற ஆத்மாவில் சேர்ந்து போனால் இறுதிக்கு மோக்ஷம் கிடைக்கும் என்னும் நோக்கங்களை தெரிவித்து நடுவில் இருக்கின்ற நாமத்தை ஆரம்ப பாகத்திலிருந்து கனம் குறைத்துக் கொண்டே வந்து இறுதி பாகத்தை ஊசி முனையாக வைத்தார்கள். ஆத்மாவில் சேருபவர் சொல்லுவதற்கு முடியாத சூன்யமான பரமாத்மாவில் இணைந்து போகுவார் என்பதற்கு வழிமுறையாக நடுவில் இருக்கின்ற நாடி முனை பாகம் ஆகாசம் பக்கம் இருக்கும்படி வைத்தார்கள். திருப்பதி தேவஸ்தானத்தில் வெங்கடேஸ்வரர் முகத்தின் மேல் இருக்கின்ற விதான எண்ணத்துடன் காட்டி பெரிய நாமத்தை வைத்தார்கள். அந்த விதமாக வெங்கடேஸ்வரர் நாமத்துடன் தரிசனம் ஆகுவதால் அவற்றின் விவரம் தெரிந்து கொள்வீர்கள் என்னும் அடையாளமாக பெரியோர்கள் அந்த நாமத்தை வைத்தார்கள். அவருக்கு இருக்கின்ற நாமத்தைப் பற்றிய ரகசியம் யாருக்கும் தெரியாமல் சாதாரணமான விஷயமாக எடுத்துக் கொள்கின்றார்கள். நாம் கூட நாமத்தை வைக்கின்றோம். மற்றும் அந்த நாமத்தைப் பற்றி யாரும் விவரித்துக் கொள்ளவில்லை.



நாமம்

அப்போது இருந்த பெரியோர்கள் இல்லாமல் போனார்கள். அதனால் இன்று ஞான ரகசியங்கள் நமக்கு தெரியாத நிலை ஏற்பட்டது. மேலும் நாமத்தை வைத்துக் கொண்டவர்கள் வைஷ்ணவர்கள், விபூதி ரேகைகள் வைக்கின்றவர் சைவர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோம். த்ரி நாமம் விபூதி ரேகைகள் ஆத்ம ஞானத்தை போதிக்கும் அடையாளம் என்று தெரியாமல் குலம் வர்க்கம் அமைப்பு தெரிவிக்கும் சின்னமாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். தேவாலயங்களில் உள்ள கடவுள்களை கூட வைஷ்ணவ கடவுள் என்னும் சைவ கடவுள் என்று பிரித்து விடுகின்றோம். பரமாத்மாவின் அடையாளமான லிங்கத்தை சைவ கடவுள் என்னும், பகவானுக்கு அடையாளமாக இருக்கின்ற ரங்கன் பிரதிமையை வைஷ்ணவ கடவுள் என்று சொல்லிக் கொள்வது அதர்மம்.

## 15. ஹஸ்தம்

கடவுளின் கர்ப்ப கோயிலில் பிரதிமைக்கு எவ்வளவோ விசேஷம் இருக்கும்போது அந்த பிரதிமையை காட்டிய ஹஸ்த்திற்கு மிக முக்கியமான விசேஷம் இருக்கிறது. பிரதிமைக்கு இருக்கின்ற ஹஸ்தம் நமக்கு கூட இருக்கின்றது. பிரதிமை காட்டிய ஹஸ்தத்தில் எவ்வளவோ அர்த்தம் கூடியிருக்கின்றதை கிரகிக்கும் போது நம்முடைய ஹஸ்தத்திலும் கூட அதே விசேஷம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் தேவாலயங்களில் உள்ள பிரதிமைக்கு உள்ள ஹஸ்தத்தை பற்றி தெரிந்து கொள்ளலாம். ஹஸ்தம் உருவம் பொம்மையை பார்க்கலாம்.

ஹஸ்தம் (கை) நடுவில் மூன்று ரேகைகள் இருக்கின்றது. அந்த மூன்று ரேகையில் கீழ் இரண்டு ரேகை முனைகள் ஒரு பக்கம் ஒன்றின் ஒன்று இணைந்து இருக்கின்றது. மூன்றாவது ரேகை கீழ் உள்ள இரண்டு ரேகைகளை விட மேலிருந்து இரண்டு ரேகைகளில் இணையாமல் வேறாக இருக்கின்றது. இவற்றின் எண்ணம் என்னவென்றால் பகவத்கீதாவில் புருஷோத்தம பிராப்தியோகம் என்னும் அத்தியாயத்தில்

**16 ஆவது சுலோகம்,**

**"துவ வீமௌ புருஷோ லோகே ஷர அக்ஷர ஏ வச்சஷர சர்வாணி பூதானி கூட்டஸ்தோ ஷர உச்சதே"**

பூமி மீது இரண்டு ரகம் புருஷர்கள் இருக்கின்றார்கள். அந்த இருவரில் ஒருவர் ஷரன் (அழிகின்றவர்), இரண்டாம் அவர் அக்ஷரன் (அழியாதவர்) இருக்கிறார். ஷரன் என்பவர் சர்வ ஜீவராசிகளில் ஜீவனாக இருக்கிறார். அக்ஷரன் என்பவர் சர்வ ஜீவிகளின் தேகத்தில் கூட்டஸ்தனாக இணைந்து இருக்கின்றார் என்னும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா வார்த்தை பிரகாரம் நடுவில் ஹஸ்தத்தில் ஷர அக்ஷரன் என்னும் இரண்டு ரேகைகள் தனித்தனியாக இருந்து முனைகள் இணைந்திருக்கின்றது. சமஸ்த தேகத்திலும் ஷரனாக இருக்கின்ற ஜீவாத்மாவை அதன் போலவே சமஸ்த தேகத்திலும் சைதன்ய சக்தியாக இருக்கின்ற ஆத்மாவை குறிக்கும் அடையாளங்கள் ஹஸ்தத்தில் கீழ் இரண்டு ரேகைகள் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

"உத்தமஹ புருஷ ஸ்வன்ய பரமாத்மே" என்னும் 17ஆவது சுலோகத்தில் உள்ள வாக்கியம் பிரகாரம் மற்றும் "யஸ்மாத் ஷர மத்தீதோ ஹமஷ்ராதபி சொத்தமஹ" 18ஆவது சுலோகம் பிரகாரம் இரண்டு புருஷர்களை விட உத்தமமான புருஷர் ஒருவர் இருக்கின்றார் அவரே பரமாத்மா. அவர் ஷரனைவிட மேலானவர் அக்ஷரனை விட சேஷ்டமானவரானதினால் அவரை புருஷோத்தமன் என்று சொல்கின்றோம். ஆத்மா விட வேறாக இருக்கின்றார் என்பதால் பரமாத்மா என்னும், ஜீவாத்மா ஆத்மாவை விட உத்தமனாக இருக்கின்றதினால் புருஷோத்தமர் என்று சொல்கின்றோம். பரமாத்மா புருஷோத்தமர் என்பது அவரின் நிலை தெரிவிக்கும் சொல் மட்டும்தான் வாஸ்துவமாக அது பெயர்கள் அல்ல. இருவர் புருஷர்களை விட வேறாக மேலாக இருக்கின்றதினால் மேலும் ஹஸ்தத்தில் மூன்றாவது ரேகை இரண்டு ரேகைகளை விட வேறாக மேல் இருக்கிறது. சிருஷ்டிக்கு காரணமான சிருஷ்டியில் மூல புருஷர்களான ஷர அக்ஷர புருஷோத்தம அடையாளத்தை தெரிவிக்கும் ஹஸ்தம் பிரதிமையால் காட்டப்படுகின்றது. உலகத்தில் முக்கியமான மூன்று மூல புருஷர்கள் விஷயங்கள் ஹஸ்தத்தில் இருப்பதினால் உள்ளங்கையில் அனைத்தும் இருக்கிறது என்னும், உள்ளங்கையில் வைகுண்டம்

இருக்கிறது என்று பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். உள்ளங்கையில் அர்த்தங்கள் மட்டுமல்லாமல் ஒரு உள்ளங்கையில் மேலும் ஹஸ்தம் எல்லாம் கவனித்து பார்க்கலாம்.

ஹஸ்தத்திற்கு ஐந்து விரல்கள் இருக்கின்றது. ஐந்து விரல்கள் பஞ்சபூதங்களுக்கு, ஐந்து ஞானேந்திரியங்களுக்கு ஐந்து வாய்வுகளுக்கு அடையாளமாக இருக்கின்றது. இவற்றை சந்தர்ப்பத்திற்கு பொருத்தமாக அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். இங்கு ஐந்து விரல்களை பஞ்சபூதங்களான ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமியாக அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். ஹஸ்தம் நடுவில் உள்ள ரேகைகள் மூன்று புருஷர்களாக ஐந்து விரல்கள் ஐந்து பிரக்ருதிக்கு பாகங்களாக கணக்கிடுவதால் அனைத்து உலகம் அதற்கு ஆதாரமான பரமாத்மா, ஆத்மா, ஜீவாத்மாக்கள் என்றால் சமஸ்தமும் அண்டம் பிண்டம் பிரம்மாண்டம் எல்லாம் ஹஸ்தத்தில் தெரியப்படும் படி அர்த்தம் இருக்கிறது. பஞ்சபூதங்களான பிரக்ருதி பரமாத்மா இரண்டும் ஹஸ்தத்திலேயே இருக்கின்றது போல பிரதிமை காட்டுவது மட்டுமல்லாமல் ஒவ்வொருவரிலும் பிரக்ருதி பரமாத்மாக்கள் இருக்கிறார் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று தெரியப்படுகின்றது.

ஒரு மனிதன் தேகத்தில் ஜீவாத்மா ஆத்மா மட்டுமல்லாமல் பரமாத்மா மற்றும் பிரக்ருதி இருப்பது போல ஹஸ்தத்தில் தெரியப்பட்டு இருப்பது மட்டுமல்லாமல் தேகத்தில் மற்றொரு ரகசியம் கூட வெளிப்படுகின்றது. அந்த ரகசியம் என்னவென்றால் மனிதன் பிரக்ருதியில் இருந்தால் எந்த விதமாக இருப்பான், பரமாத்மாவில் போனால் எப்படி இருப்பான் என்ற விஷயம். தேகத்தில் பிரக்ருதியில் சிக்கிக்கொண்ட ஜீவன்




ஹஸ்தம்

பிரக்ருதிக்கு சம்பந்தப்பட்ட மூன்று குணங்களில் இருக்கிறார் என்பதை காட்டுவது ஒரு விதானம் மட்டுமல்லாமல், மூன்று குணங்கள் தாண்டிய பிறகு எப்படி இருப்பான் என்ற விஷயம் மற்றும் மூன்று குணங்களை மீறி இருப்பதினால் சிறிது காலத்திற்கு ஜீவன் முழுமையாக எந்தவிதமாக மாறிப்போகும் என்ற விஷயம் கூட தெரியப்படுகின்றது. அந்த விஷயங்கள் ஹஸ்தத்தில் எப்படி இருக்கின்றது என்று பார்க்கலாம். ஹஸ்தத்திற்கு இருக்கின்ற விரல்களுக்கு மூன்று கனு இருக்கின்றது. விரலுக்கு இருக்கின்ற குறுக்கு கோடு இருப்பதினால் ஒவ்வொரு விரல்கள் மூன்று பாகங்களாக பிரிக்கப்பட்டதாக தெரிகின்றது. ஐந்து விரல்கள் பஞ்சபூதங்களுக்கு அடையாளமாக பஞ்சபூதங்கள் எனப்படும் பிரக்ருதிக்கு மூன்று குணங்கள் பிறந்தது என்னும், பஞ்சபூதங்களினால் தயாரானது மூன்று குணங்கள் தெரியும்படி

ஐந்து விரல்கள் மூன்று பாகங்களாக இருக்கின்றது. பிரக்ருதியில் பிறந்த ஜீவன் பிரக்ருதியில் இருக்கின்ற குணங்களினால் சிக்கிக் கொண்டு இருக்கிறான் என்னும் கோயிலில் இருக்கின்ற கடவுள் ஹஸ்தத்தை காட்டி தெரிவிக்கின்றார். ஹஸ்தத்தில் உள்ளங்கை நடுவில் இருந்து உள்ளங்கை கீழ் மணிக்கட்டு மேல் மூன்று மடிப்புகள் தெரிகின்றது. அந்த கோடுகளை விரலில் இருக்கின்ற கோடுகளால் இணைத்து உள்ளாங்கை சுற்றும் சக்கரம் ஏற்படுகின்றது. அஸ்தம் படத்தில் காட்டியது போல் மூன்று ரேகைகளுக்கு நடுவில் உள்ளங்கையில் மூன்று ஆத்மாக்கள் தெரிந்து கொண்டிருக்கும்போது உள்ளங்கையில் இருந்து விரல் பக்கம் மூன்று பாகங்கள் இருக்கிறது அல்லவா! அதில் முதலாவது தாமச குணபாகங்கள், இரண்டாவது ராஜச குணபாகங்கள், மூன்றாவது சாத்வீக குணபாகங்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். கையில் காட்டியது போல் தேகத்தில் இருக்கின்ற ஜீவன் இந்த மூன்று குண பாகத்திலேயே இருக்கிறான். குணங்களை அடையாளித்து கை கனுகளில் சாத்வீகமாக அடையாளிக்கப்பட்ட விரல் முனை பாகமான கனுகளில் சங்கு சக்கரம் வடிவம் இருக்கும். சங்கு ஞான போதனை சக்கரம் கர்ம நாசனம் என்று முதலில் அத்தியாயத்திலேயே தெரிந்து கொண்டோம். ஞான போதனை தெரிந்து கர்ம நாசனம் செய்து கொள்ளும் விதானம் ஒன்று இருக்கிறது என்னும் தெரியப்படுத்துவது விரல்களில் சங்கு சக்கரங்கள் அர்த்தம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். விரல் முனையில் இருக்கின்ற சங்கு சக்கரங்கள் பார்த்த பிறகு அதற்கு சம்பந்தப்பட்ட விதானம் குணங்கள் பின்னால் வெள்ளை நகமாக இருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். மூன்று குணங்கள் மட்டுமல்லாமல் அவற்றின் அவற்றினால் வரும் கர்மம் ஜெய்க்கின்ற போர்களும் கூட இருக்கின்றது என்னும் போர் சின்னமாக இருக்கின்ற சங்கு சக்கரங்கள் விரல் முனை பாகத்தில் கடவுள் வரைந்தார். இதன் போல எத்தனையோ வடிவங்கள் ஹஸ்தத்தில் வரைந்து இருக்கும்போது சிலர்கள் ஹஸ்தத்தில் உள்ள ரேகைகள் சங்கு சக்கரங்களை ஜோதிட ரீதியாக ஹஸ்த சாமுத்திரியாக சொல்லிக் கொள்வது தவறு என்று கவனிக்க வேண்டும். இறுதி பாகத்தில் இருக்கின்ற சாத்வீக குணபாகம் பிறகு நகம் தெரிந்து கொண்டிருக்கும். நகத்தை பார்த்தால் விரல்கள் மூன்று கனு தோலை விட வலுவாக இருந்து விரல்கள் நிறத்தை விட வேறாக

வெள்ளையாக இருக்கும். மூன்று குணத்தில் ஜீவன் இருக்கும்போது நான்காவது ஸ்தானம் கூட ஜீவனுக்கு இருப்பது போல் விரல் முனை பாகத்தில் நகம் இருப்பது அர்த்தம். “சாதுர் வர்ணம்” என்னும் பகவத்கீதாவில் சொல்லியது போல் ஜீவிகள் சாத்வீகர்கள், ராஜசர்கள், தாமஸர்கள் மட்டுமல்லாமல் யோகிகளும் கூட இருக்கின்றார்கள். பிரக்ருதியில் அந்த யோகிகள் ஸ்தானம் தெரிவிப்பது நகம். நகம் வெள்ளையாக இருப்பது யோகிகள் தெளிவை தெரிவிக்கின்றது. யோகிகளாக இருக்கின்றவர்கள் ஞானம் தெரிந்து இருப்பதற்கு அல்லது ஞானம் தெரிந்தவர்களே யோகிகள் ஆகுவதற்கு, ஞானத்தினால் யோகம் பிராத்திக்கும் என்பதற்கு அடையாளமாக ஞானத்திற்கு சின்னமான சந்திரன் வெள்ளை நகத்தின் மீது அதிக வெள்ளையாக தெரியும். இந்த விதமாக விரல்கள் மூன்று கனுகள் மூன்று குணங்களாக இருந்து இறுதியாக மேல் தெரிந்து நகம் யோகிகள் ஸ்தானத்தைக் குறிக்கின்றது. நகத்தின் மீது உதிக்கின்ற சந்திரன் ஞானத்தை குறிக்கின்றார்.

மூன்று குணங்களில் இருக்கின்றவனுக்கு கஷ்ட சுகம் இருக்கும். மூன்று குணங்களைத் தாண்டி யோகத்தில் இருப்பவர் கூட கஷ்ட சுகங்களை அனுபவிப்பார்கள். எதற்கு என்றால் மூன்று குணங்களில் இருந்தாலும், யோகங்களில் இருந்தாலும் ஜீவன் கஷ்ட சுகங்களை அனுபவிப்பான். கஷ்ட சுகங்கள் முழுமையாக இல்லாமல் போக வேண்டும் என்றால் ஜீவன் குணங்களை யோகங்களை எல்லாவற்றையும் விட்டு மோக்ஷம் அடைய வேண்டும். மோக்ஷம் அடைந்தவனுக்கு எந்த உணர்வுக்கும் சம்பந்தமில்லை. கஷ்ட சுகங்கள் அனுபவம் சிறிதளவு கூட இருக்காது. அதனால் தான் மூன்று குணங்களை குறிக்கும் விரல் கனுவில் கத்தியால் குத்திய உடனே வலி தெரியும். யோகத்தை குறிக்கும் நகம் கூட விரல்களை விட சிறிது வித்தியாசத்துடன் வலி தெரியும். மோக்ஷம் அடைந்தவனுக்கு சிறிதளவு கூட உணர்வுகள் இருக்காது அதனால் வெள்ளை நகம் முனையில் விரலுக்கு மேல் பாகத்தில் இறுதியில் வெள்ளை நகத்திலிருந்து நீலம் வண்ணத்தில் நகம் வளர்ந்திருக்கும். அந்த நகம் மோக்ஷத்தை குறிக்கின்றதாக நீல வர்ணமாக இருந்து தனித்துவமாக இருக்கும். மோக்ஷம் அடைந்தவனுக்கு கஷ்ட சுகம் அனுபவங்கள் இல்லாதது போல நீல வண்ணமாக

இருக்கின்ற நகம் கத்தியால் அறுத்தாலும் சிறிதளவு கூட வலியும் இருக்காது சுகமாகவும் இருக்காது. மோக்ஷம் அடைந்த ஜீவன் இந்த விதமாக இருக்கும் என்னும் தெரிவிப்பதற்காக இறுதி நகம் வலியில்லாததாக இருக்கின்றது. மூன்று ஆத்மாக்கள் விதானம், மூன்று குணங்கள் விதானம், ஞானம் யோகம் விதானம் இறுதிக்கு மோக்ஷத்தைப் பற்றிய விதானம் தெரிவிப்பதற்காக உள்ளது கடவுளின் ஹஸ்தம் தரிசனம். பிரதிமை காட்டும் ஹஸ்தத்தில் எவ்வளவோ ஞானம் இருக்கும்போது அதனை அபயஹஸ்தம் என்பது தவறானது அல்லவா! உருவத்தில் இருக்கின்ற பிரதிமையின் ஹஸ்தம் எந்த அர்த்தத்துடன் இருக்கின்றதோ உங்கள் கையில் இருக்கின்ற ஹஸ்தத்திலும் கூட அதே அர்த்தம் இருக்கின்றது. உன் கையை நீ பார்த்துக்கொள் என்னும் அதனில் இருக்கின்ற அர்த்தத்தை தெரிந்து கொள் தேவாலயங்களில் கடவுள் ஹஸ்தத்தை காட்டுகின்றார் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

யோகத்திற்கு ஞானம் தேவை என்னும் "ஸிரேயோகி ஞான மப்யசாத்" பகவத்கீதாவில் பரமாத்மா பகவான் உருவத்தில் தெரிவித்திருக்கும்போது, நம் ஹஸ்த்திலும் கூட யோகத்தை தெரிவிக்கும் வெள்ளை நிற நகத்திற்கு மேலும் வெள்ளை சந்திரன் இருப்பது போல் தெரிந்தாலும் **சிலர் மாயாவுக்கு வசமாகி ஞானத்தால் வேலை இல்லை முகத்தின் மேல் கவனத்தை வைத்துக்கொள், முகத்தின் மேல் மூக்கு மேல் கவனத்தை வைத்துக்கொள், மூக்கில் உள்ளே சுவாசை மேல் கவனம் வைத்துக்கொள் என்று சொல்லினால் கீதாவில் கடவுளுடைய வார்த்தைகள் தவறாகும் அல்லவா! தேவாலயங்களில் பிரதிமை ஹஸ்தம் பற்றிய விவரம் மறந்து மற்ற எங்கேயோ வைத்தது போல் அல்லவா! அவரவர் கையில் கடவுளுடைய விவரம் முத்திரையை புறக்கணிப்பது போல் அல்லவா! ஞானத்தை குப்பைக்கு சமமாக சொல்வது மாயாவின் வார்த்தை அல்லவா! அப்படி நினைத்துக் கொண்டால் பகவான் ஞானத்தை கீதாவில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை அல்லவா! "ஸிரேயோகி ஞான மப்யசாத்" என்ற வார்த்தைக்கு மதிப்பு இல்லை அல்லவா!** யார் என்ன நினைத்துக் கொண்டாலும் தேவாலயங்களில் கடவுள் ஹஸ்தத்தில் எவ்வளவோ முக்கிய விவரம் இருக்கிறது என்னும் அது உலகம் அனைத்திற்கும், மோக்ஷத்திற்கும், குணங்களுக்கும், யோகங்களுக்கும்,

ஞானத்திற்கு நேரடி சாட்சியமாக இருக்கின்றது என்று தெரிந்து கொள்ள வேண்டும். பூர்வ காலத்தில் காலையில் எழுந்தவுடன் முதல் ஹஸ்தத்தை பார்ப்பது முக்கிய சம்பிரதாயமாக இந்துக்களில் இருந்தது. இப்போதும் அந்த சம்பிரதாயம் நூற்றுக்கு ஒரு சதவீதம் எங்கேயாவது இருக்கலாம். பூர்வம் காலையில் எழுந்து முதல் கண் திறக்கும் போது முதல் ஹஸ்தத்தை பார்ப்பார்கள். ஹஸ்தத்தை பார்ப்பதால் ஹஸ்தத்தில் இருக்கின்ற ரகசியங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வரவைத்துக் கொண்டு நான் இந்த நாள் எல்லாம் மோக்ஷத்திற்காக முயற்சி செய்வேன் என்னும் நினைத்து பரமாத்மா சின்னமான ரேகையை பக்தி எண்ணத்துடன் கண்களிடம் வைத்துக் கொள்வார்கள். பூர்வத்தில் பெரியோர்கள் எண்ணத்தை நாம் கொண்டு ஹஸ்தத்தை பார்க்க வேண்டும் என்னும், வேறவர்களுக்கு கூட ஹஸ்தத்தின் விவரம் தெரிவிக்க வேண்டும் என்னும், தேவாலயங்கள் ஆன்மீக மையம் என்னும், ஆராதனைகள் அர்த்தத்தில் கூடியிருக்கிறது என்பதை தெரிவித்தால் விக்ரஹ ஆராதனையை எதிர்ப்பவர்களும் கூட எதிர்க்காமல் அர்த்தம் செய்து கொள்ளுவார்கள் என்று தெரிவிக்கின்றோம்.

## 16. மயில் இறகு

இப்போது ஸ்ரீ கிருஷ்ணர் தேவாலயத்திற்கு வந்து பார்க்கலாம். அந்த தேவாலயங்களில் கிருஷ்ண பிரதிமையில் ஞானம் எவ்வளவோ இருக்கிறது. கிருஷ்ண பிரதிமைக்கு தலை மேல் மயிலிறகு வைக்கப்பட்டிருக்கும். மயிலிறகு கிருஷ்ணர் அழகா இருப்பதற்கோ அலங்காரத்திற்கோ வைக்கப்படவில்லை. அவர் இருக்கும் நிலை இது என்பதை தெரிவித்து, நீங்கள் கூட இதன் போலவே இருக்க வேண்டும் என்று தெரிவிப்பதற்கு மயிலிறகு வைத்தார். விசேஷம் என்னவென்றால்! மயிலிறகு நடு பாகத்தில் நீல வண்ணமாக சிறிது வட்டமாக இருக்கும். இந்த பாகம் மயிலிறகில் எல்லா வண்ணத்தை விட முக்கியமாக தெரியும்படி இருக்கும். அந்த வட்டத்தை சுற்றி பச்சை இலை வண்ணம் மின்னிக் கொண்டு இருக்கும். அதன் பிறகு லேசான கோதுமை நிறம் வடிவம் சுற்று முற்றும் இருக்கும். இந்த லேசான கோதுமையின் நிறம் சுற்று முற்றும் இறுதியில் மின்னிக்

கொண்டிருக்கும். இதனுடைய இறுதி பாகத்தில் மின்னிய பிறகு சுற்று முற்றும் அடையாளிக்க முடியாதது போல் லேசாக ஒரு நிறம் பாகம் இருக்கும். இதன் போல மயிலிறகில் மொத்தம் நான்கு பாகங்கள் இருப்பது போல் அடையாளம் தெரிகின்றது. நீங்கள் ஒரு மயிலிறகை வாங்கிக் கொண்டு நன்றாக பார்த்து அடையாளம் காணுங்கள் என்று கேட்டுக்கொள்கிறோம். முக்கிய பாகமான நடுவில் இருக்கின்றது கருப்பு கலந்த நீல நிறமாக இருக்கும். இரண்டாவது உருண்டை மின்னுகின்ற பச்சை இலை நிற பாகம், மூன்றாவது லேசான கோதுமை நிறம், நான்காவது கவனிக்க முடியாதது போல் ஒரு பாகம் இருக்கும். நான்காவது இறுதி பாகமானது கூட மூன்றாவது இறுதி பாகம் போல் சிறுது மின்னிக் கொண்டு இருக்கும். அதனால் நான்காவது பாகம் கூட கஷ்டம் இல்லாமல் அடையாளிக்கலாம். வெளியில் இருந்து மூன்று உருண்டை பாகம் இருந்து நடுவில் கண் போல், மையமாக இருக்கின்ற மயிலிறகு பிரம்ம வித்யாவான கீதா சாஸ்திரத்தில் தெரிவித்த கிருஷ்ணர் வைப்பதில் மிக அர்த்தமுள்ளது.



மயிலிறகு

நம்முடைய தேகத்தில் தலை உச்சி மேல் குணங்கள் இருக்கும். தேகம் காரியங்கள் எல்லாவற்றுக்கும் காரணமான குணங்கள் ஒரு முறையாக வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த முறை சக்கரமாக வைக்கப்பட்டிருக்கின்றது. குணங்கள் மூன்று ரகமாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. சாத்வீக, ராஜச, தாமச எனப்படும் குண ரகங்கள் சக்கரத்தில் மூன்று பாகங்களாக வைக்கப்பட்டிருக்கின்றது. அதனை சாத்வீக பாகம், ராஜச பாகம், தாமச பாகம் என்று பெயர் வைக்கப்பட்டது. இந்த

மூன்று பாகங்களுக்கு நடுவில் உருண்டையாக ஒரு பாகம் இருக்கும் அது பிரம்ம நாடி. அங்கு ஆத்மா நிவாசித்து இருக்கும். ஆத்மா நிவாசமான பிரம்ம நாடியை ஆதாரம் செய்து கொண்டு கண்ணுக்கு தெரியாத குணசக்கரங்களாக மாறி இருக்கின்றது. சர்வ ஜீவிகள் குணசக்கரத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்றது. எந்த பாகத்தில் அதிகமாக இருப்பனோ அந்த ஜீவனுக்கு அந்த பாகத்தின் பெயர் வைக்கப்பட்டது என்று பெரியோர்கள் தெரிவித்தார்கள். தாமச பாகத்தில் இருக்கின்ற ஜீவனை தாமசன், ராஜச பாகத்தில் இருக்கின்ற ஜீவனை ராஜசன் என்னும் அதன் போலவே சாத்வீக பாகத்தில் இருக்கின்ற ஜீவனை சாத்வீகன் என்று சொல்லப்படுகின்றது. எந்த குண பாகத்தில் இருந்தாலும் ஒவ்வொரு ஜீவராசியை ஆத்மா பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதனால் ஆத்மாவே சாட்சியாக இருக்கின்றது. ஆத்மாவுக்கு தெரியாத எந்த ஜீவராசியும் இல்லை. எல்லா ஜீவராசி குண சக்கரம் நடு பாகத்தில் ஆத்மாவை சுற்று முற்று இருக்கின்ற குணங்களில் சம்பந்தமில்லாமல் சாட்சியாக பார்த்துக் கொண்டிருக்கின்றது.

ஒவ்வொரு ஜீவராசி குணங்களினால் வேலை செய்கின்றது. வேலைகளினால் அந்தந்த ஜீவிகளுக்கு பாவ புண்ணியங்கள் சம்பவிக்கிறது. கர்மங்களாக இருக்கின்ற பாவ புண்ணியங்கள் ஜீவாத்மாவுக்கு மட்டும்தான் நடுவில் இருக்கின்ற ஆத்மாவுக்கு இருக்காது. ஆத்மா சக்தியே தேகமெல்லாம் பரவி அசைவு சக்தியாக இருக்கும் போது ஒவ்வொரு ஜீவராசி அசைவுகள் குணங்களை அனுசரித்துக் கொண்டிருக்கும். அதற்கு ஆத்மா காரணமான சக்தி தான் காரியமாக இருக்கின்ற கர்மம் அல்ல. தேகத்தில் குணங்கள் கட்டளை பிரகாரம் வெவ்வேறு வேலைகள் நடந்தாலும் எந்த விதமான காரியம் சம்பந்தம் இல்லாமல் எந்த கர்மத்தை ஒட்டிக் கொள்ளாமல் ஆத்மா எல்லா தேகங்களில் சாட்சி பூதமாக இருக்கின்றது.

மயிலிறகு நடுவில் உள்ள பாகம் குண சக்கரத்தில் நடுவில் உள்ள ஆத்மா நிவாசிக்கின்ற ஸ்தானம். அதற்கு சுற்று முற்று இருக்கும் இரண்டாவது பாகம் குணசக்கரத்தில் சாத்வீக, அதன் சுற்று முற்று இருக்கின்ற மூன்றாவது ஸ்தானம் ராஜச பாகம். அதன் போலவே இறுதி நான்காவது பாகம் தாமச பாகம். இந்த விதமாக மயிலிறகு குணசக்கரம்

சமமான ஜாடைகள் இருக்கின்றது. கிருஷ்ணர் வேலைகள் செய்தாலும் எனக்கு எந்த குண கர்மம் ஒட்டாது. மூன்று குணங்கள் நடுவில் ஆத்மாவாக இருக்கின்றேன் என்பதை தெரிவிக்கும்படி மூன்று பாகங்களுக்கு நடுவில் அடையாளமாக தெரிகின்ற வடிவம் கொண்ட மயிலிறகை தலை மேல் வைத்தார். அது மட்டுமல்லாமல் எல்லோரிலும் மூன்று குணங்களுக்கு ஆத்மா சாட்சியாக இருக்கின்றது என்ற எண்ணத்துடன் கிருஷ்ணன் மயிலிறகை வைத்தார்.

நம் தேகத்தில் பிரம்ம நாடியில் ஆத்மா நிவாசமாக இருக்கின்றது. அந்த நாடி சிரசில் இருந்து ஆசன வாய்வு வரை வியாபித்து இருக்கின்றது. முதுகெலும்பில் நடுவில் வியாபித்த பிரம்ம நாடியில் இருந்து ஆத்மா சக்தியை பரப்புவதற்கு இரண்டு பக்கம் சிறிய சிறிய நரம்புகள் வெளியிடப்பட்டது. பிரம்ம நாடி சக்திக்கு நிலையமாக இருந்து அந்த சக்தியை குணங்கள் உபயோகித்துக் கொண்டிருக்கின்றது. மேல் இருக்கின்ற குண சக்கரங்களில் இருந்து வரும் கட்டளைகள் நடுவில் உள்ள பிரம்ம நாடியால்தான் வரவேண்டும். அதன் போலவே வெளி இயந்திரியங்களில் வரும் விஷயங்கள் எல்லாம் சிறிய நரம்புகளுடன் பிரம்ம நாடியில் சேர்ந்து, அதில் பயணித்து குண சக்கரத்தில் இருக்கின்ற ஜீவனுக்கு சேருகின்றது. இந்த சிறிய நரம்பின் அமைப்பு, பிரம்ம நாடி அமைப்பு மற்றும் மேல் இருகின்ற குண சக்கரம் அமைப்பு மயிலிறகை கவனித்தால் நன்றாக தெரியும். மயிலிறகு கீழ் தண்டு வெள்ளையாக நீளமாக இருக்கும். அதனை பிரம்ம நாடியாக அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். அந்த நீளம் தண்டுக்கு இரண்டு பக்கம் சிறிய சிறிய இறகுகள் வியாபித்திருக்கும். அவற்றை பிரம்ம நாடிகளிலிருந்து வெளியிடப்பட்ட சிறிய சிறிய நரம்புகளாக கணக்கிட வேண்டும். மேல் நான்கு பாகம் நான்கு பாகங்களாக தெரிகின்ற மயிலிறகு குணசக்கரங்களாக கணக்கிட வேண்டும்.

**1.சர்வ ஜீவிகள் தேகத்தில் இந்த விதமான அமைப்பு இருக்கும் என்ற ஞானம் தெரிவிப்பதற்காகவே கிருஷ்ணர் தலை மேல் மயிலிறகை வைத்தார். 2.சர்வ ஜீவிகள் குணங்களுக்கு ஆத்மா சாட்சியாக இருக்கின்றதால் குறிப்பாக கிருஷ்ணர் மயிலிறகையை வைத்தார். 3.ஆத்மா மூன்று குணங்களில் நடுவில் இருந்து எந்த குணத்திற்கு**

**சம்பந்தமில்லை என்பதை தெரிவிப்பதற்காகவே மயிலிறகையை வைத்தார். 4.நான் எந்த வேலை செய்தாலும் நடுவில் இருக்கின்ற எனக்கு எதுவும் ஒட்டாது என்று தெரிவிப்பதற்கு மயிலிறகையை வைத்தார். 5.சர்வ ஜீவிகள் தலைகளில் குணங்கள் இருக்கின்றது, ஆத்மா இருக்கின்றது என்பதை தெரிவிப்பதற்காக தலை மேல் மயிலிறகை வைத்தார். 6.இறுதி நிறம் முனை லேசானது. இரண்டாவது அதனை விட அதிகமாக தெரிகின்றது. மூன்றாவது அதனை விட மிக அதிகமாக தெரிகின்றது. நான்காவது எல்லாத்தையும் விட வித்தியாசமாக தெரிகின்ற கண் போல் இருக்கின்றது. அப்படிப்பட்ட மயிலிகை வைத்து எந்த ஜீவராசிகளும் இறுதிக்கு சேர வேண்டியது ஸ்தானம் அது தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். 7.குணசக்கரங்கள் ரகசியம் தெரிந்து கொண்டவர் என்னைப்போலவே இருக்கின்றவர் எனக்கு சமமாக இருக்கின்றவர் தெரிவிப்பதற்காக கிருஷ்ணர் மயிலிறகை வைத்தார். 8.கீதாவில் கர்மயோகம் என்னும் அத்தியாயத்தில் 28ஆவது சுலோகம்:- "தத்வவித்தோ மஹபாஹோ குணகர்ம விபகையோ குணா குணேசு வர்தந்த சஜ்ஜதே" குணகர்மம் பாகங்கள் தெரிந்தவன் ஆத்மாவை தெரிந்தவனாகுவான். அப்படிப்பட்டவன் குணங்களினால் நடக்கின்ற இந்திரிய வேலைகள் எத்தனை செய்து கொண்டு இருந்தாலும் செய்யாதவரே என்று தெரிவிப்பதற்காக ஸ்ரீகிருஷ்ணர் மயிலிறகை வைத்தார். ஸ்ரீகிருஷ்ணர் வைத்த ஒரு மயிலிறகில் இவ்வளவு ஆத்மா ஞானம் இருக்கிறது என்று நமக்கு இதுவரை தெரியாமல் போவது துரதிர்ஷ்டம்.**



## 17. முரளி (புல்லாங்குழல்)

எல்லோர் தேகங்களிலும் 9 துவாரங்கள் இருக்கின்றது. கண் 2, காது 2, மூக்கு துவாரம் 2, வாய் 1, ஆசான வாய் 1, குஹியம் 1, மொத்தம் சர்வ ஜீவிகள் தேகத்திற்கு 9 துவாரங்கள், இருக்கும். அதனால் சில பெரியோர்கள் ஒன்பது துவாரம் புற்றை தேகமாக வர்ணித்து அதில் ஜீவன் பாம்பாக நிவாசிக்கின்றான் என்று சொல்லினார்கள். புற்றுகுள்ளே பாம்பு வெளியே தெரியாது. மேலும் எந்த புற்றில் எந்த பாம்பு

இருக்கிறதோ என்னும், எந்த தேகத்தில் எந்த ஜீவன் இருக்கின்றானோ என்று அர்த்தம் வரும்படி சொல்லினார்கள்.

புல்லாங்குழலுக்கு கூட ஒன்பது துவாரங்கள் இருக்கின்றது. புல்லாங்குழலை ஜீவிகள் தேகத்தால் ஒப்பிடலாம். தேகத்தில் நவரந்திரத்தை போல் முரளியின் துவாரம் கூட ஒன்பது துவாரங்கள் இருக்கின்றது. மேலும் ஜீவிகள் தேகம் எல்லாம் என் கையில் இருக்கிறது என்னும் தெரியப்படுத்துவதற்காக கிருஷ்ணர் முரளியை எப்போதும் கையில் வைத்துக் கொண்டிருப்பார். தேகங்கள் நம்முடைய சுதந்திரம் அல்லவென்று கடவுள் கையில் பொம்மைகளாக இருக்கிறோம் என்று இதனை பொறுத்து தெரிகின்றது. ஜீவிகள் தேகம் பிரக்ருதியால் தயாரானது. அந்த பிரக்ருதியை கடவுள் தன்னுடைய ஆதீனத்தில் வைத்துக் கொண்டார். அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை கொடுப்பது ஸ்ரீகிருஷ்ணருடைய ஜென்ம ரகசியம். மேலும் புல்லாங்குழலை ஜீவிகள் தேகமாக ஒப்பிட்டு காண்பித்து, அதனிலிருந்து சங்கீதத்தை வாசித்து வருகிறார். ஒன்பது துவாரம் உள்ள புல்லாங்குழலை தன் வாயால் ஊதி அதிலிருந்து ஒரு சத்தம் வெளியே வருவது போல் செய்கின்றார். அந்த சத்தம் நன்றாக முரளியில் இருந்து வெளியே வந்து சிறிது தூரம் வரை கேட்டுக்கொண்டு போய் முடிந்து விடுகின்றது. ஒன்பது துவாரம் இருக்கின்ற முரளியை வாயால் ஊதி சங்கீதத்தை பிறக்க வைப்பதும் கூட ஆத்ம ஞானம் தான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். இதில் என்ன ஞானம் இருக்கிறது என்று சிலருக்கு சந்தேகம் வரலாம். அதற்கு பதில் என்னவென்றால்!

ஒவ்வொரு மனிதனும் அஞ்ஞானத்திலிருந்து ஞானத்திற்கு சேர வேண்டியது தான். அதன் போல ஞானம் அடைய வேண்டுமென்றால் ஒரு குரு தேவை. குருவினால் வரும் போதனையால் அஞ்ஞானி ஞானியாக மாறுவான். ஞானியாக மாறியவன் யோகியாகி பரமாத்மாவில் ஐக்கியம் ஆகின்றான். ஒன்பது துவாரம் உள்ள முரளி ஒன்பது துவாரம் உள்ள தேகம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். முரளியை ஊதுகின்றவர் ஸ்ரீகிருஷ்ணர் தேகத்திற்கு ஞானத்தை ஊதுகின்றவர் குரு. முரளியில் ஒலிக்கின்றது சங்கீதம் ஆனால் தேகம் அணிந்த ஜீவனுக்கு குரு தேவை, குருவினால் ஞானம் அடையலாம் என்னும் குறிப்பாக கிருஷ்ணர் முரளியை ஊதினார். முரளியை ஊதிய போது

வெளியில் வரும் சப்தம் குரு ஞான சக்தியை கொடுக்கின்ற போது வெளியேறுகின்ற கர்மங்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். சப்தம் சிறிது தூரம் பயணம் செய்து சூன்யத்தில் மிதங்கியது போல் கர்மம் என்னும் சப்தம் இல்லாமல் போகும்போது ஜீவன் கூட சூன்யமாகி பரமாத்மாவில் சேர்ந்து விடுவான் என்பது போல் கிருஷ்ணர் முரளியை வாசித்தார்.



**புல்லாங்குழல்**

ஞானம் சாஸ்திரம் முறையானது அதன் போலவே சங்கீதம் கூட நன்றாக ஊதுபவர் இல்லாமல் போனால் முரளியின் சங்கீதம் வராது. அதன் போலவே குரு இல்லாமல் போனால் ஞானம் கிடைக்காது. சப்தம் வந்த பிறகு சூன்யத்தில் கலந்து போகும். அதன் போலவே ஞானம் தெரிந்து யோகியானவர் பரமாத்மாவில் சேர்ந்து போவார் என்று தெரிவிப்பதற்காக முரளியை கிருஷ்ணர் காட்டினார்.

## 18. பாதங்கள்

கிருஷ்ணர் எங்கேயாவதும் நின்று இருக்கின்றது போலவே தெரியும். எங்கு நின்று இருந்தாலும் ஒரு பாதம் முழுமையாக பூமி மீது வைத்து ஒரு பாதம் சாய்ந்த படி வைத்திருப்பார். கிருஷ்ணர் தேகம் அழுத்தம் எல்லாம் ஒரு பாதம் மீது அதிகமாக ஒரு பாதம் குறைவாக சுமக்கின்றது என்று தெரிகின்றது. கிருஷ்ணர் இரண்டு பாதங்கள் சர்வ ஜீவிகள் உடைய தேகத்தில் இருக்கின்ற இரண்டு சுவாசைகளாக அடையாளிக்க வேண்டும். நம்முடைய தேகத்தில் இரண்டு மூக்கு துவாரத்தில் சுவாசை ஒன்று அதிகம் ஒன்று குறைவாக சுவாசை வரும். வலது மூக்கு

சுவாசை அதிகம் வந்தால் இடது மூக்கு துவாரத்தில் குறைவாக வரும். ஒரு நேரத்தில் இடது துவாரத்தில் அதிகமாக வந்தால் வலது மூக்கு துவாரத்தில் குறைவாக வரும். இந்த விதமாக வருவதற்கு காரணம் தேகத்தில் சூரிய சந்திர நாடிகள் மீது மனசு மாறி கொண்டிருக்கும். சூரியநாடி மீது மனசு இருக்கும்போது வலது துவாரத்தில், சந்திர நாடியில் இருக்கும் போது இடது துவாரத்தில் சுவாசை அதிகமாக வந்து கொண்டிருக்கும். சூரிய சந்திர நாடிகள் மீது மனசு இருக்கும்போது மனிதன் அனைத்து வேலைகளில் உலக விஷயத்தில் இருப்பார்கள். சூரிய சந்திர நாடிகள் மீது மனசு இல்லாத போது மனிதன் உலக விஷயத்தில் சம்பந்தமில்லாமல் தூக்கத்தில் அல்லது யோகத்தில் சம்பந்தப்பட்டு இருப்பார்கள்.



**பாதங்கள்**

அனைத்து தேகத்தில் சுவாசை இரண்டு பாகங்களாக இருந்து ஒன்று அதிகமாக ஒன்று குறைவாக இருக்கிறது என்னும், உள் உள்ள மனசு இருப்பை வெளிப்படுத்தி கிருஷ்ணர் ஒரு பாதத்தை முழுமையாக வைத்து இன்னொரு பாதத்தை சிறிதாக வைத்தார். நின்று இருக்கின்ற கிருஷ்ணர் கவனமாக இருக்கின்றார். மேலும் விழிப்பில் மனசு வலது இடது நாடிகள் மீது மாறுகின்றது என்று தெரிகின்றது. விழிப்பில் மனோ கவனம் ஸ்தானத்தை தெரிவிப்பதற்காக கிருஷ்ணர் நின்று பாதத்தை காட்டினார். விழிப்பில் மனசு கவனத்தை தெரிந்தவர் தூக்கத்தில் மனோ ஸ்தானத்தை தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வார். அப்படியே மனசு தூக்க விழிப்பில் எங்கு இருக்கின்றதோ தெரிந்து கொள்வது

ஞானமாகும். மனசு சூரிய சந்திர நாடிகளில் இருந்து தூக்கத்தில் பிரம்ம நாடியில் சேரும் என்று தெரிந்தவர் ஆத்மா ஞானத்திற்கு நெருங்கியவராக இருப்பார்.

## 19. தேகம் நீல வண்ணம்

பரமாத்மா உலகமெல்லாம் வியாபித்து இருக்கிறார், இந்திரியங்களுக்கு தெரியாதவர், அனந்தமான சக்தி. அப்படிப்பட்டவரை ஒப்பிட்டு சொல்வதற்கு உலகத்தில் நெருங்கிய சம்பந்தப்பட்டிருப்பது ஆகாசம். ஆகாசம் சூன்யமானது கண்ணுக்குத் தெரியாது. பிரக்ருதியில் ஆகாசம் ஒரு பாகமாக அது பரமாத்மா ஆகாமல் போனாலும், பரமாத்மா விஷயம் ஒப்பிடும் நேரத்தில் வெளிப்படும்போது சூன்யமானது என்று சொல்கின்றோம். சூன்யத்திற்கு கூட ஒரு வண்ணம் இருக்கின்றது, அது நீல நிறம். எந்த வண்ணமும் ஒரு பொருள் மீது அல்லது பதார்த்தம் மீதோ இருக்கும். மற்றும் ஆகாசம் நீல நிறம் எந்த திரை மீதும் இல்லை. அதனை சூன்யத்தில் எவ்வளவு தேடினாலும் இருப்பது போலவே இருக்கும் மற்றும் நெருங்க முடியாது. ஆகாசம் நீல வண்ணமானது. மேலும் நான் கூட எல்லையில்லாத அனைத்தில் வியாபித்து ஆகாசம் போல் இருக்கிறேன் என்பதை தெரிவித்து கிருஷ்ணர் நீல தேகத்தை அணிந்தார். ஆகாசத்திற்கு எல்லை இல்லாததினால் நான் அனந்தமானவன் என்று தெரிவிப்பதற்கு பரமாத்மா தேகம் நீலவண்ணமாக இருக்கின்றது.

## 20. ஆராதனை

இதுவரை தேவாலயங்கள் விஷயம் தெரிந்து கொண்டோம். இப்போது நாம் அனுசரிக்கின்ற பக்தி, அனுசரிக்க வேண்டிய பக்தி ஆராதனை விஷயங்களை பற்றி தெரிந்து கொள்ளலாம். இந்த காலத்தில் இருக்கின்ற மனிதர்களில் பக்தி என்பது மிகக் குறைவாக இருக்கின்றது.

ஏதோ சில நபர்களில் பக்தி எண்ணங்கள் இருந்தாலும், அது சரியான விதானத்தில் இல்லை. கடவுள் இருக்கின்றார் என்னும் நம்பிக்கையில் பலவிதமான பக்தர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதானத்தை அனுசரித்துக் கொண்டு அவருக்கு தெரிந்த விதானமே சரியானது என்று நினைத்துக் கொள்கின்றார்கள். சில நபர்கள் மட்டும் சரியான பக்தி கொண்டு ஞானம் தெரிந்து கொண்டு ஆத்மாவையும் பரமாத்மாவையும் தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்கின்றார்கள். சிலர் வழியில் போய் கொண்டுயிருக்கும் போதே தேவாலயங்கள் முன்பு வெறும் நமஸ்கரித்து கும்பிடுவதால் நம்மை விட பக்திமான்கள் யாரும் இல்லை என்று நினைக்கின்றார்கள். சிலர் வருடத்திற்கு ஒரு தடவை தேவாலயங்களில் தேங்காய் உடைத்து வந்து மற்றவர்களை விட நாங்கள் அதிகம் பக்தி கொண்டவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். சிலர் தேவாலயங்களிடம் போகாமலே வீட்டிலேயே ஏதோ ஒரு தேவதைகள் படம் முன்பு நமஸ்கரித்து பக்தி கொண்டவர்கள் என்று திருப்தி அடைகின்றார்கள். சிலர் திருப்பதி முதலியன யாத்திரைகளுக்கு போய் அவ்வளவு இவ்வளவு காணிக்கைகள் போட்டு கோரிக்கைகளை வேண்டிக் கொள்வதே பக்தி என்று நினைத்துக் கொள்கின்றார்கள். சிலர் சிவலிங்கத்திற்கு அபிஷேகங்கள் செய்து மரணம் தோஷங்கள் போக வேண்டும் என்னும் வேண்டுவது நடைமுறை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சிலர்கள் தெரிகின்ற செடிக்கு பாறைகளுக்கு கும்பிடுவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோருடையது பக்தியாக இருந்தாலும் அதற்கு தகுந்த அர்த்தம் இல்லை. நடந்து கொண்டிருப்பது வழியாக இருந்தாலும் சேரும் கம்யம் சுடுகாடு ஆகலாம், காடும் ஆகலாம் தண்ணீர் குளமாகலாம், கிராமம் ஆவது ஆகலாம். அதன் போலவே செய்வது பக்தியாக இருந்தாலும் அது எந்த விதமாகவும் இருக்கலாம். பரமாத்மாவிடம் சேருவது நம்பிக்கை இல்லை. தெரியாமல் நடக்கின்ற பாதை காட்டுக்கு சேர்ந்தது போல அர்த்தமில்லாத பக்தி கோரிக்கைகளில் நிறைந்த ஜென்மங்கள் எடுக்க வேண்டியது இருக்கும்.

பரமாத்மாவை தெரிவிப்பதற்காக சிருஷ்டிக்கப்பட்ட தேவாலயங்களில் காணிக்கைகளை லஞ்சங்களை காட்டி கோரிக்கைகள் வேண்டும் இடமானது கேள்விக்குறியான விஷயம். கோரிக்கைகள் நிறைவேறாமல் போனால் கடவுளை

தூசிப்பது நடக்கின்றது. கோரிக்கைகள் வேண்டுங்கள் என்னும் நான் நிறைவேற்றுவேன் என்று எந்த கோயிலில் கடவுள் சொல்லினாரா? **ஆசை என்னும் கயிற்றால் கட்டப்பட்டு ரக ரகமான கோரிக்கைகள் வேண்டுவது பக்தி அல்ல. நூறு ரூபாய் செலவு செய்து அபிஷேகம் செய்ய வைத்து லட்ச ரூபாய் ஆதாயம் வரவேண்டும் என்று வேண்டுவது பக்தி அல்ல. கர்மத்தினால் சம்பவிக்கும் நோய்கள் நன்றாக ஆனால் காணிக்கைகள் செலுத்துவோம் என்று வேண்டுவது பக்தி அல்ல. ஆத்மாவை பற்றி தெரிவிக்கும் தேவாலயங்கள் மனிதர்களுக்கு கடவுளுக்கு நடுவில் கோரிக்கைகள் வியாபாரம் மையங்களாக இருப்பது வருந்தத்தக்கது.**

84 லட்சம் ஜீவராசிகளில் உத்தமமான புத்தி கொண்ட மனித ஜென்மம் அணிந்து, பாவ புண்ணியம் வித்தியாசம் தெரியாமல், நடக்கின்ற வேலை அனைத்துக்கும் காரணம் எது என்னும் விவரித்துக் கொள்ளாமல், அவர்களின் புத்திசாலித்தனம் தான் எல்லாவற்றுக்கும் காரணம் என்று நினைத்துக் கொள்வது அகங்காரமாகும். இறப்பு பிறப்பு அதன் பிறகு நிலை என்னவென்று யோசனை செய்யாமல் வீணாக காலத்தை கடத்திக் கொண்டு வாழ்வதில் அர்த்தம் இல்லை. பெயரும், உருவம் இல்லாத பரமாத்மாவை தெரிந்து கொள்வது ஒரு முறையில் கூடியிருக்கின்ற மார்க்கங்கள் இருக்கிறது என்று தெரியாமல் போவது அஞ்ஞானம் ஆகும். காலையில் எழுந்ததிலிருந்து வேலையில் லக்னமாகி ஜீவிதம் என்றால் என்னவென்று எண்ணம் சிறிதளவு கூட இல்லாதவர்கள் பசு பறவைகள் வாழ்க்கையை கடத்துவது போல மற்றும் அவற்றைவிட விசேஷம் இல்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். கடவுள் இருக்கிறார் என்னும் நம்பிக்கை மீது ஆதாரப்பட்டு அதற்கு தேவைப்படும் விவரங்கள் ஒன்றும் தெரியாமல் தேவாலயங்களுக்கு போய் பூஜை செய்கின்றவர்களை பார்த்து சில பேர் நம்பிக்கை என்பது ஒரு நோய் என்று வர்ணித்து சொல்கின்றார்கள். ஒவ்வொரு வேலையில் ஒரு விசேஷம் இருக்கின்றது என்னும் தெரியாதவர்கள் குருட்டு போல பக்தி மார்க்கத்தில் போகின்றவர்களை பார்த்து அவர்களுடைய வேலைக்கு ஆதாரம் இல்லை என்று நிர்ணயித்துக் கொண்டு கடவுளே இல்லை என்று சொல்கின்றார்கள். தூரத்தில் இருந்து பார்க்கின்றவர்கள் புளிய மரத்திற்கும் ஜெம்மி மரத்திற்கும் வித்யாசம் தெரியாத படி பக்தி மார்க்கத்தில் அர்த்தம்

இல்லாததை பார்த்து ஞானிகளையும் யோகிகளையும் கூட ஆஸ்திக நோயாளிகள் போல கணக்கிடும் நாத்திகர்கள் இருக்கின்றார்கள். ஆஸ்திகர்கள் நாத்திகர்கள் இரண்டு வர்க்கங்கள் யோகிகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் அல்லவென்று பலபேருக்கு தெரியாது. **ஆஸ்திகர்கள் நம்பிக்கையாக இருக்கின்றவர்கள், நாத்திகர்கள் நம்பிக்கை இல்லாதவர்கள். நம்பிக்கை நம்பாமல் போவது மீது ஆதாரப்படாமல் சத்தியத்தை நிரூபனை செய்து கொண்டு அனுபவிக்கின்றவர்கள் யோகிகள். புராணங்கள் படி போகின்றவர்கள் ஆஸ்திகர்களாக இருந்தால் அது நிரூபணைக்கு வராது என்று வாதிக்கின்றவர்கள் நாத்திகர்கள். புராணங்கள் சத்தியமானவை அல்ல சாஸ்திரங்களை தெரிந்து அனுசரிக்கின்றவர்கள் யோகிகள். ஆஸ்திகர்களுக்கு யோகிகளுக்கு வித்தியாசம் தெரியாத நாத்திகர்கள் எருது ஈன்றது என்றால் அதை மாட்டு கொட்டாயில் கட்டு என்பது பழமொழி யோகிகளை கூட ஆஸ்திர்களாக சேர்த்துக் கொள்கின்றார்கள். ஆஸ்திகர்களுக்கு நம்பிக்கையே பிரதானம், யோகிகளுக்கு நிரூபனையே பிரதானம் என்று தெரியாதவர்கள் நாத்திகர்கள். ஆஸ்திகர்கள் தெரியாமல் அனுசரிக்கும் முறைகளுக்கு அர்த்தத்தை கொடுக்கின்றவர்கள் யோகிகள் என்று தெரியாதவர்கள் நாத்திகர்கள். அஞ்ஞானத்தில் கோரிக்கைகள் வேண்டுவதற்காக செய்யும் விதானம் பக்தி மார்க்கம் என்னும் நினைக்கின்றவர்களை பார்த்து, கோரிக்கைகள் நிறைவேற்றும் மையங்களே தேவாலயங்கள் என்னும் நினைத்துக் கொண்டிருப்பவர்களை பார்த்து, அவர்கள் செய்யும் பூஜை விதானங்கள் வீணான வேலை என்று நினைத்த நாத்திகர்கள் கடவுள் என்கின்ற பயம் கொண்டவர்கள் நிர்மிக்கப்பட்டதே தேவாலயங்கள் என்னும், தேவாலயங்களுக்கு அர்த்தமில்லை என்று நினைக்கின்றார்கள்.**

ஒவ்வொரு முனையில் ஆத்மா ஞானத்தை வைத்த நிர்மாணங்களே தேவாலயங்கள். ரூபம் பெயர் இல்லாத சூன்யமான சக்தியை பற்றி விவரிக்கப்படுகின்றது தேவாலய நிர்மாணங்கள் என்று முதலிலேயே தெரிந்து கொண்டோம். ஆஸ்திகர்கள் நாத்திகர்கள் அல்லாத யோகிகள் நிர்மிக்கப்பட்ட தேவாலயங்களில் நடக்கின்ற ஒவ்வொரு வேலைக்கு யோகிகளே அர்த்தம் சொல்ல வேண்டியது இருக்கும். ஆத்மா நிரூபனை மார்க்கத்தை குறிக்கின்ற

தேவாலயங்களை அர்த்தம் செய்து கொள்ளாதவர்கள் ஆஸ்திகர்களாக இருந்தால் குருடனை விட மாறுக்கண் நன்றானது போல் நாத்திகர்களை விட நன்றானது என்று சொல்லலாம். ஆஸ்திகர்களாக இருக்கின்றவர்கள் ஞான பார்வை கொண்டு நாங்கள் தெரிவிக்கும் ஒவ்வொரு முறைகளுக்கு அர்த்தம் புரிந்து கொண்டு யோக மார்க்கத்தை அனுசரிப்பீர்கள் என்று தெரிவிக்கின்றோம். நாத்திகத்தை நாசனம் செய்து ஆஸ்திகத்தை கூட விட்டு நிரூபனையே முக்கியமான கொள்கை என்னும் யோக மார்க்கம் அனுசரிக்க வேண்டும் என்னும் இப்போது தேவாலயங்கள் பூஜை விதானங்களுக்கு அர்த்தம் தெரிவிக்கின்றோம்.

## 21. தீபம்

பூஜை விதானத்தில் தீபம் ஏற்றுவது முதல் வேலை, மண் விளக்கில் (பிரமிதா) எண்ணெயை ஊற்றி இரண்டு வத்திகள் வைத்து விளக்கேற்றும் முறை இருக்கிறது. விளக்கின் வெளிச்சம் மட்டுமல்லாமல் ஞானத்தில் தீபத்தின் சாராம்சம் இருக்கிறது. ஒவ்வொரு ஜீவிகளுக்கு தேகம் இருக்கின்றது, அந்த தேகத்தில் கர்மம் இருக்கின்றது. அந்த தேகத்தில் ஆத்மா ஜீவாத்மாக்கள் நிவாசமாக இருக்கின்றார்கள். ஜீவாத்மா தேகத்தில் ஞானத்தினால் யோகத்தை அனுசரித்து ஆத்மாவில் இணைந்து போனால் யோக சக்தி கிடைக்கும். அந்த யோக சக்தியால் கர்மம் எல்லாம் எரிந்து போகும். ஞான அக்னி (யோக சக்தி) இல்லாதது கர்மம் எரிந்து போகாது. கர்மம் எறியவில்லை என்றால் ஜென்மங்கள் வந்து கொண்டே இருக்கும். அதனால் ஜென்மங்களே இல்லாமல் வேண்டுகின்றவர்கள் அதற்கு சமமாக அர்த்தம் இருக்கும் படி வெளியே அர்த்தத்தில் தீபத்தை ஏற்றுவார்கள்.

மண் விளக்கை (பிரமிதா) தேகமாக ஒப்பிட்டு, அதில் இரண்டு வத்திகள் ஜீவாத்மா ஆத்மாவாக ஒப்பிட்டு, ஞானம் தெரிந்து கொண்டு யோகத்தை அனுசரிக்கும் போது ஆத்மா ஜீவாத்மாக்கள் இணைந்து போகும் படி இரண்டு வத்திகளை

போட்டு விளக்கு ஏற்றுவார்கள். இரண்டு வத்திகள் ஒரு ஜோதியாக எரிவதை யோகமாக சொல்வார்கள்.



## தீபம்

தேகம் இருக்கும்போது தவறாமல் கர்மம் இருக்கும். மேலும் மண் விளக்கு வைத்த போது முதல் எண்ணெயை ஊற்றி வைத்து பிறகு வத்தியை போட்டு விளக்கு வைப்பார்கள். குருவினால் ஞானம் கிடைக்கும் மேலும் பக்கத்தில் இருக்கின்ற அக்னினால் வத்தியால் விளக்கேற்றுவார்கள். ஞானம் என்னும் அக்னினால் இரண்டு வத்திகள் (ஜீவாத்மா ஆத்மாக்கள்) ஒன்றாகி எரிந்த போது கர்மம் என்ற எண்ணெய் முடிந்து போகும். ஞானாக்னியால் தேகத்தில் இருக்கின்ற கர்மம் எரிந்து போகும் என்பது குறிப்பாக விளக்கில் இருக்கும் எண்ணெய் முடிந்து போவது. விளக்கில் உள்ள எண்ணெய் முடிந்த பின் உடனே இரண்டு வத்திகள் அவிந்து போகும். அதன் போலவே தேகத்தில் இருக்கும் கர்மம் முடிந்தபின் தேகத்தில் இருக்கின்ற ஆத்மா ஜீவாத்மாக்கள் இல்லாமல் போய் பரமாத்மாவில் ஐக்கியமாகி போகும். தேகத்தில் இருக்கின்ற ஆத்மா ஜீவாத்மா போனால் இறந்த தேகம் போல் எண்ணெய் முடிந்து போய் இரண்டு வத்திகள் அவிந்து மண் விளக்கு மட்டும் இருக்கும். இறந்த தேகத்திற்கு மதிப்பில்லாதது போல் அவிந்த மண் விளக்குக்கு கூட மதிப்பில்லை. பூர்வம் மண் விளக்குகளை எறிந்து விடுவார்கள். இறந்த தேகம் அழிந்து போகின்றதால் உடைந்து போகின்ற மண் விளக்கை வைப்பார்கள், முறை பிரகாரம் உலோகம் விளக்குகளை ஏற்றக்கூடாது. ஒரு நேரத்தில் உலோகம் விளக்கு வைத்தால் சுத்தம் செய்து புலங்கிக் கொள்வார்கள். இப்போதும் கூட மண்ணால் தயார் செய்யப்பட்ட பானை மூடியால் அல்லது சிறிய மண் விளக்குகளில் தீபம் வைக்கும் சம்பிரதாயம் சில தேவாலயங்களில் இருக்கின்றது. ஜீவன் குருவிடம் இருந்து அடைந்த ஞானாக்னியால் ஆத்மாவில் கூடி எரிந்து

எல்லாவற்றையும் விட்டு பரமாத்மாவில் சேர்ந்து போகும் என்பதற்கு குறிப்பாக தீபாராதனை அந்தரார்த்தம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். கோயிலில் எத்தனை தீபங்கள் வைத்தாலும் வத்திகள் எண்ணெய் எல்லாவற்றுக்கும் ஒன்றுதான் அர்த்தம். பெரிய பூஜைகள் செய்யாமல் இருந்தாலும் விசேஷம் கொண்ட தீபாராதனை ஒவ்வொரு வீட்டில் செய்ய வேண்டும் என்னும் பெரியோர்கள் தெரிவித்தார்கள். இன்றும் சில வீடுகளில் காலை மாலை தீபாராதனை செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் அது பெயருக்கு மட்டும் வேலையாக இருக்கின்றது மற்றும் அர்த்தம் மற்றது. சிலர் ஒரு வத்தியை போட்டு தீபம் வைப்பார்கள். அப்படி வைக்க கூடாது. அப்படி வைப்பதால் முறை கூட தவறு செய்தது போல் ஆகும். இந்த காலத்தில் சில தேவாலயங்களில் மண் விளக்கு தீபாராதனை செய்யாமல் கரண்ட் பல்பு எரித்து நமஸ்கரிக்கின்றார்கள். அர்த்தமில்லாமல் இருந்தாலும் முறையாவது இருப்பது நல்லது. மேலும் முறைகளும் கூட இல்லாமல் போனால் மிக அஞ்ஞானம் ஆகும். அதனால் கரண்ட் பல்புகள் எத்தனை எரித்தாலும், அர்த்தம் இருக்கும்படி மண் விளக்கு தீபாராதனை செய்வது அர்த்தத்தில் கூடியிருக்கின்ற சம்பிரதாயமாகும்.

## 22. தாம்பூலம்

பூஜை விதானத்தில் தாம்பூலம் வைப்பது கூட இருக்கின்றது. தாம்பூலங்களில் ஒன்று 1.வெற்றிலை, 2.பாக்கு, 3.சுண்ணாம்பு பூர்வ காலத்தில் வைக்கப்பட்டிருந்தார்கள். தாம்பூலத்தில் வெற்றிலை விசாலமானது. அதனை விட சிறிய அளவு கொண்டது பாக்கு. பாக்கைவிட சிறிய அளவு சுண்ணாம்பு. இந்த மூன்றும் சேர்ந்தால் சிவப்பு நிறமாக மாறி போகும் சுபாவம் இருக்கின்றது. வெற்றிலை காரத்தன்மை தனித்துவம் கொண்டது. அதன் போலவே பாக்கு கூட துவரப்பு தனித்துவம் கொண்டது. சுண்ணாம்பு கூட காட்டானது. இந்த மூன்றும் மூன்று விதமாக தனித்துவம் கொண்டு இருக்கின்றது. நம் தேகத்திலும் கூட குண சக்கரத்தில் விசாலமானது தாமசம். அதனை விட அளவில்

சிறியது ராஜச பாகம். ராஜசத்தை விட சிறியது சாத்வீகம். இப்போது நாம் குணசக்கரத்தில் விசாலம் கொண்ட தாமசபாகத்தில் தாம்பூலத்தில் பெரியதான வெற்றிலையை ஒப்பிட்டுக் கொள்ளலாம். அதன் போலவே ராஜசத்தை பாக்குவாக, சாத்வீகத்தை சுண்ணாம்பாக பெரியோர்கள் கணக்கிட்டார்கள். உள்ளிருந்து குணசக்கரத்தில் மூன்றாவது தாமசம் இரண்டாவது ராஜசம் ஒன்றாவது சாத்வீகம். அதனால் மூன்று வெற்றிலைகள், இரண்டு பாக்குகள், சுண்ணாம்பு உண்டையை வைப்பார்கள். தாம்பூலத்தில் மூன்று பொருட்களுக்கு தனித்துவமான ருசிகள் இருப்பது போல் குணசக்கரத்தில் மூன்று பாகங்களுக்கு தனித்துவமான முறைகள் இருக்கின்றது. தாம்பூலத்தில் மூன்று பொருட்களினால் சிவப்பு நிறம் ஏற்பட்டது போல் குணசக்கரத்தில் மூன்று குணங்களினால் கர்மம் என்னும் சிவப்பு நிறம் ஏற்பட்டது. அதனால் ஜீவாத்மாவாக இருக்கின்ற நான் கர்மத்திற்கு காரணமான மூன்று குணங்களை உன் முன்னே விட்டு விடுகிறேன். குணங்கள் இல்லாமல் என்னை உன்னில் ஐக்கியம் செய்து கொள்ள வேண்டும் என்னும் வேண்டுவது வெளி அர்த்தமாக தாம்பூலம் வைப்பது என்று தெரிந்து கொள்ள வேண்டும். இந்த காலத்தில் பூஜை நேரத்தில் தாம்பூலத்தை வைத்து வெற்றிலை, பாக்குகள் மட்டும் வைக்கின்றார்கள். மேலும் சுண்ணாம்பை வைப்பதில்லை. இரண்டு குணங்கள் போனாலும் மூன்றாவது இருப்பது போல் மூன்றாவதான சுண்ணாம்பை வைக்காமல் போவது விசித்திரம். சுண்ணாம்பு இல்லாத தாம்பூலம் தெய்வ சன்னிதியில் அர்த்தமில்லாததாகும்




**தாம்பூலம்**

தாம்பூலத்துடன் ரக ரகமான தின்பண்டங்கள் நைவேத்தியமாக வைப்பதும் கூட நடக்கின்றது. பாயாசம், பால், வாழைப்பழம், சர்க்கரை, தயிர் சாதம், லட்டுக்கள் முதலியன நைவேத்தியமாக சமர்ப்பிக்கின்றார்கள். இதெல்லாம் தின்பண்டங்களே. எந்த தின்பண்டங்கள் சாப்பிட்டாலும் அந்த தின்பண்டத்தின் நிறம் வாயில் ஒட்டாது. எல்லா தின்பண்டங்கள் விட தனித்துவமாக இருக்கின்ற தாம்பூலம் சாப்பிட்டால் வாய் சிவப்பாகும். எல்லா தின்பண்டங்கள் நிறம் வாசனைகள் தாம்பூலம் மூடி மறைக்கின்றது. அதன் போலவே ஆகாரங்கள் தின்பண்டங்கள் போல நம் தேகத்தில் பல ரகமான விஷயங்கள் இருக்கின்றது. ரக ரகமான விஷயங்கள் என்னில் இருப்பதை உனக்கே சமர்ப்பிக்கின்றேன் என்னும் குறிப்பு எல்லாவிதமான தின்பண்டங்கள் நைவேத்தியமாக வைப்பது. தேகத்தில் இருக்கின்ற அனைத்து விஷயங்கள் மூன்று குணபாகங்களுடையது என்னும் தெரிவிக்கும் விதனாமே அனைத்து தின்பண்டங்கள் விட சிவப்பாக ஆகின்ற தாம்பூலத்தை வைத்தோம். நைவேத்தியங்களாக தின்பண்டங்கள் ஏதவாதும் இருக்கலாம். சிலர் மாமிசத்தை கூட நைவேத்தியமாக வைக்கின்ற பூஜைகளும் இருக்கின்றது. சைவம் நைவேத்தியமானாலும் அசைவம் நைவேத்தியமானாலும் தாம்பூலத்தை வைப்பது எல்லோரும் செய்வார்கள். இதனினால் ஒவ்வொரு விஷயங்கள் மூன்று குணங்களில் இணைந்து இருக்கிறது என்று தெரிகின்றது. இந்த காலத்திலும் கூட நைவேத்தியங்கள் வைக்கின்றவர்கள் எல்லா இடங்களில் இருக்கின்றார்கள். மேலும் தாம்பூலத்தில் சுண்ணாம்பு வைப்பவர் இல்லை. ஒரு திருப்பதி தேவஸ்தானத்தில் மட்டும் தாம்பூலத்தில் சுண்ணாம்பு வைக்கின்ற சம்பிரதாயம் இருப்பது போல் சொல்லப்படுகின்றது. மதுராவில் பிருந்தாவனத்தில் சுண்ணாம்பு வைக்கின்ற சம்பிரதாயம் இருக்கிறது என்று கேட்டோம்.

# 23. பூமாலை

பூர்வ காலத்தில் ஞான பார்வை கொண்ட மக்கள் அவர்களுடைய ஆராதனையில் பூமாலையை கடவுளுக்கு சமர்ப்பிப்பார்கள். அதன் போலவே தெய்வத்திற்கு சமமான குருகளுக்கு பூமாலையை செலுத்துவார்கள். இன்று காலத்தில் அரசியல்வாதிகளுக்கு பூமாலைகள் செலுத்துகின்றார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு பூர்வம் கோயிலில் உள்ள கடவுளுக்கு பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற குருவுக்கு தவிர வேறொருவருக்கும் பூமாலை செலுத்த மாட்டார்கள். பூமாலை கிடைக்காத நேரத்தில் சிறிது பூ எடுத்துக்கொண்டு கடவுளை பூஜை செய்வார்கள். பூவினால் பிறந்தது பூஜை என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதனால் கௌரவம் எண்ணம் கொண்ட குருகளிடம், தேவாலயங்களில் கடவுளிடம் மட்டும் பூவை உபயோகித்துக் கொண்டிருப்பார்கள். உருவம் சொரூபம் கொண்ட பிரதிமைக்கு பூமாலைகள் உபயோகித்துக் கொண்டிருப்பார்கள். லிங்க உருவம் கொண்ட ஈஸ்வர ஆலயங்களில் லிங்கம் இடத்தில் பூவை பயன்படுத்தமாட்டார்கள். லிங்கத்திற்கு பூமாலை செலுத்தாமல் போவது, உருவம் கொண்ட பிரதிமைக்கு பூமாலை செலுத்துவதால் அர்த்தம் என்னவென்று சிலருக்கு கேள்வி வரலாம். அதற்கு பதில் உருவம் கொண்ட தேகத்தில் ஆத்மாவே கடவுள் என்று சொல்லினோம் அல்லவா! அந்த கடவுள் தேகம் நடுவில் வியாபித்து இருக்கின்ற பிரம்ம நாடியில் நிவாசித்து தேகம் எல்லாம் சைதன்ய உருவத்தில் வியாபித்து இருக்கின்றார். தேகம் நடுவில் சிரசுல் இருந்து கீழ் வரை வியாபித்து இருக்கின்ற பிரம்ம நாடியில் ஆத்மா இருக்கின்றது. அது மொத்தம் ஏழு நாடி மையங்கள் மீது வியாபித்து இருக்கின்றது. பூமாலை கடவுளுக்கு சமர்ப்பிக்கின்றோம் என்ற எண்ணத்துடன் அந்த மாலையை ஏழு மையங்கள் வரை இருக்கும்படி தலை மேல் இருந்து கீழ் வரை வியாபித்து இருப்பது போல் பூமாலையை அலங்கரித்துக் இருப்பார்கள். சம்பிரதாயம் பிரகாரம் தலை மேல் இருந்து மாலை செலுத்துவது இப்போதும் திருப்பதி தேவஸ்தானத்தில் ஸ்ரீவெங்கடேஸ்வர சுவாமி பிரதிமையிடம் பார்க்கலாம். வாஸ்தவமாக எங்காவதும் இந்த கடவுளுக்காவதும் இதன் போலவே செய்ய வேண்டியது இருக்கும்போது அப்படி செய்யாமல் பூமாலைகள் கழுத்து மேல் இருந்து என்றால் கழுத்து இடத்திலிருந்து

செலுத்துகின்றார்கள். கழுத்தில் இருந்து மாலை இருப்பதினால் பிரம்ம நாடியின் ஐந்து நாடி மையங்களுக்கே செலுத்துவது போல் ஆகும். மற்ற இரண்டு மையங்களை விட்டுவிட்டது போல் ஆகும். சிலர்கள் சிறிய மாலையை செலுத்துவதால் மேல் கழுத்து ஸ்தானத்தில் இருந்து இருதய ஸ்தானம் வரை வியாபித்து இருப்பதினால் வெறும் இரண்டு ஸ்தானத்துக்கு மட்டும் சேருகின்றது. கீழ் மூன்று மையங்களை விட்டு செலுத்துவது போல் ஆகும். அப்படி செலுத்துவதால் சம்பிரதாயம் அல்லவே அல்ல. அதனால் அருகதை இருந்தால் நீட்டமாக இருக்கின்ற பூமாலையுடன் ஏழு நாடி மையங்களுக்கு மாலையை செலுத்த வேண்டும். இல்லாமல் போனால் சில பூக்கள் அல்லது ஒரு பூவாவது கடவுள் சிரசு பாகத்தில் வைத்து ஆராதனை செய்வது நல்லது. மேல் ஒரு மையத்தின் மேல் வைப்பதால் ஆத்மா அனைத்துக்கும் வைத்தது போல் ஆகும். அப்படி ஆகாமல் மேல் விட்டு கீழ் ஐந்து மையங்களுக்கு பூமாலை போட்டால் பிரயோஜனம் இருக்காது.

ஆலயங்களில் கடவுள் பிறகு பூஜை ஸ்தானத்தில் இருக்கின்றவர் குரு. குரு தேகத்தில் ஆத்மா சொரூபம் கொண்ட ஏழு மையங்கள் வியாபித்து இருக்கின்றார் என்னும் எண்ணத்தில் பூமாலையை செலுத்துவார்கள். பக்தி எண்ணத்துடன் ஆராதிக்கின்ற எண்ணத்துடன் குரு சிரசு மேலிருந்து சப்தஸ்தானம் வரை செலுத்திய மாலையை பிறகு குரு அதை எடுத்து வைப்பார் அல்லது தலை மேல் இருந்து கழுத்து மேல் வைத்து கொள்வார். கோயிலில் இருக்கின்ற பிரதிமை அசையாததால் பூமாலையை அப்படியே தலைமேல் வைப்பார்கள். குரு அசைகின்றவர் ஆனதினால் மாலை கீழே விழுகும் வாய்ப்பு இருக்கும். அப்படி விழுகாமல் இருப்பதற்காக பிறகு கழுத்து பாகத்தில் நகற்றிக் கொள்வார், இல்லையெனில் முழுமையாக எடுத்து பக்கத்தில் வைப்பார்கள். எது எப்படியானாலும் சப்த ஸ்தானத்திற்கு மாலையை செலுத்துவது முக்கிய நோக்கம். ஏழு மையங்களில் இருந்து தேகத்தை பொம்மை போல் ஆட வைக்கும் தெய்வத்திற்கு பூமாலை போடுகின்றேன் என்று நினைத்துப் போடுவார்கள். குரு தேகத்தில் கூட அதே ஆத்மா இருக்கிறது என்று நினைத்து குருவுக்கு கூட செலுத்துவார்கள். மற்ற எல்லா தேகத்தில் கூட ஆத்மாவே இருக்கின்றதினால் எல்லோருக்கும் மாலையை போடாமல்

குருவுக்கும் கடவுளுக்கும் இருவருக்கு மட்டும் செலுத்தி அவர்கள் மட்டும் பூஜ்ஜியர்கள் என்று தெரிவித்தார்கள். இப்போது காலத்தில் பூஜை எண்ணம் இல்லாமல் இருந்தாலும் கௌரவத்திற்காகவோ, பாராட்டுவதற்கோ, அடையாளத்திற்காகவோ வேறவர்களுக்கு கூட பூமாலை செலுத்துகின்றார்கள். அப்படி செய்வதில் இன்று இருக்கின்ற மக்களுக்கு யார் பூஜ்ஜியர்கள் என்று தெரியாமல் போனது. அதனால் இவர்கள் பூஜ்ஜியர்கள் என்று தெரியும்படி ஆலயத்தில் இருக்கின்ற கடவுளுக்கு ஞானம் தெரிவிக்கும் குருவுக்கு பூமாலை செலுத்தினோம்.

சிவலிங்கத்திற்கு பூமாலை போடக்கூடாது என்று சொல்லினோம் அல்லவா! அது பூஜை அல்லாததா என்று சிலர் கேட்கலாம். அதற்கு பதில் லிங்கம் மனிதன் உருவம் கொண்டது அல்ல. மனித உருவத்தில் ஆத்மா கடவுளாக இருக்கிறார் என்னும் எண்ணத்துடன் உருவம் கொண்ட பிரதிமைக்கு பூமாலை மேலிருந்து போடப்படுகின்றது. லிங்கத்தில் ஆத்மாவும் இல்லை ஜீவாத்மாவும் இல்லை, லிங்கம் பரமாத்மா சொரூபம் அனைத்தில் வியாபித்து இருக்கின்ற அதற்கு ஒரு நிலையை ஏற்படுத்தி பூமாலை போட முடியாது. வேறு தேவாலயங்களில் போல அபிஷேகங்களில் ஆராதனைகளில் எல்லாவற்றிலும் மிக வித்தியாசம் இருக்கும். மோக்ஷம் சின்னம் புருஷோத்தமன் எண்ணமான லிங்கத்தின் முன்பு ஆராதனை இருக்கக் கூடாது மேலும் அர்த்தம் செய்து கொள்வது மட்டும் இருக்கும், லிங்கத்தின் தனித்துவமே அது. சிருஷ்டி ரகசியத்தை தெரிவிக்கும் லிங்கத்தை பார்த்து அதனுடைய தனித்துவம் தெரிந்து கொள்ள வேண்டியது மட்டும் தான் மேலும் ஆராதனை செய்ய வேண்டியது அல்ல. பூர்வம் ஞானம் தெரிந்த பெரியோர்கள் எப்படி நடந்து இருந்தால் அப்படி அர்த்தம் தெரிந்து கொண்டு நடக்க வேண்டியது நம்முடைய கடமை. அப்படி ஆகாமல் நமக்கு இஷ்டம் வந்தபடி செய்து கொண்டு போனால் ஒவ்வொன்றுக்கும் ஒரு நடை முறை இருக்கும் என்னும் தேவாலயங்களில் தெரிவிக்கின்ற முறைகள் என்னவென்று அவற்றின் அர்த்தம் என்னவென்று கிரகித்து அவற்றின் பிரகாரம் கடவுளுக்கு சமர்ப்பிக்கின்ற பூமாலையை முழுமையான அர்த்தத்துடன் சப்த ஸ்தானத்திற்கு சமர்ப்பிக்கலாம்.

## 24. அபிஷேகம்

தேவாலயங்களில் இருக்கின்ற கடவுள்களுக்கு அபிஷேகங்கள் செய்து கொண்டிருப்பார்கள். பூஜை விதானங்களில் அபிஷேகம் கூட ஒரு பாகமாக இருக்கின்றது. பூர்வம் ஞானிகள் தேவாலயங்களுக்கு தேவாலயங்களில் இருக்கின்ற வேலைகளுக்கு எண்ணம் கூடிய முறையை அர்த்தத்துடன் வைத்தார்கள். மேலும் அவற்றின் விவரம் கால கர்ப்பத்தில் மறைந்து போனாலும் சில முறைகள் மீதி இருந்தாலும் அர்த்தங்கள் இல்லாமல் போனது. அதனால் சிலர்கள் முறைகள் சரியாக அனுசரிக்காமல் சுய புத்திக்கு தோன்றியது போல் சில வேலைகளை இணைத்து கொண்டார்கள். அப்படிப்பட்ட வேலைகளில் அபிஷேக காரியங்கள் கூட ஒன்று இருக்கின்றது. அபிஷேகம் என்றால் பிரதிமையை குளிப்பாட்டுதல் என்று அர்த்தம். பூர்வம் கர்ப்ப கோயிலில் பிரதிமையை வெறும் மூன்று திரவியங்களால் மட்டுமே குளிப்பாட்டுவார்கள். ஒன்று தேன், இரண்டாவது பால், மூன்றாவது தண்ணீராக இருந்தது. அபிஷேகம் என்பது பிரதிமை ஸ்நானம் வெறும் உருவம் கொண்ட பிரதிமைகளுக்கு மட்டும் செய்வார்கள். உருவம் இல்லாத சிவலிங்கத்திற்கு செய்ய மாட்டார்கள். இந்த காலத்தில் சிவலிங்கத்திற்கு கூட அபிஷேகம் காரியம் செய்கின்றார்கள். லிங்காபிஷேகம் முக்கியம் என்று நினைப்பவர் பலபேர் இருக்கின்றார்கள், இது முழுமையாக சம்பிரதாயத்திற்கு எதிர்ப்பான விஷயம். லிங்கத்தை அபிஷேகப் பிரியன் என்று வர்ணிப்பது மிக விசித்திரமாக இருக்கிறது. எங்களுடைய வார்த்தை சிலருக்கு பிடிக்காமல் போகலாம். பிடித்தாலும் பிடிக்காமல் போனாலும் சத்தியத்தை தெரிந்து கொள்ள வேண்டும் என்பவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால்!

நாம் முதலிலேயே சொல்லிக் கொண்டோம். லிங்கத்தை தேவதைகளில் சேர்க்கக்கூடாது, அதன் போலவே லிங்கம் இருக்கின்ற கோவிலை கர்ப்ப கோவில் என்னும் சொல்லக்கூடாது என்று கூட சொல்லினோம். லிங்கத்தை சாக்ஷாத் நிராகாரமான பரமாத்மாவாக உணர வேண்டும் என்று கூட தெரிவித்தோம். லிங்கத்திற்கு சிம்ம தலயாட்டம்

வைக்ககூடாது என்று சொல்லினோம். இது எல்லாவற்றுக்கும் காரணம் எதை புருஷோத்தமர் என்னும் சொல்கின்றோமோ, எது ஜீவாத்மா ஆத்மாவை விட பரமாக இருக்கின்ற பரமாத்மாவாக சொல்கின்றோமோ அதனை பிரதி பிம்பமாக லிங்க உருவமாக தேவாலயங்களில் காட்டினோம். அதனால் லிங்கத்தை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டதாக நினைக்க வேண்டும். லிங்கம் உருவம் இல்லாத கடவுள் ஆனால் மற்ற எல்லா பிரதிமையை உருவமுள்ள கடவுளாக நினைக்க வேண்டும். லிங்கத்தை பரமாத்மாவாக நினைக்க வேண்டும் உருவம் இருக்கின்ற கடவுளை பகவானாக நினைக்க வேண்டும். லிங்கம் மாயாவுக்கு அப்பாற்பட்டது அதற்கு பிரதிமைக்கு இருக்கின்ற முறைகள் இருக்காது. உருவமுள்ள பிரதிமைகள் பகவான் சின்னம் மேலும் அவற்றுக்கு தனித்துவமான முறைகள் பெரியோர்கள் நிர்ணயித்தார்கள். பகவான் பாகத்திலிருந்து (தாய் கர்ப்பத்திலிருந்து) பிறந்து வந்து நம்மை போல் பூமி மீது திரிந்து கொண்டு இருப்பார். அதனால் பகவானுக்கு நம்மைப் போல குணங்களும் கூட இருக்கும். குணங்கள் மட்டுமல்லாமல் சர்வ சாதாரணமாக அவர் பூமி மீது நடக்க வேண்டியது இருக்கும். ஒரு ஞானத்தை போதிப்பது தவிர எல்லாவற்றிலும் சாதாரண நபராக இருக்கின்றவரை பகவானாக அடையாளிப்பது அசாத்தியம். மேலும் எத்தனையோ தடவை பரமாத்மா பகவானாக வந்த போது அவரை அடையாளிக்காமல் போனார்கள். சர்வ சாதாரணமாக இருக்கின்ற பகவான் குணங்களில் இருப்பார். அவருக்கு கூட சாதாரணமாக மனிதனுக்கு இருக்கும்படி சாத்வீக ராஜச தாமசம் என்ற குணங்கள் இருக்கும். அந்த மூன்று குணங்கள் தலையில் இருக்கும். தலையில் நிலையமாக இருக்கின்ற குணங்களுடன் எல்லோரும் போல பகவான் அனுசரித்தாலும் அவர் நம்மைப் போல கர்மத்தை சம்பாதித்துக் கொள்ள மாட்டார். தாமரை இலை மீது தண்ணீர் இருந்தாலும் தாமரை இலைக்கு தண்ணீர் ஒட்டாதது போல குணங்களில் பகவான் இருந்தாலும் பகவானுக்கு குணங்களினால் வரும் பலன் கொண்ட கர்மம் ஒட்டாது. எப்போதும் குணங்களில் இருந்தாலும் அவற்றின் தூய்மையற்ற கர்மம் அவருக்கு ஒட்டாதது என்னும் அர்த்தம் தெரியும்படி முதல் தேனுடன் பிறகு பாலுடன் அதன் பிறகு தண்ணீரிலும் பிரதிமையை அபிஷேகம் செய்து மென்மையான நூல் துணியில் ஈரம் இல்லாமல் துடைப்பார்கள்.

தாமச குணம் மிக நீச்சமானது அதில் சிக்கிக் கொண்டவர்கள் பலவிதமான அஞ்ஞானத்தில் உட்பட்டவர்கள். தேன் இனிப்பு கொண்ட மற்றும் பிசுபிசுப்பாக இருக்கும். தேன் இனிப்புக்காக அதன் மேல் வளைந்த புழுவுகள் தேன் பிசுபிசுப்புக்கு சிக்கிக் கொண்டு அதிலே முழ்கி இறுதிக்கு மரணிக்கும். தேன் எந்த விதமாக இருக்கின்றதோ அதன் போலவே தாமசபாகத்தில் ஆறு குணங்கள் உலகத்தில் ஜீவிகளுக்கு மாதுரியத்தை காட்டுவது போல் இருந்து அந்த குணத்தில் சிக்கிக் கொண்ட ஜீவனை கடவுள் பக்கம் போகாதபடி செய்து சீரழிந்த ஜென்மங்கள் ஏற்படுத்துகின்றது. அதனால் தாமச குணத்தை தேனுக்கு சமமாக ஒப்பிட்டு அந்த குணம் பகவான் தலையில் இருக்கும் போதும் தூய்மையற்ற தன்மை தலையில் இருந்து வழுக்கியது போல் முதல் தேனை தலை மேல் இருந்து கீழ் போகும் படி பிரதிமை மீது ஊற்றுகின்றார்கள். பிறகு தேனை விட வண்ணத்தில் ருசியில் எவ்வளவோ வித்தியாசமாக இருக்கின்ற பாலை ராஜச குணங்களாக ஒப்பிட்டு பாலை கூட தலை மேல் இருந்து கீழ் வழுக்கியது போல் ஊற்றுகின்றார்கள். தேன் பால் முடிந்தபின் சாத்வீக குணத்திற்கு சமமாக தண்ணீரை ஒப்பிட்டு தண்ணீரைக் கூட அதே விதமாக ஊற்றி ஈரம் கூட இல்லாமல் துடைத்து பகவானுக்கு மூன்று குணங்கள் இருந்தாலும் அவற்றினால் புனிதமானவர் என்று அர்த்தத்தை தெரிவித்தார்கள். பூர்வம் இதன் போல் அர்த்தத்தில் கூடி இருக்கின்ற அபிஷேகம் இருக்கும் போது இன்று அபிஷேகம் அர்த்தமில்லாமல் போனது. அபிஷேகத்தில் தேன், பால், நீர் மட்டுமல்லாமல் நெய்யையும் தயிரையும் உபயோகிக்கின்றார்கள். அதன் போல நெய் தயிர் முறைகளுக்கு எதிர்ப்பு. அபிஷேகம் உருவம் கொண்ட குணங்களில் இருக்கின்ற பகவான் குணத்திற்கு அதீதமான நோக்கத்தில் செய்கின்றது. மற்றும் பிறக்காத பரமாத்மா நிராகாரனாக குணத்திற்கு சம்பந்தமே இல்லாத போது, அப்படிப்பட்டவரின் நோக்கத்தில் லிங்கத்தை வைத்த போது, அந்த லிங்கத்திற்கு அபிஷேகம் செய்வதில் லிங்கத்திற்கே அர்த்தம் இருக்காது. அதனால் லிங்காபிஷேகம் தகுந்த வேலை அல்ல என்னும், உருவம் கொண்ட பிரதிமைகளுக்கு கூட தேன் பால் தண்ணீர் மட்டும் அபிஷேகம் செய்ய வேண்டும் என்றும், அப்போதுதான் இந்து தர்மாச்சரணை ஆகும் என்னும், அப்படி ஆகாமல் வேறு விதமாக செய்வது அதர்மம் முறையாகும் என்னும், தர்ம

பிரதிஷ்டாபன செய்யும் பகவானுக்கு அதர்மங்கள் பிடிக்காது என்று தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது இருந்தாவது அபிஷேகம் அர்த்தமற்றதாக ஆகாமல் பிரதிமைகளுக்கே செய்ய வேண்டும் என்று தெரிவிக்கிறோம்.

## 25. கொப்பரை காய் (தேங்காய்)

தேவாலயங்களில் வீடுகளில் சிறிதளவு கூட தெரியாதவர்களும் தேங்காய் இல்லையென்றால் பூஜை செய்ய மாட்டார்கள். தேங்காய் உடைத்தால் தான் பூஜை என்ற எண்ணம் பல பேருக்கு இருக்கின்றது. தேங்காயை பிரதிமை முன் எதற்கு உடைக்கின்றார்கள்? என்று சிலரை கேட்டால், தேங்காயை கடவுளுக்கு அர்ப்பனம் செய்து அதனை நாம் பிரசாதமாக வாங்கிக் கொள்வதற்கு முக்கியமானது என்று தெரிவித்தார்கள். தேங்காய் எதற்கு முக்கியமானது? வேறு காய்கள் எதற்கு உடைக்க கூடாது? என்னும் கேட்டால் அதற்கு சரியான பதில் சொல்லாமல் பெரியோர்கள் செய்தது போல் செய்ய வேண்டும் மற்றும் விவரித்து கேட்கக் கூடாது என்று சொல்கின்றார்கள். இன்னும் சில பேர்களை தேங்காய் நார்கள் எல்லாம் புடுங்கி மேல் குடுமி கொஞ்சம் வைக்கின்றோமே அந்த சிறிதளவு எதற்கு வைக்க வேண்டும்? என்னும் கேட்டால் பூர்வத்திலிருந்து வருகின்ற முறை செய்ய வேண்டும் மேலும் அதனை விமர்சிக்க கூடாது என்று சொல்லினார்கள். அவருக்கு தெரியாமல் அப்படி சொல்லினார்கள் மேலும் தேங்காயில் எவ்வளவு அர்த்தம் கூடி இருக்கின்றது. அந்த அர்த்தம் தெரிந்து கொள்ளாமல் அதனை பூஜை பொருளாக வைத்துக் கொண்டு கடவுளிடம் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறோம். தேங்காயின் சாராம்சம் தெரிந்து கொண்டால் பக்தி எவ்வளவோ நன்றாக இருக்கும். மேலும் சாராம்சம் தெரியாமல் சில பேர் பக்தர்கள் ஒருவர் நான்கு, ஒருவர் இரண்டு, பணம் இருக்கின்றவர் இன்னும் அதிகமாக உடைக்கின்றார்கள். அதிகம் தேங்காய் உடைத்தால் பக்தி, இல்லை என்றால் பக்தி அல்லாததா? ஒன்றுமில்லாதவன் ஏழை தேங்காயை உடைக்காமல் போனால் அவனுடையது பக்தி அல்லவென்று சொல்லலாமா?



**தேங்காய்**

கடவுள் ஒப்புக் கொள்ள மாட்டாரா? எல்லாவற்றுக்கு முக்கியமானது மனசு. எதுவும் இல்லாமல் போனாலும் மனசு இருந்தால் அதனை விட எனக்கு பிரியமானவர்கள் இல்லை என்னும் கடவுள் பகவத்கீதாவில் கூறியுள்ளார். ஆனால் தேங்காய் பூஜாவிதானத்தில் எதற்கு இடம் பிடித்தது, அதனுடைய தனித்துவம் என்னவென்றால்? தேங்காய் கூட பரமாத்மாவை தெரிந்து கொள்வதற்கு சின்னமாக உபயோகப்படுகின்றது. மேலும் அதனால் பூர்வம் இருந்த பெரியோர்கள் தேங்காயை தேவாலயங்களில் உபயோகித்தார்கள். தேங்காயில் அஞ்ஞானிகள் ஞானிகளாக மாறுவார்கள் என்னும் பெரியோர்கள் இந்த வேலையை செய்தார்கள். மேலும் காலம் கடந்து கொண்டிருக்கும் போது அதனுடைய அர்த்தம் தெரியாமல் போனது. அதனுடைய அர்த்தம் தெரிவிப்பவர்கள் இல்லாமல் போனார்கள். இந்த காலத்தில் தேங்காய் மனிதர்களுக்கு கடவுளுக்கு நடுவில் வியாபாரப் பொருளாக மாறிப் போனது.

தேங்காய் சுற்றி இருக்கின்ற நார்கள் எல்லாம் எடுத்துவிட்டால் காய் மூன்று பாகமாக தெரிகின்றது. காய் மீது இருக்கின்ற மூன்று கோடுகள் காயை மூன்று பாகங்களாக தெரியும்படி செய்கின்றது. ஒவ்வொரு பாகத்தின் மேல் கண் போல சிறிய பள்ளம் இருக்கின்றது. மூன்று பாகங்களுக்கு மூன்று கண் இருக்கின்றது அதனால்

தேங்காய்க்கு முக்கண்டன் என்று பெயர் வந்தது. தேங்காய்க்கு இருக்கின்ற மூன்று பாகங்கள் மேல் குடுமியாக சிறிது நாரை வைக்கின்றோம். இறுதியாக இருக்கின்ற இந்த குடுமிக்கு தனித்துவம் இருக்கின்றது. தேங்காய் குடுமியை மேல் நிற்க வைத்து அதன் மீது இருக்கின்ற பெரிய வயிறை (பெரிய பாகத்தை) நமக்கு எதிராக பிடித்துக் கொண்டு பார்த்தால் பெரிய பாகத்திற்கு இரண்டு பக்கம் இரண்டு பாகங்கள் இருக்கும் அல்லவா, அந்த பாகத்தின் மேல் கண்கள் (பள்ளங்கள்) இருக்கின்றது அல்லவா! வலது பக்கம் இருக்கின்ற பாகத்தை சூரிய நாடி என்னும், அந்த பாகத்திற்கு மேல் இருக்கின்ற கண்ணை அந்த நாடி மையம் என்னும், இடது பக்கம் இருக்கின்ற பாகத்தை சந்திர நாடி என்னும், அந்த பாகத்தில் மேல் இருக்கின்ற கண்ணை அந்த நாடி மையம் என்னும், இரண்டு பாகத்திற்கு நடுவில் பெரிய பாகமாக இருக்கின்றதனை பிரம்ம நாடி என்னும், அந்த பாகம் மேல் இருக்கின்ற கண்ணை அந்த நாடி மையம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். சூரிய, சந்திர, பிரம்ம நாடிகள் ஒன்றாகும் போது ஞானம் வெளிப்படும். அதன் பிறகு ஜீவன் கடவுளாக மாறி போய் இறப்பு பிறப்பு அடையாமல் போகும். இந்த மூன்று நாடிகளை ஒன்று செய்தவர் யோகி என்பதை தெரிவிப்பதற்கு தேங்காய் மீது கூட மூன்று பாகத்தை கலந்து ஒன்றாக குடுமி வைக்கப்பட்டது. மூன்று நாடிகளில் ஒன்றானவர் ஜென்மங்கள் இல்லாமல் ஆத்மாவில் ஐக்கியம் அடைவார். மேலும் மூன்று பாகத்திலிருந்து ஒன்றாக மாறிய குடுமி முனை பாகம் ஆகாசத்தை காட்டுகின்றது. ஜீவன் எந்த உருவம் இல்லாததில் ஐக்கியமாகும். மற்றும் குடுமி முனை கூட எந்த உருவமில்லாத ஆகாசத்தை காட்டுகின்றது. மூன்று நாடிகளை ஒன்றாக சேர்த்தவர் ஞானம் இறுதி பாகத்திற்கு சேர்ந்து இருக்கும். மேலும் தேங்காய் குடுமிக்கு கூட "ஞானசிகை" என்று பெயர் வந்தது. ஞானசிகை என்றால் ஞானத்திற்கு இறுதி பாகம் என்று அர்த்தம். விவேக வந்தவர்களான பிராமணர்கள் அவர்கள் தலைமேல் குடுமி எதற்கு வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றால்! ஞான சக்தி நின்று இருக்கும் இடம் தேகத்தில் தலை ஒன்று தான், மேலும் ஞான சக்தி இருக்கின்ற பிராமணர்கள் வெளியே அர்த்தத்துடன் தலை மேல் இருக்கின்ற முடிகள் எல்லாம் எடுத்துவிட்டு குடுமி மட்டும் வைத்துக் கொண்டிருப்பார்கள். தலை தான் ஜீவனுக்கு ஸ்தானம், அதிலிருந்து ஆலோசனைகள் எழுகின்றது. பிரம்ம ஞானிகள்

ஆலோசனைகளை ஜெயித்திருப்பார்கள். அதனால் அவர் மாயாவினால் எந்த ஆலோசனைகள் இல்லை என்ற எண்ணத்துடன் வெளி அர்த்தமாக தலை மீது முடிகளை எடுத்து விடுகின்றார்கள். அதன் போலவே தேங்காய்க்கு கூட சுற்று முற்று இருக்கும் நார்கள் புடுங்கப்படுகின்றது. தலையில் பிரம்ம நாடியின் ஏழாவது மையம் இருக்கின்றது அல்லவா! அதனினால் ஜீவன் பிரம்மத்தில் ஐக்கியமாகுவான். பிரம்ம நாடி தேகத்தில் நடு பாகத்தில் இருக்கின்றது. தலை மேல் கூட அதனுடைய ஸ்தானம் நடுவில் இருக்கின்றது. மேலும் ஞான சக்தி இருக்கின்றவர்கள் தன் தலை மீது நடு பாகத்தில் ஞானசிகை என்ற பெயரில் சில முடிகள் விட்டுவிடுகிறார்கள். அதன் போலவே தேங்காய்க்கு கூட மேல் குடுமி விட்டு விடுகின்றார்கள். பூர்வம் இந்த விதமாக செய்து கொண்டிருந்தார்கள். காலம் கடந்து கொண்டிருக்கும்போது குடுமியை எங்கு வைக்க வேண்டுமென்றும் தெரியாமல், யார் வைக்க வேண்டும் என்னும் தெரியாமல், எதற்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரியாமல் பல பேர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரம்ம ஞானியான ஈஸ்வரன் தன்னுடைய தலை மேல் இருக்கின்ற முடிகளை நீட்டமாக விடாமல் ஞானசிகை அடையாளமாக கொண்டையை வைத்தார். அந்த முடி ஈஸ்வரன் தலை நடு பாகத்தில் முடி கொண்டை இருக்கிறது. அதன் போலவே எத்தனையோ மகரிஷிகள் கூட ஞான சிகையை தலை நடு பாகத்தில் வைத்தார்கள். இதன் போல எத்தனையோ ஞானிகள் அவர் சூரிய, சந்திர நாடிகளை பிரம்ம நாடியில் ஐக்கியம் செய்து அதனுடைய வெளி அர்த்தம் தலை மேல் பிரம்மஸ்தானமான நடுபாகத்தில் அவருடைய முடிகளை கொண்டை போட்டார்கள். பிரம்ம ஸ்தானம் குழந்தை தலை மேல் நேரடியாக பார்க்கலாம். ஒரு வருடம் உள்ள குழந்தைகள் தலை நடு பாகத்தில் பிரம்ம நாடி உணர்வு (தொடுதல்) பார்க்கலாம். அந்த பாகத்தில் ஞானசிகையை ஞானிகள் கொண்டை போடுவார்கள். ஞானசிகை இந்த காலத்தில் பல பேருக்கு தலை நடு பாகத்தில் இல்லாமல் சிறிது பின்புறமாக இருக்கின்றது. வெளியில் ஞானசிகை எங்கிருந்தாலும் பரவாயில்லை. நமக்கு உள்ளே முக்கியமான ஞானம் இருந்தால் போதும். தேங்காயை பரிசோதனை செய்து பார்த்தால் எவ்வளவு அர்த்தம் இருக்கிறதோ பாருங்கள். தேங்காயை ஞான சொரூபம் விஷயமாக உணர வேண்டும்.

அக்னியில் இருந்து சிறிய சிறிய நெருப்புகள் வெளிவரும்போது பரமாத்மாவிலிருந்து ஜீவன் வெளியே வந்தான். ஒரே அம்சமாக இருந்தாலும் ஜீவன் கடவுள் வேறானார்கள். இந்த விதமாக ஆத்மா சொரூபமான தேங்காயை உடைக்கும் போது இரண்டு பாகமாக உடைகின்றது. அதில் ஒரு பாகத்திற்கு ஞானசிகை மீதியாகின்றது. இரண்டாவது பாகத்திற்கு ஒன்றும் மீதி ஆகாமல் போகின்றது. ஞானசிகை மீதியாக இருந்த பாகம் ஆத்மாவாக, ஞானசிகை இல்லாமல் மூன்று பாகங்களாக மீதி இருக்கின்ற இரண்டாவது பாகம் ஜீவாத்மாவாக கருதப்படுகிறது. தேங்காயை இரண்டு பாகமாக கடவுள் முன்பு உடைத்து ஒரே பரமாத்மா அம்சத்தில் இருந்து நீயும் நானும் வேறாகினோம் என்று வெளி அர்த்தமாக காட்டுகின்றோம். இந்த விதமான எண்ணத்தில் பூர்வத்தில் இருக்கின்ற ஞானிகள் செய்து கொண்டிருந்தார்கள். இப்போது சிலர் எந்த எண்ணம் இல்லாமல் கோரிக்கைகள் மட்டும் அதிகமாக வைத்துக் கொண்டு தேங்காய்களை அதிகமாக உடைக்கின்றார்கள். தேங்காயை உடைக்கின்றவர் எல்லோரும் அதனுடைய முக்கியத்துவத்தை தெரிந்து கொண்டால் எவ்வளவோ சேஷ்டகரமாக இருக்கும்.

தேங்காயை உடைக்கும் போது இரண்டு பாகங்களாக ஆகுகின்றது அல்லவா! அந்த இரண்டு பாகங்களில் உள் பாகத்தில் வெள்ளை நிறம் கொண்டு எந்த அசுத்தமும் இல்லாமல் இருக்கும். அதனுடைய அர்த்தம் என்னவென்றால் நீ கடவுள், நான் ஜீவன், நீ எந்த குணங்கள் இல்லாமல் அசுத்தம் இல்லாமல் இருக்கின்றாய். நானும் உன்னை போலவே எந்த கோரிக்கைகள் எந்த ஆலோசனை இல்லாமல் தூய்மையாக மாறி இருக்கிறேன் என்னும், வெளி அர்த்தமாக தெரிவிப்பதற்கு இரண்டு பாகங்கள் வெள்ளையாக இருக்கின்றது. இந்த விதமாக ஞானிகள் தேங்காயை உடைத்து வெளியே அர்த்தமாக தெரிவித்தார்கள். மற்றும் இரண்டாக மாறிய நீயும் நானும் ஒன்றாக வேண்டும் என்னும் வெளி அர்த்தமாகவே இரண்டு கைகளை சேர்த்து காண்பித்தார்கள் அதனை நாம் நமஸ்காரம் என்று சொல்கின்றோம். இடது கை ஆத்மா, வலது கை ஜீவாத்மா என்னும் அந்த இரண்டு கைகளை சேர்த்துவது ஜீவாத்மா ஆத்மாக்கள் ஐக்கியம் செய்வது என்று தெரிந்து கொள்ள வேண்டும். பூர்வம் தெரிந்தவர்கள் வாயில் நான் ஒன்னும்

பேசாமல் அவரில் உள்ள எண்ணம் தேங்காயினால் நமஸ்காரத்தினால் வெளி அர்த்தமாக கடவுளுக்கு தெரிவித்துக் கொண்டு இருந்தார்கள். இந்த காலத்தில் பலவிதமான கோரிக்கைகளில் புனிதமான தேங்காயை அபவித்திரம் செய்கின்றார்கள். இரண்டு கைகளை சேர்த்து காட்டுவதில் ஜீவாத்மா ஆத்மா ஐக்கிய அர்த்தம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல் கைகளை சேர்த்து நின்று பலவிதமான கோரிக்கைகளை விரும்பத்தக்கதும் வேண்ட கூடாததையும் வேண்டுகின்றார்கள்.

தேங்காய்க்கு இருக்கின்ற கண்களில் ஒரு கண்ணுக்கு மட்டும் துளை விழுகும். மற்ற இருக்கின்ற கண்களுக்கு துளை எதற்கு விழுகவில்லை? மேலும் அதற்கு உள்ளே இருக்கின்ற தண்ணீரை எல்லோரும் தீர்த்தமாக வாங்கிக் கொள்கிறார்கள். அதன் பலன் என்னவாக இருக்கும்? என்று சில பேருக்கு சந்தேகம் வரலாம். அதற்கு என்னுடைய சமாதானம் ஜீவன் பரமாத்மாவில் சேர வேண்டும் என்றால் தன் நடுவில் இருக்கின்ற பிரம்ம நாடியில் ஐக்கியமாக வேண்டும். மற்றும் தேங்காய் கண்களுக்கு கூட பிரம்ம நாடி சொல்லிக் கொண்டிருந்த பெரிய பாகத்தின் மேல் இருக்கின்ற கண்ணே ஓட்டை விழுகும். மற்ற நாடிகளில் இருக்கும் போது மரணித்த ஜீவன் ஆத்மாவிடம் சேர முடியாது. மேலும் தேங்காய் மற்ற கண்கள் வலுவாக இருந்து ஓட்டைகள் விழுகாது. நாம் செய்த பூஜையின் பலன் இருக்கின்ற தண்ணீரில் அவகித்து இருக்கும். மேலும் அதனை தீர்த்தமாக வாங்கிக் கொள்கின்றார்கள். யார் எவ்வளவு எண்ணத்தில் பூஜை செய்து இருப்பார்களோ அவ்வளவு சக்தி அவர்கள் வாங்கிக் கொண்ட தீர்த்தத்தில் இருக்கும். மேலும் இல்லாத பூஜை வீணாகும். இதனால் தீர்த்தம் என்றால் சக்தியில் கூடியிருக்கின்றது என்று தெரிகின்றது. பூஜை விதான எண்ணம் தெரியாமல் அதனில் இருக்கின்ற பக்தியை அனுசரிக்காமல் செய்த பூஜை தீர்த்தம் கூட சக்தி இல்லாததாகும்.

தேங்காய் உடைக்கும் போது குடுமியை கீழ்ப்பக்கமாக வைத்துக் கொண்டு பல பேர் உடைக்கின்றார்கள். அப்படி உடைப்பது சரியான முறை அல்ல. தேங்காயை உடைத்த போது குடுமியை மேல் வைத்து உடைக்க வேண்டும். இந்த விதமாக உடைக்கும்

போது வலது கையில் தேங்காயின் கீழ் பாகம் இருக்கும். குடுமி இருக்கின்ற தேங்காய் பாகம் இடது கை பக்கம் இருக்கும். மறுபடியும் வலது இடது கைகளை சேர்த்து காட்டுவது என்னை உன்னிடம் சேர்த்து கொள் என்ற எண்ணம். இந்த விதமாக சரியான எண்ணத்தில் பூஜை செய்தால் அந்த பூஜையில் ஞான சக்தி கிடைக்கும். ஞானத்தினால் முன்னுக்கு போகபோக சரியான மார்க்கத்தை தெரிந்து கொண்டு யோக சாதனைகள் செய்து கடவுளிடம் ஐக்கியம் ஆகலாம். அந்த விதானம் எண்ணம் இல்லாத பூஜை வீணானது. தேங்காய்க்கு செலவளித்த பணம் கூட வீணானது. தேங்காயில், மணியில், நமஸ்காரத்தில் எவ்வளவோ அர்த்தம் கூடியிருக்கின்றது. அதனை தெரிந்து கொள்ளாமல் வேறவர்கள் செய்து கொண்டிருந்ததை நாங்களும் செய்து கொண்டிருந்தோம் என்றால் எந்த பிரயோஜனம் இருக்காது.

பிரம்மவித்தையில் நுழைந்தவர்கள் தேங்காயை பற்றி சொல்லிக் கொண்டிருப்பதை கேட்டோம். அதில் அவர்கள் தேங்காயில் மூன்று பாகங்களை மூன்று குணங்கள் எண்ணத்துடன் சொல்கின்றார்கள். மூன்று குணங்களை ஜெயிக்காமல் இன்னும் சிறிது குணங்கள் இருக்கின்றவர்கள் தேங்காய்க்கு கூட குடுமி சிறிதாக வைக்கின்றார்கள். மற்றும் அவர்களும் கூட தன் தலை மேல் சிறுது முடியை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். முழுமையாக குணங்களை ஜெயித்து குணங்கள் இல்லாதவர்கள் சிறிதளவு கூட குடுமியை வைக்காமல் எடுத்து விடுகின்றார்கள். அவர்கள் தேங்காய்க்கு கூட குடுமியை வைக்காமல் எல்லாத்தையும் பிடுங்கி உடைக்கின்றார்கள் என்று தெரிவித்தார்கள். அந்த மார்க்கத்தின் பிரகாரம் தேங்காயை நினைத்தால் அந்த எண்ணத்தில் பலவிதமான சந்தேகங்கள் வரும். எவ்வளவு தேடினாலும் அந்த சந்தேகங்களுக்கு பதில்கள் கிடைக்கவில்லை. மேலும் ஆத்மாவே கற்பனைக்கு கொடுத்து தெரிவித்ததை நான் தெரிவிக்கின்றேன். இந்த மார்க்கத்தில் போனால் ஒரு சந்தேகம் கூட வராது. ஒரு நேரத்தில் வந்தால் அதற்கு பதில் உடனே கிடைக்கும்.

## 26. தலை முடிகள் வழங்குதல்

தேவாலயங்களின் ஆராதனைகளில் தலை முடிகளை எடுத்துவிட்டு மொட்டை செய்து கொள்வது முக்கியமாக இருக்கின்றது. பூர்வ காலத்தில் ஞானம் தெரிந்த பெரியோர்கள் நல்ல எண்ணத்துடன் தலை முடியை எடுத்துவிட்டு தலையை மொட்டை அடித்துக் கொள்வார்கள். அப்படி தெய்வ சன்னதியில் அவர் மனதில் இருக்கின்ற நோக்கத்தின் முறை செயல் வடிவமாக காண்பித்தார்கள். அந்த முறையின் எண்ணம் பூர்வம் பெரியவர்களிடமே முடிந்து ஆனால் நடைமுறை மட்டும் அந்த நாள் விட இந்த நாள் அதிகமாக இருக்கின்றது. சித்த சுத்தி இல்லாத சிவபூஜை எப்படி என்பது போல் எண்ணம் சுத்தி இல்லாத முறை கூட பிரயோஜனம் இல்லை. பூர்வத்தை விட இன்று காலத்தில் பக்தி அதிகமாக தெரிந்து கொண்டிருந்தாலும் பக்தியில் செய்கின்ற வேலைக்கு அர்த்தம் இல்லாமல் போனது. தேவஸ்தானத்தில் மொட்டை அடித்தவர்களிடம் போய் நீ எதற்கு மொட்டை அடித்தாய் என்று கேள்வி கேட்டால் அவரிடம் இருந்து வருகின்ற பதில் என்னுடைய கோரிக்கை நிறைவேறியது நான் வேண்டியதற்கு மொட்டை அடித்துக் கொண்டு முடியை சமர்ப்பித்தேன் என்று சொல்கின்றார்கள். உன்னுடைய கோரிக்கை நிறைவேறியது மேலும் நீ கொடுக்கும் முடியால் கடவுளுக்கு என்ன லாபம். கடவுளுக்கு காணிக்கையாக தனத்தை கொடுக்கலாம், தானியம் கொடுக்கலாம் முடியை கொடுப்பது என்ன கேள்வி கேட்டால் அதற்கு எல்லோரும் செய்தது போல் நானும் செய்கின்றேன் தவிர சரியான பதில் இல்லை. எல்லோரும் எதற்கு செய்கின்றாரோ யாருக்கும் தெரியாது. ஒருவரை பார்த்து மற்றொருவர்கள் செய்கின்றார் தவிர வேறவர்கள் எதற்கு இப்படி செய்கின்றார் என்ற விவரம் தெரிந்து கொள்ளாமல் போனார்கள். இந்த விஷயம் எல்லோருக்கும் முழுமையாக தெரியாமல் போனது என்று சொல்லலாம். செய்கின்றவனுக்கும் தெரியாது பார்க்கின்றவனுக்கும் தெரியாது மேலும் பார்ப்பவன் செய்கின்றவனாக மாறிப்போவது மொட்டை அடித்துக் கொள்வது அர்த்தமில்லாத பக்தியானது.

பூர்வ காலத்தில் உண்மையான பக்தி கொண்டவர்கள் இருந்தார்கள். அவர்கள் தெய்வ பக்தி விஷயத்தில் எவ்வளவோ அர்த்தத்தில் கூடி இருக்கின்ற வேலை செய்து

கொண்டிருந்தார்கள். அந்த காலத்தில் அவர்கள் தேவாலயங்களில் ஞானம் தெரிந்த எண்ணத்துடன் நடந்து கொண்டார்கள். தேவாலயங்களில் எந்த கோரிக்கைகளும் வேண்டுபவர்கள் அல்ல. கோபுரம் இடத்தில் இருந்த கோரிக்கைகள் கொடிமரத்திடம் இல்லாமல் செய்து கொண்டிருப்பார்கள். ஒரு நேரத்தில் எந்த ஆலோசனை இருந்தாலும் இறுதிக்கு மணி ஓசையில் மனசை இணைத்து மனசை நிர்மலமாக (அமைதியாக) செய்து கடவுள் மீது லக்னம் செய்வார்கள். மனதில் கோரிக்கைகள் இருந்தாலும் இல்லாமல் செய்வதற்கு தேவாலயங்களுக்கு வந்து அங்கு இருக்கின்ற ஆன்மீகத்தை வளர்த்துக் கொள்வார்கள். இன்னும் ஞானிகளாக இருக்கின்றவர்கள் மனதில் எந்த கோரிக்கைகள் இல்லை என்னும் நடைமுறையில் தெரிவித்துக் கொள்வார்கள். அப்படி கடவுளிடம் விண்ணப்பிப்பது தான் மொட்டை அடிப்பது. முன்னொரு காலத்தில் ஞானம் தெரிந்த பக்தன் திருப்பதி வெங்கடேஸ்வரா ஆலயத்திற்கு போய் கோரிக்கைகளுக்கு ஆலோசனைகளுக்கு தலை நிலையமாக இருக்கின்றது என்று நினைத்து, தலையில் இருக்கின்ற ஆலோசனைகள் கணக்கு இல்லாதது தலை மீது முடிகள் போன்ற இருக்கும் என்று நினைத்து, உன் சன்னிதானத்திற்கு வந்த எனக்கு உலகத்திற்கு சம்பந்தமான எந்த கோரிக்கைகள் இல்லை என்று கடவுளுக்கு தெரிவித்தது போல் தலை மேல் இருக்கின்ற முடிகள் எல்லாம் எடுத்துவிட்டு மொட்டை அடித்துக் கொண்டு நான் சங்கல்பம் இல்லாமல் இருக்கிறேன், தலைமேல் முடிகள் போல் தலை உள்ளே கோரிக்கைகள் இருக்கின்றது சகஜம் தான், நான் என் தலை உள்ளே கோரிக்கைகள் இல்லாமல் செய்து கொண்டேன் என்பதை உனக்கு தெரிவிப்பதற்கு வெளியே அர்த்தமாக என்னுடைய தலை முடியை இல்லாமல் செய்து கொண்டேன் என்னும் தன்னுடைய மொட்டை தலையை குனிந்து கோயிலில் இருக்கின்ற கடவுளுக்கு காண்பித்தான். அந்த காட்சியின் விவரம் தெரியாத மற்றொருவன் பார்த்தான். அப்படி செய்வதால் எதோ லாபம் வரும் என்று நினைத்துக் கொண்டு, அதனால் தான் அவர் அப்படி செய்தார் என்னும் நினைத்துக் கொண்டு, எனக்கு லாபம் வந்தால் நானும் மொட்டை அடித்துக் கொள்கிறேன் என்று கும்பிட்டான். அப்படியே அந்த விதானத்தை கோரிக்கைகள் வேண்டுவதற்கு என்றும், கடவுள் கோரிக்கைகள் நிறைவேற்றுபவர் என்னும், அந்த வேலையை செய்ததற்கு பதிலுக்கு தலைமுடி எல்லாம்

கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் நினைத்துக் கொள்கிறார்கள். பூர்வம் இருந்த ஞானம் மாசுபட்டு போனதனால் கடவுளுக்கு நமக்கு நடுவில் தலை முடிகள் லஞ்சமாக மாறியது. ஆலோசனைகள் இல்லாமல் போனது என்பதற்கு அடையாளமாக பூர்வமே தலையை மொட்டை செய்து கொண்டால் இன்று அந்த நடைமுறை சிறிதளவு கூட இல்லாமல் மொட்டை அடித்துக் கொள்கின்றார்கள். மேலும் வேமன யோகி தன்னுடைய கவிதையில் தலை மொட்டையானால் யோசனைகள் மொட்டை ஆகுமா என்று சொல்லினார்.

அந்த நாள் கோரிக்கைகள் இல்லை என்ற நோக்கத்தில் அவர்கள் மொட்டை செய்து கொண்டு இன்று கோரிக்கைகள் ஏற்பட்டு அது நிறைவேறினால் மொட்டை அடித்துக் கொள்வோம் என்று கும்பிட்டு நிறைவேறினால் செய்து கொள்வது இது மிகவும் தவறான முறை அல்லவா! தவறு முறையாக வேண்டுவது மட்டுமல்லாமல் வேண்டக்கூடாத கோரிக்கைகளும் கூட வேண்டிக் கொள்கின்றார்கள். அண்ணன் தம்பிகள் இறந்து போகும்படி செய்து சொத்துக்கள் எல்லாம் எனக்கே வந்தால் முடியை எடுத்துக் கொள்வேன் என்பது, அத்தைக்கு இருக்கின்ற ஒரு மகனை மரணிக்கும் படி செய்து அத்தையிடம் இருக்கின்ற சொத்துக்கள் எல்லாம் எனக்கே வந்தால் உனக்கு காணிக்கையாக தலைமுடியை கொடுக்கிறேன் என்பது, மாணவர்கள் படிக்காமல் இருந்தாலும் பாஸ் ஆகும் படி செய்தால் மொட்டை அடித்துக் கொள்கிறேன் என்று கும்பிடுவதும் கூட நடக்கின்றது. பூர்வம் பெரியோர்கள் கோரிக்கைகள் இல்லாத நடைமுறையாக மொட்டையை அடித்துக் கொண்டால் இன்று மொட்டை அடித்துக் கொள்கிறேன் என்று கும்பிட்டு மிக அதிகமான கோரிக்கைகளை வேண்டுகின்றதை பார்த்தால் தர்மங்கள் அதர்மங்களாக மாறியது போல் தோன்றுகின்றது இப்போது அதர்மங்களாக இருக்கின்ற நடைமுறைகள் மறுபடியும் தர்மங்களாக மாற்றிக் கொண்டு சரியான முறையை நாமாவதும் அனுசரிக்கலாம்.

## 27. நமஸ்காரம்

தெய்வ ஆராதனையில் நமஸ்காரம் மிக முக்கியமானது. இரண்டு அஸ்தங்களை சேர்த்து காட்டுவது நமஸ்காரம் என்று சொல்கின்றோம். எதிர்பட்டவரிடம் பூஜை எண்ணத்துடன் கௌரவ எண்ணத்துடன் கையினால் தெரிவிப்பது நமஸ்காரம் என்று சிலர் சொல்கின்றார்கள். இப்போதும் இது உண்மையானாலும் பூர்வம் இருந்த பெரியோர்களிடம் இன்னும் கொஞ்சம் வேறு எண்ணம் இருந்தது. இரண்டு தனி தனியாக இருக்கின்ற கைகள் தேவாலயங்களில் இருக்கின்ற பிரதிமை முன்னால் காண்பிப்பார்கள். இதுவரை நீயும் நானும் வெவ்வேறாக இருந்தோம். இப்போது இருந்து நான் உன்னிடம் இணைந்து போக வேண்டும் என்னும் நினைக்கின்றேன் என்ற எண்ணத்துடன் தனித்தனியாக இருக்கின்ற கைகளை இணைத்து காண்பிப்பார்கள். நமஸ்காரம் அந்த நாள் அவர்களுடைய எண்ணத்தில் ஜீவ பிரம்ம ஐக்கிய சந்தானமாக அல்லது மோக்ஷமாக இருந்தது. பூர்வம் ஞானம் தெரிந்தவர்கள் இருந்தார்கள் மேலும் அவருக்கு கோயிலில் இருக்கின்ற கடவுளே ஞான சக்தி கொண்டவரே தேகத்தில் இருக்கிறார் என்ற எண்ணம் இருந்தது. அதனால் ஞானிக்கும் குருவுக்கும் எதிர்பட்டபோது அவரிலும் கூட தெய்வத்துவம் இருக்கிறது என்ற எண்ணம் கொண்டு அந்த தெய்வத்திற்கு நமஸ்கரிப்பார்கள். அந்த சம்பிரதாயம் இப்போதும் இருந்தாலும் அவரில் உள்ளே இருக்கின்ற கடவுளுக்கு நமஸ்ம்கரிக்கின்றேன் என்ற எண்ணமே இல்லை. மற்றவரிடம் வேலை நடத்திக் கொள்வதற்கு அல்லது மற்றவரை சாதகமாக மாற்றிக் கொள்வதற்கு நமஸ்காரம் செய்வது நடக்கின்றது.



நமஸ்காரம்

பூர்வம் ஞானம் தெரிந்தவர்கள் ஒவ்வொரு மனிதர்களில் ஞானத்தை பொறுத்து தெய்வத்தை பார்பார்கள். இப்போது ஒவ்வொரு மனிதர்களில் ஞானத்தை பார்க்காமல் உலகத்திற்கு சம்பந்தப்பட்ட தகுதியை பார்க்கின்றார்கள். பூர்வம் ஞானத்தை பொறுத்து பூஜை எண்ணம் இருந்தால் இப்போது தகுதியைப் பொறுத்து பூஜை எண்ணம் இருக்கின்றது. பூர்வம் தன்னுடைய கால் வேறவர்கள் மீது பட்டால் அவர் தேகத்தில் கூட கடவுள் இருக்கின்றார் என்ற எண்ணத்துடன் உடனே நமஸ்காரத்தை செய்வார்கள். இப்போதும் சில இடத்தில் அந்த நடைமுறை இருக்கின்றது. எப்போதும் எந்த எண்ணம் இருந்தாலும் தேவாலயங்களில் நமஸ்காரத்திற்கு என்னை உன்னில் இணைத்துக் கொள் என்பதற்கு கைளை இணைத்துக் கொள்ளுவது தெரிந்தால் கோவிலில் செய்கின்ற நமஸ்காரத்திற்கு மதிப்பும் அர்த்தம் இருக்கும். அப்படி ஆகாமல் போனால் ரவுடிகளுக்கும் குண்டர்களுக்கும் அரசியல்வாதிக்கும் போலீஸ்களுக்கும் செய்த நமஸ்காரத்திற்கு சமமாக இருக்கும். அப்படி ஆகாமல் தேவாலயங்களில் உள்ள நமஸ்காரம் தனித்துவமானது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

## 28. ஷடகோப்பம் (சடாரி)

தேவாலய பூஜைகளில் பக்தர்களுக்கு பூசாரிகள் ஷடகோபம் தலை மீது வைத்து அனுப்புவார்கள். தொப்பி வடிவமுள்ள ஷடகோப்பம் தலை மீது வைத்துக் கொள்வது பக்தர்களுக்கு ஒரு விதமான திருப்தி மேலும் அதனால் பலன் என்ன? எந்த நோக்கத்தில் இந்த காரியத்தை வைத்தார்கள் என்னும் ஷடகோப்பம் வைக்கின்றவர்கள் வைத்துக் கொண்டிருப்பவர்கள் யோசனை செய்யவில்லை. சில ஆலயங்களில் ஷடகோப்பமே இல்லை. திருப்பதி முதலியன பெரிய ஆலயங்களில் ஷடகோப்பம் இருப்பதும் உபயோகப்படுத்துவதும் நடக்கின்றது. அதற்காக இந்த ஷடகோப்பம் என்னவென்று சிறிது விவரித்துக் கொள்ளலாம். ஒரு பொருளை தெரியாமல் மறைத்து வைப்பதை ரகசியமாக வைப்பது என்று சொல்கின்றோம். இருக்கின்றதை ரகசியமாக வெளியில் தெரியப்படாமல் செய்வது ரகசியமாக வைப்பதாகும். ரகசியமாக வைப்பது ஒரு பொருளாவதும் ஆகலாம் அல்லது ஒரு விஷயமாவதும் இருக்கலாம். சிலர் தன்னில் இருக்கின்ற விஷயங்களை யாருக்கும் தெரியாமல் மிக ரகசியமாக வைப்பார்கள். ரகசியம் என்னும் சொல் அதனுடைய அர்த்தம் இப்போதும் இருந்தாலும் தேவாலயங்களில் மட்டும் கோப்பியம் போய் கோப்பம் ஆனது. பூர்வம் ஷடகோப்பியம் என்ற சொல் இன்று ஷடகோப்பம் ஆனது.

சில முக்கியமான தேவாலயங்களில் ஷடகோப்பம் பக்தர்களுக்கு தலை மீது வைத்து அனுப்புவார்கள். பெரியோர்கள் ஆசீர்வதித்தாலும் ஷடகோப்பம் வைத்தாலும் தலை மீது எதற்கு என்றால் நம்முடைய தலையில் குணங்கள் அவற்றினால் வரும் கர்மம் முதலியன அனைத்தும் உள்ளது. ஆலயங்களில் பூஜை முடிந்த பின் பக்தனுக்கு தலை மீது ஷடகோப்பம் வைப்பதில் உள் அர்த்தம் என்னவென்றால்! நம் தேகத்தில் தலையில் கர்மத்திற்கு சம்பந்தப்பட்ட குணங்கள் இருக்கின்றது. அந்த குணங்கள் நல்லது கெட்டது என்று இரண்டு விதமாக பிரிக்கப்பட்டு இருக்கின்றது. அதில் கெட்டது ஆறு குண வர்க்கங்கள், அதன் போலவே நல்லது ஆறு குண வர்க்கமாக இருக்கின்றது. என்றால் நல்லது கெட்டது குணங்கள் ஒவ்வொன்றும் ஷட் வர்க்கங்களாக பிரிக்கப்பட்டது என்ற

வார்த்தை, காம, குரோத, லோப, மோக, மத, மஸ்தரியம் என்பது கெட்ட குணங்கள் ஆறு ஒரு ஷட் வர்க்கமாக மற்றும், தான, கருணை, அவதாரிய, வைராக்கிய, பணிவு, அன்பு என்பது நல்ல குணங்கள் ஆறு ஒரு ஷட் வர்க்கங்களாக இருக்கின்றது. ஷட் என்றால் ஆறு, வர்க்கம் என்றால் கூட்டம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். கெட்ட ஷட் வர்க்கத்தினால் பாவம், நல்ல ஷட் வர்க்கத்தினால் புண்ணியம் வருவது சத்தியம். பரமாத்மாவில் ஐக்கியமாக வேண்டும் என்றால் நல்லது கெட்டது கர்ம பலன்கள் இரண்டும் இல்லாமல் போக வேண்டும். அதனால் கோயிலுக்கு சென்ற பக்தனுக்கு சிறிய தொப்பி போன்ற பொருள் தலை மீது வைத்து இரண்டு ரகமான கர்மத்தை நீ இல்லாமல் செய்து கொள்ள வேண்டும் என்ற செய்தி கொடுக்கப்பட்டது போல் ஷட் கோப்பியம் என்று சொல்வார்கள். பூர்வம் ஒரு பக்தன் தலை மீது தலைக்கு சரியா போகும் அகலம் கொண்ட பொருள் இரண்டு தடவை வைப்பார்கள். இந்த காலத்தில் ஒரு தடைவ மட்டும் வைக்கின்றார்கள். ஒரு தடவை வைப்பது சாஸ்திரம் இல்லாத வேலை. இரண்டு தடவை வைப்பதில் அர்த்தம் இருக்கின்றது. ஒரு தடவை வைக்கும் போது ஷட்கோப்பியம் என்றும், இரண்டாவது தடவை வைத்து ஷட் கோப்பியம் என்று சொல்வார்கள். அதன் போல இரண்டு தடவை வைத்து இரண்டு தடவை ஷட் கோப்பியம் என்று சொல்வதில் அர்த்தம் என்னவென்றால்! ஒரு தடவை வைக்கும்போது உன் தலையில் இருக்கின்ற கெட்ட குணங்கள் வர்க்கம் ஆறு வெளியில் தெரியாமல் போக வேண்டும் என்னும் ஷடகோப்பியம் என்று சொல்வார்கள். அதன் போல இரண்டாவது தடவை வைப்பதில் உன் தலையில் இருக்கின்ற நல்ல குணங்கள் வர்க்கம் கூட கோப்பியமாக (ரகசியமாக) இருந்து போக வேண்டும் என்ற நோக்கத்தில் இரண்டாவது தடவை கூட ஷட்கோப்பியம் என்று சொல்வார்கள். அப்படியே உபயோகிக்கின்ற பொருள் பலானதற்கு உபயோகித்துக் கொள்கின்றோம் என்பது எப்போதும் அடையாளம் இருக்கும் படி அதற்கு ஷட்கோபியம் என்று பெயர் வைத்தார்கள். அதன் பெயர் அப்படி சில காலத்திற்கு ஷட கோபியமாக மாறிப்போனது. காலம் கடந்து கொண்டிருக்கும்போது ஷட கோப்பம் என்னும் பெயரில் இப்போதும் சில தேவாலயங்களில் இருக்கின்றது. ஷட கோப்பியம் ஷட கோப்பமாக பெயரில் மாற்றம் அடைந்து முறையில் இரண்டு முறை தலைமை மீது வைப்பது போய்

ஒரு தடவை வைக்கும் முறை இருந்தாலும் அர்த்தம் மட்டும் முழுமையாக இல்லாமல் போனது. இதன் போன்ற இந்துக்கள் முறை எவ்வளவோ அழிந்து சிறிது பெயருக்கு மட்டும் மீதியாக இருக்கின்றது. அப்படி இருந்தவைக்கு மறுபடியும் உயிர் கொடுக்க வேண்டும் என்றால் ஷட கோப்பத்திற்கு ஷட் கோப்பியம் என்ற பெயர் வைத்து, ஒரு தடவை தலை மேல் வைப்பது நிறுத்தி இரண்டு தடவை தலை மேல் வைத்து, இரண்டு தடவை வைக்கும் போதெல்லாம் குணங்கள் வர்க்கம் போக வேண்டும் என்று நினைக்க வேண்டும். தேவாலயங்களில் நடக்கின்ற பூஜைகளில் உள் அர்த்தம் பக்தன் எதில் ஐக்கியம் ஆகுவதற்கு ஷட கோப்பம் தலை மீது இரண்டு தடவை வைப்பது நல்லது கெட்டது இரண்டு ரகமான குணங்கள் இல்லாமல் போகும்போது நீ என்னில் ஐக்கியம் ஆகுவாய் என்று அர்த்தத்தில் கடவுள் பக்தனுக்கு தெரிவிப்பதாகும். எவ்வளவோ அர்த்தத்தில் நம்முடைய பெரியோர்கள் வைத்த முறைகளை இன்று காலத்தில் யாரும் தெரிந்து கொள்ளாமல் போவது பரிதாபமான விஷயம்.

## 29. பிரதக்ஷணங்கள்

தேவாலயங்களில் பூஜை செய்யும் விதானத்தில் பிரதக்ஷணம் செய்வதும் கூட இருக்கின்றது. பூர்வ காலத்தில் ஐந்து சுற்றுகள் மட்டும் பிரதக்ஷணம் செய்து கொண்டிருந்தார்கள். இந்த காலத்தில் கணக்கில்லாமல் செய்கின்றவர் இருக்கின்றார்கள். உலகமெல்லாம் பரமாத்மா சக்தி ஆவகித்து இருக்கின்றது. “மாயா தக்ஷேனா பிரக்ருதி சூயத்தேச சராசரம்” என்பது போல் பிரக்ருதி எல்லாவற்றுக்கும் பரமாத்மா தலைமையாக இருக்கின்றது. பரமாத்மாவை ஆதாரமாக செய்து கொண்டு பிரக்ருதி இருக்கின்றது. உலகம் என்னும் சக்கரம் பரமாத்மாவை ஆதாரம் செய்து கொண்டு சுற்றுகின்றது. பிரக்ருதி ஐந்து பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. பிரக்ருதியின் ஐந்து பாகங்களிலேயே சர்வ ஜீவிகள் சிக்கிக் கொண்டிருக்கின்றது. அதில் நீயும் சிக்கி இருக்கின்றாய், நான் பிரக்ருதி சக்கரத்தில் சிக்கிக் கொண்டு சுற்றுகிறேன். அந்த பிரக்ருதியின் ஐந்து பாகத்திலிருந்து என்னை விமுத்தி அடைய செய் என்று சொல்லி பிரதக்ஷணம் செய்வது பூர்வம்

நடைமுறை இருந்தது. பூர்வம் பிரதிமை முன்பு ஆரம்பித்து ஒவ்வொரு சுற்றும் சக்கரம் போல் சுற்றிக்கொண்டு பிரக்ருதியின் சக்கரத்தில் முதலாவது ஆகாசத்தில் இருந்து என்னை விமுக்தி செய்ய வேண்டும் என்று பிரதிமை முன்பு வேண்டுவார்கள். அதன் போலவே இரண்டாவது தடவை சுற்றி வந்து இரண்டாவது பாகமான காற்றில் இருந்து காப்பாற்று என்று வேண்டுவார்கள். மூன்றாவது தடவை சுற்றி வந்து அக்னியில் இருந்து காப்பாற்று என்று, நான்காவது தடவை சுற்றி வந்து தண்ணீரில் இருந்து காப்பாற்று என்று, ஐந்தாவது தடவை சுற்றி வந்து பூமியிலிருந்து காப்பாற்று என்று வேண்டுவார்கள். பஞ்சபூதங்களில் இருந்து விடுதலை செய்து உன்னில் ஐக்கியம் செய்து கொள் என்று வேண்டுவது பஞ்ச பிரதக்ஷணங்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும். தற்போது காலத்தில் பிரதிமை சுற்றுகின்றார்கள். மேலும் எத்தனை சுற்று சுற்ற வேண்டும் என்ன வேண்ட வேண்டும் என்று தெரியாமல் ஒரு பக்கம் உலகத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயங்கள் மற்ற அவர்களிடம் பேசிக்கொண்டே பிரதக்ஷணங்கள் செய்கின்றார்கள். கணக்குக்கு இத்தனை சுற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்கின்றார்கள் தவிர எதற்கு சுற்றுகின்றோம் என்று ஆலோசனை இல்லை. சிலர் மூன்று சுற்று சுற்றிக்கொண்டு முடிக்கின்றார்கள். சிலர் ஐந்தை விட அதிகமாக சுற்றுகின்றார்கள். ஐந்தை விட அதிகமாக குறைவாக சுற்றினால் அர்த்தமில்லாததாகும். அர்த்தத்தில் கூடியிருக்கின்ற பிரதக்ஷணங்கள் ஐந்து மட்டும் செய்ய வேண்டும். தெரியாதவர்களுக்கும் கூட அர்த்தம் இதுதான் என்று தெரிவித்து அனுசரிக்கும் படி செய்தால் பக்தி மார்க்கம் ஆராதனை முறை நிறைவேற்ற முடியும்.

## 30. கற்பூரம்

பூர்வம் பக்தர்கள் தேவாலயத்திற்கு போய் மணியை அடித்து, தேங்காயை உடைத்து, கைகளை சேர்த்திய பிறகு கற்பூரத்தை கடவுள் முன்பு எரிய வைப்பார்கள். அதனுடைய அர்த்தம் என்னவென்றால்! வண்ணம், உருவம், குணங்கள், இருக்கின்ற என்னை ஞான அக்னியால் எரித்து உன்னில்

ஐக்கியம் செய்து கொள் என்று அதன் உள் அர்த்தமாக வண்ணம், வாசனை, உருவமுள்ள கற்பூரத்திற்கு அக்னியை வைத்து கடவுளுக்கு காண்பித்துக் கொண்டிருந்தார்கள். பார்த்துக் கொண்டிருக்கும்போதே அது அக்னியால் எரிக்கப்பட்டு சூன்யத்தில் ஐக்கியம் ஆகின்றது. வண்ணம், வாசனை உருவமுள்ள கற்பூரம் சூன்யத்தில் இணைந்து போய் பிறகு அதனை பலான இடத்தில் இருக்கிறது என்று சொல்வதற்கு முடியாமல் போகும். அதன் போலவே ஜீவன் கூட தன்னில் இருக்கின்ற கர்மத்தை ஞான அக்னியால் எரித்தால் சூன்யத்தில் சேர்ந்து போவான். பிறகு அவனை இங்கு இருக்கிறான், அங்கு இல்லை என்பதற்கு சொல்ல முடியாமல் போகும். கற்பூரம் எரியவைத்து காண்பிப்பதில் கூட இவ்வளவு அர்த்தம் இருக்கிறது என்று தெரியாதவர்கள் பூஜை முடிந்த உடனே தீபாராதனை கொடுக்க வேண்டும் என்று கற்பூரம் இல்லாமல் போனால் பஞ்சு வத்தியால் எரிய வைத்து ஆராதனை கொடுப்பார்கள். அது சரியான நடைமுறை அல்ல. ஞானிகள் அவர்களில் இருக்கின்ற எண்ணத்தை வெளியே காண்பிப்பதற்கு சூன்யத்தில் ஐக்கியம் ஆகுவதற்கு கற்பூரத்தை எரிய வைத்து காண்பித்தார்கள். உங்களிடம் கற்பூரம் இல்லாமல் போனால் சூன்யத்தில் ஐக்கியம் ஆகாத வத்திகளை எரிய வைத்தால் சரியான முறை எப்படியாகும்? மேலும் கற்பூரம் இல்லாமல் போனால் நமஸ்காரத்திலேயே பூஜையை முடிக்கலாம். பூர்வம் உள்ளவர்கள் பூஜைகளின் எல்லா விஷயங்கள் தெரிந்து கொண்டு செய்வார்கள். அதனால் நல்ல பலனை பெறுவார்கள். இந்த காலத்தில் ஒன்றும் தெரியாமல் இருந்தாலும் தெரிந்தவர்கள் சொல்லிய வார்த்தைகளை வேலைக்கு ஆகாததாக எண்ணிக் கொண்டு காதில் போட்டுக் கொள்ளாமல் இருக்கின்றார்கள்.

பூர்வம் அக்னியில் எரியப்படும் கற்பூரத்தை மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பார்கள். நாங்களும் இந்த விதமாக ஞானம் என்னும் அக்னியால் கர்மம் எரிந்து விட வேண்டும் மேலும் அணுஅணுவில் வியாபித்து போக வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்வார்கள். சுபகரமான எண்ணத்தில் செய்கின்றோம் என்றதால் அதன் பெயர் மங்கள ஆரத்தி என்று அழைக்கப்படுகின்றது.



## கற்பூரம் ஆரத்தி

மங்கள ஆரத்தி மீது கை வைத்து நமஸ்கரிப்பது சிலர் செய்கின்றார்கள். சிலர் இரண்டு கைகள் வைத்து கண் மீது வைகின்றார்கள். மங்கள ஆரத்தி நேரத்தில் மணி அடிப்பார்கள். பூர்வ காலத்தில் கண் மீது வைத்துக் கொள்வது, நமஸ்கரிப்பதும், மணி அடிப்பது செய்ய மாட்டார்கள்.

மங்கள ஆரத்தி தூரமாக இருந்தாலும் சத்தமில்லாமல் மௌனமாக பார்த்துக் கொண்டிருப்பார்கள். அருகில் இருக்கும் போது எரிகின்ற ஆரத்தி மீது ஒரு கையை வைப்பார்கள். பூர்வம் ஆத்ம ஞானம் தெரிந்தவர்கள் நானும் கூட இந்த ஆரத்தி கற்பூரமாக சூன்யத்தில் போக வேண்டும் என்னும் தேவாலயங்களில் நடக்கின்ற மங்கள ஆரத்தி மீது கை வைத்து சபதம் செய்வார்கள். சபதம் செய்த பிறகு அப்படியே நடந்து கொள்வார்கள். பூர்வம் இந்த எண்ணம் கொண்டு கை வைக்கின்றவர்களை பார்த்து எண்ணங்கள் தெரியாதவர்கள் ஏதோ லாபம் இருக்கிறது என்னும் எண்ணத்துடன் ஆரத்தி மீது கையை வைப்பார்கள். ஒரு கை வைக்க வேண்டும் என்னும் தெரியாமல் இரண்டு கைகளை காண்பித்து கண்கள் மீது வைத்துக் கொள்வார்கள். இன்று மனிதர்களுக்கு பூர்வ காலத்தில் இருந்தவர்கள் சபதம் செய்வதற்கு கற்பூர ஆரத்தி மீது கையை வைத்தார்கள் என்ற விஷயம் தெரியாமல் போனது. எப்போதும் ஆரத்தி வத்திகளில் செய்யாமல் இருந்தால் எண்ணத்திற்கு சரியாகும் சூன்யத்தில் இணைந்து போகும் கற்பூரத்தை வைக்க வேண்டும் என்று தெரிவிக்கின்றோம். கற்பூரத்தை வைப்பது மட்டுமல்லாமல் அதன் மீது உங்கள் வலது கை வைத்து நான் இந்த விதமாக ஞான அக்னியால் எரிந்து போய் கற்பூரம் போல்

சூன்யத்தில் பரமாத்மாவில் ஐக்கியமாக வேண்டும் என்று சபதம் செய்ய வேண்டும்.

## 31. கோவிந்தா

நாமம் இருக்கின்ற தேவாலயங்களில் கோவிந்தா என்று சத்தமாக சொல்வது கேட்டிருப்போம். தனித்துவமாக திருப்பதியில் கோவிந்தா என்னும் சொல்வது அதிகமாக இருக்கும். மற்ற தேவாலயங்களில் கூட பஜனை செய்கின்ற இடத்தில் பஜனை பாட்டு முடிந்த உடனே இறுதியில் கோவிந்தா என்று சொல்வார்கள். அதன் போல ஒரு மனிதன் இறந்தபோது கோவிந்தா சொல்லி சிவத்தை (இறந்த உடலை) தூக்கிக் கொண்டு போகும்போதும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். மற்றும் ஒரு மனிதன் சூதாட்டத்தில் பணத்தை இழந்த போது கை உதறிய போதும் கூட இவனுடைய வேலை கோவிந்தா என்று சொல்வார்கள். பஜனை இறுதியில், ஜீவிதம் இறுதியில், திவால் எடுத்த நேரத்தில் கோவிந்தா என்று சொல்வது இறுதி நிலையை தெரிவிக்கின்றது. கோவிந்தா என்றால் முடிந்து விட்டது என்று அர்த்தம். பாட்டு முடிந்த போதும், ஜீவிதம் முடிந்தபோதும், பணம் முடிந்த போதும் கோவிந்தா என்ற சொல் பூர்வத்தில் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இன்றும் அதன் போலவே சொல்கின்றோம். தேவாலயங்களுக்கு போய் கூட கோவிந்தா என்று சொல்வது இன்றும் கூட இருக்கின்றது. அதனால் கோவிந்தா என்ற சொல் கடவுளுடைய பெயர் என்று நினைத்துக் கொண்டோம். மேலும் அது எந்த கடவுளுடைய பெயர் அல்லவென்றும் முடிந்துவிட்டதை மற்றும் இறுதி நிலையை தெரிவிக்கும் அடையாளம் என்று தெரியாது. பூர்வம் தேவாலயங்களில் நுழைந்தவர்கள் பூஜை விதானம் எல்லாம் முடிந்த பின் கோவிந்தா என்று சொல்வார்கள். பூர்வத்தில் இருந்த ஞானிகள் என்னுடைய கர்மம் எல்லாம் நாசனம் செய்து ஒன்றும் இல்லாமல் முடிந்த நிலையை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் கோவிந்தா என்று சொல்வார்கள். கோவிந்தா என்ற சொல்லின் அர்த்தம் உலகத்தில் எல்லாம் முடிந்த நிலை என்று தெரிந்து கொள்ள

வேண்டும். கோவிந்தா கோவிந்தா சொல்வது உலகத்தில் கர்மம் எல்லாம் முடிந்து விட்டு மோக்ஷத்தை அடைவது என்று தெரிந்து கொள்ள வேண்டும். கோவிந்தா என்ற சொல் எந்த கடவுளுடைய பெயர் அல்லவென்று ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். இன்னும் எப்படி இருக்கிறது என்றால்!

எங்கேயாவது கோவிந்தா என்ற சொல் இரண்டு தடவை சொல்வது நடக்கின்றது. இந்த சொல் இரண்டு தடவை சொல்வதில் கூட சொல் சொல்லுக்கு சிறிது வித்தியாசம் இருக்கின்றது. முதல் உச்சரிக்கும் சொல்லில் கோவிந்தா...... அழுத்திய சொல் இருக்கும். இரண்டாவது தடவை உச்சரிக்கும் சொல்லில் கோ...விந்த என்று இருக்கும். வாஸ்தவமாக கோவிந்தா என்ற சொல்லில் ஒரே அர்த்தம் இருக்கும்போதும் இரண்டாவது தடவை சொல்லுவது என்ன? என்பது கேள்வி. அதுமட்டுமல்லாமல் முதல் கோவிந்தா... வில் தா வை அதிகமாக அழுத்தி சொல்வது, இரண்டாவது தடவை சொல் கோ.... விந்தாவில் கோ வை அழுத்திச் சொல்லுவதில் கூட விசேஷம் ஏதோ இருக்கும். அது என்னவென்று என்பது கூட கேள்விதான். இதற்கு பதில் தேடினால் குர்தாயுகத்தில் இந்த சொல் இருப்பது போல் அந்த காலத்திலேயே மகரிஷிகளும் கூட கோவிந்தா என்ற சொல்லை உச்சரித்தது போல வரலாற்றில் தெரிகின்றது. அந்த நாளே தெரிந்த பெரியோர்கள் கோவிந்த என்ற சொல்லுக்கு அர்த்தத்தை கோர்த்து அந்த அர்த்தம் பிரகாரமே இரண்டு தடவை கோவிந்த என்ற சொல் சேர்த்தியது போல், அதுவும் ஒன்றின் பின் ஒன்றாக சிறிதாக வித்தியாசம் இருக்கும் படியும் தெரியும் படியும் வைத்தார்கள். அந்த நாள் அவர்கள் எது செய்தாலும் எதிர்காலத்தில் மனிதர்களுக்கு ஞானம் தெரியும்படி யோசனை செய்து செயல்படுவார்கள். நிரந்தரமாக ஞானத்தை பிரபோதித்தம் செய்வது அந்த நாள் அவர்களுடைய நோக்கம் என்னமோ அங்கு போய் அவரையே கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

“கோவிந்த” என்ற சொல்லின் அர்த்தம் இனி இல்லை என்னும் அல்லது எல்லாம் முடிந்தது என்று அர்த்தத்தை வைத்தார்கள். தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் இறந்த உடலை சுமந்து செல்லும் போது அதே அர்த்தத்தில் சொல்கின்றார்கள். தெரியாதவர்களுக்கு சொல்ல வேண்டும்

முறையாக சொல்லும்போது சந்தர்ப்பம் அது தான் என்னும் யோசனை செய்கின்றவர் எல்லோருக்கும் தெரியும். அதன் போலவே சூதாட்டத்தில் இருக்கிறது எல்லாம் இழந்த போது கூட இந்த கோவிந்த என்ற சொல்லை உபயோகபடுத்துகின்றார்கள். அங்கு கூட முடிந்தது என்ற சந்தர்ப்பமே இருக்கின்றது. இப்போது யார் எத்தனையோ சந்தர்ப்பத்தில் சொல்லினாலும் பூர்வம் கடவுளிடம் மட்டும் கோவிந்த என்று சொல்வார்கள். அந்த நாள் கடவுளின் சன்னிதானத்தில் என்றால் தேவாலயங்களில் பிரதிமையின் முன்பு எனக்கு இந்த ஜெகத்தியில் தேவைப்படுவது எதுவும் இல்லை என்ற அர்த்தத்தில் கோவிந்தா..... என்றும் அப்படியே தேகம் உள்ளே ஒட்டிக்கொண்ட கர்மம் ஒன்றும் இல்லை என்றும் அர்த்தம் வரும் படி கோ.... விந்தா என்று சொல்வார்கள். என்றால் வெளியே இருக்கின்றதின் மீது ஆசை முதலியன எந்த குணங்கள் வேலை இல்லை என்னும், அதன் போலவே தேகம் உள்ளே ஒட்டுகின்ற கர்மம் எதுவும் இல்லை என்று இரண்டும் கோவிந்தாக்கள் சிறிது வித்தியாசத்துடன் வைத்தார்கள். இன்னும் அர்த்தம் வேண்டுமென்றால் வெளியே சம்பந்தமில்லாமல் பிரம்மயோகம், உள்ளே சம்பந்தமில்லாமல் கர்மயோகம் செய்கின்றேன் என்ற அர்த்தத்தில் வெளியில் ஒரு கோவிந்த, உள்ளே ஒரு கோவிந்த என்று சொல்வார்கள்.

இரண்டும் யோகங்கள் ஆனாலும் அவற்றில் சிறிது வித்தியாசம் இருப்பதினால் கோவிந்த என்ற வார்த்தையில் கூட சிறிது வித்தியாசம் தெரிவிக்க வேண்டும் என்று அந்த நாள் இருந்த பெரியோர்கள் சொல்லினார்கள். இரண்டு முறைகள் கர்மம் இனி இல்லை என்பதை தெரிவிப்பதாக இருந்தாலும் அது வெவ்வேறு என்று தெரியும்படி ஒன்றுக்கு இறுதியில் நீளமாக மற்றொன்றுக்கு முதலில் நீட்டமாக வைத்தார்கள். இரண்டு தடவை உச்சரிப்பதில் அதுவும் சிறிது வித்தியாசத்தில் சொல்வது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக அந்த நாள் இருந்தது. இன்று காலத்திற்கு அது அர்த்தமாகாமல் போனது. சொல்பவருக்கு அதனுடைய விஷயம் முழுமையாக தெரியாமல் போனதினால் அதனில் இருக்கின்ற ஞான சந்தேஷம் பிரபோதித்தம் ஆகாமல் போனது. அந்த நாள் இந்து தர்மங்களில் முக்கியமான தர்மமாக இருக்கின்ற கோவிந்தா இன்று அதனுடைய மதிப்பு இழந்துவிட்டது. அர்த்தங்கள் இல்லாத போது முறை வடிவத்தில் கோவிந்த மட்டும் மிச்சம் இருக்கும்போது

குருவிடம் சர்வமும் தெரிந்து கொண்டோம் என்பவர்களுக்கு, எங்களுடைய குரு பெரியவர் என்னும் சொல்பவருக்கு, பல வருடங்கள் குரு தெரிவித்த விஷயங்கள் எல்லாம் ஜீரணித்து கொண்டோம் என்பவர்களுக்கும், கோவிந்த என்ற சொல் இரண்டு தடவை சொல்லுவதும் சொல்வதில் அவற்றின் வித்தியாசம் தெரியாமல் போவதும் பார்த்தால் நீங்கள் இன்னும் சம்பூர்ண ஞானிகளே ஆகவில்லை என்று சூடு போட்டதாக இருக்கும். முழுமையாக ஞானம் முறை இல்லாமல் போனலும் குறைந்தபட்சம் முழுமையான ஞானமாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். அர்த்தத்தில் ஒரு தடவை கோவிந்தா கோவிந்த என்று சொல்லுவது நல்லது.

## 32. தெப்பக்குளம்

தேவாலயங்கள் சாத்தியம் இருக்கும் வரை நதிப்பக்கம் கட்டுவார்கள். சில தேவாலயங்களுக்கு நதிகள் சமீபத்தில் இல்லாததால் ஆலய சமீபத்தில் தெப்பக்குளத்தை கட்டுவார்கள். மொத்தம் மீது பூர்வம் தேவாலயங்கள் ஏரி பக்கமாகவும் தெப்பக்குளம் பக்கமாவதும் இருந்தது. வருடத்திற்கு ஒரு தடவை நடக்கின்ற திருநாள் நேரத்தில் சிறிய கப்பல் போன்று தயார் செய்து ஏரியிலாவதும் தெப்பக்குளத்திலாவதும் அந்த கப்பல் மீது அந்தந்த கடவுளை தாண்டவைப்பார்கள். அதனை தெப்ப உற்சவம் என்று சொல்வார்கள். தேவாலயங்கள் அவற்றில் இருக்கின்ற பூஜைகள் பரமார்த்தத்தில் எண்ணம் கொண்டு செய்வார்கள். மேலும் தெப்ப உற்சவத்தில் பரமார்த்தத்தை கூட நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தெப்ப உற்சவங்கள் லிங்கத்திற்கு செய்யக்கூடாது. உருவம் இருக்கின்ற கடவுளுக்கே செய்ய வேண்டும். எதற்கு என்றால் பரமாத்மா பகவானாக பிறந்த போது குணங்களினால் பல நல்ல கெட்ட காரியங்கள் செய்து அந்த காரியத்தினால் சம்பவிக்கும் பாவ புண்ணியம் என்னும் கர்மத்தை ஒட்டாமல் இருப்பார். நான் இந்தவிதமாக இருக்கிறேன் நீங்கள் கூட பூர்வ ஜென்மம் கர்மங்களினால் சம்பவிக்கும் சர்வ காரியங்கள் செய்து என்னை போலவே புதிய கர்மம் அடையாமல் இருக்க வேண்டும் என்று கீதாவில் கூட கூறினார். அந்த நிகழ்வு

தெப்ப உற்சவம் எண்ணம். அசுத்தமான நீரை சிறிய கப்பலால் தாண்டலாம் அதன் போலவே கர்மம் என்னும் கடலை ஞானம் என்னும் சிறிய கப்பலால் தாண்டலாம் என்ற விஷயம் தெப்ப உற்சவத்தில் காண்பித்தார்கள். குணங்கள் கொண்டவர் பகவான். அவர் குணங்களினால் சம்பவிக்கும் கர்மங்களை தன்னுடைய ஞானத்தினால் தாண்டி போகின்றார் என்பதை காட்டுவது தெப்ப உற்சவம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அதன் போலவே நாம் கூட உண்மையான வாழ்க்கையில் ஞானத்தினால் கர்மத்தை தாண்டலாம் என்னும் எண்ணத்திற்கு வந்த கர்மத்தை ஒட்டாமல் செய்து கொண்டு நன்மையான ஞானத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டும். தெப்ப உற்சவம் சம்பிரதாயங்களுக்கு அர்த்தம் இதன் போன்று இருக்கும்போது சில தேவாலயங்களுக்கு ஏரியும் தெப்பக்குளமும் இல்லை. சில தேவாலயங்களுக்கு ஏரியும் தெப்பக்குளமும் இருந்தாலும் தெப்ப உற்சவம் நடத்துவதில்லை. தேவாலயங்களை ஏரி தெப்பக்குளமும் இல்லாமல் கட்டுவது மற்றும் இருக்கின்ற தேவாலயங்களில் தெப்ப உற்சவங்கள் நடத்தாமல் போவது சம்பிரதாயத்திற்கு எதிர்ப்பு, அர்த்தமற்றது. எல்லாம் இருந்தாலும் திருப்பதி விஜயவாடா தேவஸ்தானங்களில் தெப்ப உற்சவங்கள் நடந்து கொண்டிருந்தாலும் அவற்றின் எண்ணம் தெரிந்து கொள்ளாமல் போவது மிக விசித்திரமாக இருக்கிறது.

## 33. ஊரேகிம்பு (ஊர்வலம்)

எப்போதும் தேவாலயங்களில் இருக்கின்ற கடவுளுக்கு வருடத்திற்கு ஒரு தடவை ஊர்வலம் நடக்கும். ஊரில் தேவாலயங்களுக்கு மக்கள் எல்லோரும் போவதற்கு பழக்கமும் வாய்ப்பும் இருக்காது. அப்படிப்பட்டவர்கள் எல்லோரும் கடவுளை தெரிந்து கொள்வதற்காக ஆலயத்தில் உள்ள கடவுளின் பிரதி பிம்பத்தை ஊரில் வீதியில் சுற்றிக்கொண்டு ஊர்வலம் செய்வார்கள். ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் தெரிந்து கொள்வதற்காக ஆலயத்தில் இருக்கின்ற கடவுளை வீதியில் கொண்டு வருவது பூர்வமும் ஊர் எரிகிம்பு (ஊர்வலம்) என்று சொல்வார்கள். அந்த ஊர்

எரிகிம்பு என்ற சொல் காலம் கடந்து கொண்டிருக்கும்போது ஊரேகிம்பாக மாறிப்போனது. ஊரேகிம்பில் ஏதோ ஒரு பிரதிமையை ஏதோ ஒரு வாகனம் மீது ஊரேகிப்பது நடக்கிறது. கடவுளை வாகனம் மீது ஊர் எரிகிம்பு செய்வதில் கடவுளுக்கு தவறாமல் வாகனம் இருக்கிறது என்று அர்த்தத்தை கொடுக்கும்படி, அந்த வாகனம் நம்முடைய தேகம் என்று தெரிவித்து மனிதன் தேகத்தின் மீது மற்றும் வேறு விலங்குகள் தேகத்தின் மீது ஏற்றிக் கொண்டு ஊரேகிம்பு நடக்கின்றது. அப்படி எல்லா வாகனத்தின் மேல் கடவுளை ஊரேகிம்பதில் எல்லா தேகத்தை நடத்தும் சாரதியாக கடவுள் இருக்கிறார் என்பதை தெரியப்படுத்திகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டும். எல்லா தேகங்கள் வாகனங்களாக கடவுளுக்கு இருக்கிறது என்பது, மட்டுமல்லாமல் அந்த தேகத்தில் ஆத்மாவாக இருக்கின்ற கடவுளை தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்தால் அந்த கடவுள் நமக்கு அபயமாக இருந்து நம்முடைய கர்மத்தை இல்லாமல் செய்து கொள்ள ஞான கட்கத்தை (ஞான வாள்) பிரசாதிப்பார் அர்த்தத்தில் ஊரேகிம்பு சமயத்தில் கடவுளுக்கு ஆயுதங்கள் வைப்பார்கள். எல்லோரிலும் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அதுவே தன்னில் இருக்கின்ற ஆத்மா, அந்த ஆத்மாவே தேகத்தை நடத்துவது போல் இருக்கின்றது என்னும், எல்லா தேகங்கள் அந்தந்த தேகத்தில் இருக்கின்ற ஆத்மாவுக்கு வாகனங்களாக இருக்கிறது, தேகம் என்னும் ரதத்தை நடத்துபவர் கடவுள் என்னும், அவரை தெரியப்படுத்துவது கடவுளின் கையில் ஞான ஆயுதங்கள் நம்முடைய கர்மங்களை எரிக்கும் என்பதை தெரிவிப்பதற்காக பூர்வம் பெரியோர்கள் ஊரேகிம்பு காரியங்கள் வைத்தார்கள். இந்த ஊரேகிம்புவினால் ஊரில் உள்ள சிறியோர்கள் பெரியோர்கள் எல்லோருக்கும் கடவுள் மீது நினைவு இருக்கும் படி அவர் ஊருக்கு என்ன எரிகிம்புகு வந்தாரோ சிறிது தெரிந்து கொள்வார்கள். அந்த நாள் இருக்கின்ற பெரியோர்கள் ஊரேகிம்பு நேரத்தில் அப்படி செய்வதில் அவர்களுடைய நோக்கம் என்னவென்று மக்களுக்கு தெரிவிப்பார்கள்.

இந்த நாள் ஊரேகிம்பு இருக்கிறது மேலும் அவற்றின் அர்த்தம் இல்லாமல் போனது. இப்போதாவது கடவுளுடைய

வாகனம் பற்றி, கடவுளின் ஆயுதம் பற்றி எரிகிம்புவை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

## 34. திருநாள்

வருடத்திற்கு ஒரு தடவை திருநாமா என்ற பெயரில் ஒரு பெரிய உற்சவம் செய்வார்கள். அந்த நாள் திருநாமா என்ற உற்சவம் காலம் கடந்து கொண்டிருக்கும்போது இந்த நாள் திருநாளா என்று பெயர் மாறிப்போனது. திருநாமா என்றால் நாமத்தில் நடுவில் இருக்கின்றது. வெங்கடேஸ்வரா நாமம் மூன்று நாமங்களாக இருக்கிறது அல்லவா! அதில் இரண்டு நாமங்கள் பக்கத்தில் வெள்ளையாக நடுவில் இருப்பது மட்டும் சிவப்பாக இரண்டு பக்கம் நாமத்தை விட நடுவில் இருக்கின்றது நீட்டமாக இருக்கும். இரண்டு வெள்ளை நாமத்தை விட வண்ணத்தில் சிவப்பாக அளவில் நீட்டமாக நடுவில் உள்ள நாமம் தனித்துவம் கொண்டிருக்கின்றது. இந்த நாமம் பௌதிகமாக அபௌதிகமாக இரண்டு அர்த்தங்கள் கொண்டு இருக்கின்றது. பௌதிகமாக தேகத்தில் 3.50 லட்சம் நாடிகளில் முக்கியமான அவற்றில் மிக முக்கியமானது மூன்று மட்டும் இருக்கின்றது. அவை இடா, பிங்களா, சூஸ்மாங்கா நாடிகள் அல்லது சூரிய, சந்திர, பிரம்ம நாடிகளாக அழைக்கப்படுகின்றது. அவற்றை முகத்தின் மீது நாமமாக அடையாளிக்கபடுகின்றது. இடா பிங்களா நாடிகள் இரண்டு வெள்ளை நாமமாக அடையாளித்து நடுவில் இருக்கின்றது பிரம்ம நாடி என்னும் அதனை சிவப்பாக நீட்டம் கொண்ட நாமமாக அடையாளித்தோம். இந்த நீட்டமான நாமம் தேகத்தில் எல்லாவற்றை விட முக்கியமான ஆத்மாவாக தெரிந்து கொள்ள வேண்டும். பக்கத்தில் இருக்கின்ற சூரிய சந்திர நாடிகள் மனசுக்கு ஸ்தானமாக இருக்கும்போது நடுவில் உள்ள பிரம்ம நாடி ஆத்மாவுக்கு நிவாசஸ்தலமாக இருக்கின்றது. பிரம்ம நாடியை ஆத்மாவாக அடையாளித்தவர்கள் அதனை தெரிந்துக் கொள்வது ஜீவித சாராம்சம் என்று அடையாளித்தார்கள். தேகத்தில் ஆத்ம ஸ்தானமான பிரம்ம நாடியை திருநாமம் என்று சொல்வார்கள். அந்த திருநாமம் என்றால் ஆத்மாவை தெரிந்து கொள்வதற்கு வருடத்திற்கு ஒரு தடவை மக்கள் எல்லோரையும்

தேவாலயங்களிடம் சேர்த்து ஆத்மா போதனை செய்வார்கள். அதன் போல மக்கள் அனைவரிடமும் ஆத்மாவை பற்றி தெரிவித்து கொண்டு இருப்பார்கள். இந்த விதமாக நடக்கின்றதை திருவிழா என்று சொல்வார்கள். மற்றும் ஆத்மாவை தெரிவிக்கும் சேர்க்கையானதினால் அதனை திருநாமா என்று கூட சொல்வார்கள். அந்த திருநாமா இந்த நாளும் கூட இருந்தாலும் நோக்கம் முழுமையாக மாறிப்போனது. திருநாமா அல்லது திருநாளா என்பது கடவுளின் பக்திக்கு அல்ல பலவிதமான நோக்கத்தில் போகின்றார்கள். எது எப்படி இருந்தாலும் தேகத்தில் இருக்கின்ற ஆத்மாவை தெரிவிக்கும் ஆன்மீக ரகசியமே திருநாமா என்று தெரிந்து கொள்ள வேண்டும். இது பௌதீகமாக அர்த்தம் அபௌதிகமான மற்றொன்று இருக்கின்றது.

தேகத்தில் நிவாசிக்கின்ற ஆத்மாக்கள் மொத்தம் மூன்று இருக்கின்றது. அதில் தேகமெல்லாம் வியாபித்து இருக்கின்றது ஆத்மா, தேகத்தில் அதுவும் சிரசில் புள்ளியாக இருக்கின்றது ஜீவாத்மா மூன்றாவதான பரமாத்மா தேகம் எல்லா இடத்தில் இருந்து தேகம் வெளியிலும் கூட ஒவ்வொரு பொருளிலும் உள்ளே வெளியே வியாபித்து இருக்கின்றார். ஷராக்ஷரன் பெயரில் இருக்கின்ற ஜீவாத்மா ஆத்மாக்கள் இரண்டும் எப்போதும் ஜோடியாக இருக்கும். ஜீவாத்மா ஆத்மாவை விட அதீதமானவர் பரமாத்மா ஆனதினால் நடுவில் சிவப்பு நாமம் வைத்தார்கள். இரண்டை விட பெரியது மேலும் நடுவில் இருக்கின்ற நாமத்தை பெரியதாக வைத்தார்கள். ஜீவனுக்கு ஆத்மாவுக்கு கம்யஸ்தானம் அதுதான் அதனால் இரண்டிற்கு நடுவில் வைத்தார்கள். ஜீவாத்மா ஆத்மா ஒன்றின் ஒன்று இணைந்த போது பரமாத்மாவாக மாறலாம் என்று வெள்ளை நாமங்கள் இரண்டும் இணைந்திருக்கும் இடத்திலிருந்து நடுவில் சிவப்பு நாம் வைத்தார்கள். இந்த விதமாக ஸ்தூலத்தில் நாமத்தை சூரிய சந்திர பிரம்ம நாடிகள் என்னும், சூட்சுமமாக ஜீவாத்மா ஆத்மா பரமாத்மா என்று அடையாளித்து தெரிவித்தார்கள். இது முக்கியமான விஷயம் என்பதால் முகத்தின் மீது நெற்றி பாகத்தில் வைத்தார்கள். மூன்று நாமத்தில் திருநாமா என்று அழைக்கப்படுவது தேகத்தில் இருக்கின்ற பிரம்ம நாடியில் ஆத்மாவை, தேகம் விட்ட பிறகு பரமாத்மாவை குறிக்கின்றது. பூர்வம் திருநாமா என்ற சொல் இன்று திருநாளா என்ற

சொல்லாக மாறி ஸ்தூலமான பிரம்ம நாடியே, சூட்சுமமான பரமாத்மா என்று தெரியாமல் போவது நம்முடைய துரதிர்ஷ்ட கரம்.

## 35. பட்டபயல் (ரகசியம் வெளிப்படுவது)

கலியுகத்தில் தயாரான பல தேவாலயங்களில் ஸ்ரீரங்கப்பட்டணத்தில் ஸ்ரீரங்கன் ஆலயத்தில் சிதம்பர ரகசியம் என்பது இருந்ததாம். அங்கு போனவர்கள் ஸ்ரீரங்கன் தேவாலயத்தை தரிசனம் செய்த பிறகு சிதம்பர ரகசியத்தை பார்ப்பது வழக்கம். மேலும் இது ரகசியமானதால் யாருக்கும் சொல்லக்கூடாது என்று அங்குள்ள பெரியோர்கள் சொல்லி மற்றவர்களுக்கு காட்டுவார்கள். ரகசியம் என்பது சொல்லக் கூடாதது காட்டக்கூடாதது என்பது இருந்தாலும் சொல்லக்கூடாது என்று சொல்லுவதில் என்ன ரகசியம் இருக்கிறதோ. அங்கு யாருக்கும் தெரியாத ஏதோ ஒரு விஷயம் இருக்க வேண்டும் அதனால் அதனை ரகசியம் என்று சொல்கின்றோம். சிதம்பர ரகசியத்தை சொல்லினால் கற்பிக்கப்படாததை பார்த்தால் அர்த்தமாகாத விஷயமாக இருக்கின்றதினால் அதனை சிதம்பர ரகசியம் என்று சொல்லினார்கள். பல பேருக்கு சிதம்பரம் என்ற பெயரின் விவரம் தெரியாது. சித என்றால் வஸ்திரம் அம்பரம் என்றால் ஆகாசம். இந்த விதமாக சிதம்பரம் என்ற சொல்லில் வஸ்திரம் அல்லது பட்டபயல் என்று அர்த்தம் இருக்கின்றது. “சிதம்பர ரகசியம் பட்டபயல்” என்று வாக்கியம் கூட இருக்கின்றது. ஸ்ரீரங்கபட்டணத்தில் சிதம்பர ரகசியம் என்னவென்று சிறிது தெரிந்து கொள்ளலாம்.

பகவத்கீதா ஸாங்க்ய யோகம் என்னும் அத்தியாயத்தில் 22ஆவது சுலோகத்தில் பகவான் வாசாம்சி என்னும் சொல்லை உபயோகித்து சுலோகம் கூறினார். “வாசாம் சி ஜீர்ணாநி எதா விஹாயா நவானி குருஹ்ணாதி நரோப்பராணி ததாசரிராணி விகாய ஜீரணா நன் யானி சம்யாதி நவானி தேஹி” இதில் பழைய வஸ்திரங்களை விட்டு புதிய வஸ்திரங்களை அணிந்தது போல் பழைய தேகத்தை விட்டு புதிய தேகத்தை ஜீவன் அணிகின்றான் என்று கூறினார். இங்கு தேகத்தை வஸ்திரமாக ஒப்பிட்டுக்

கூறினார். வஸ்திரம் என்றாலும் துணி என்றாலும் ச்சேலம் என்றாலும் ஒரே அர்த்தம். அதன் போலவே அம்பரம் என்றாலும் ஆகாசம் என்றாலும் பயல் என்றாலும் ஒரே அர்த்தம். ஸ்ரீரங்க தேவாலயத்தில் இருக்கின்ற சிதம்பர ரகசியம் என்னவென்று பார்த்தால் அங்கு ஒரு துவாரத்திற்கு குறுக்கே வஸ்திரங்களை தொங்கவிடுவார்கள். துவாரம் உள்ளே என்ன இருக்கிறது கண்ணுக்கு தெரியாமல் அந்த வஸ்திரம் கட்டப்பட்டு இருக்கும். உள்ளே என்ன இருக்கிறது தெரியாததினால் அதுதான் ரகசியம். உள்ளே என்ன இருக்கிறது பார்க்க வேண்டும் என்பவர்களுக்கு அங்கு உள்ளவரிடம் கேட்டு அனுமதி வாங்க வேண்டியது இருக்கும். பார்க்க வேண்டும் என்பவர்களுக்கு காட்டுபவர்கள் இருப்பார்கள். அவர் பார்ப்பவர்களுக்கு இங்கு பார்த்தது ரகசியம் ஆனதினால் யாருக்கும் சொல்ல கூடாது என்று சொல்லி காண்பிப்பார்கள்.

எத்தனையோ பேர் சிதம்பர ரகசியத்தை பார்த்தாலும் பார்ப்பதற்கு முன் இருக்கின்ற ஆர்வம் பார்த்த பிறகு இல்லை. எதற்கு என்றால் பார்க்க வேண்டும் என்பவர்கள் பார்ப்பதற்கு முன் ரகசியம் என்றால் பார்க்க வேண்டிய ஒன்றை பற்றி ஏதோ கற்பனை செய்து கொண்டிருப்பார்கள். யார் என்ன கற்பனை செய்து கொண்டிருந்தாலும் துணி அகற்றியவுடன் யாருக்கும் ஒன்றும் தெரியாமல் போவது ஆச்சரியம். அங்கு ஒரு துவாரம் அதற்கு குறுக்கே ஒரு துணி இருக்கும் என்று நினைத்தோம் அல்லவா! பார்க்க வேண்டும் என்பவர்களுக்கு துவாரம் முன்பு நிற்கவைத்து துணியை அகற்றி காண்பிப்பார்கள். துணியை அகற்றிப் பார்த்த உடனே அங்கு எந்த பொருளும் உருவமும் இல்லாமல் போவது ஆச்சரியமானதாகும். மேல் உச்சவரம்பு இல்லாத ஆகாசம் மட்டும் தெரியும். துணியை அகற்றி அங்கு ஒன்றும் இல்லை என்பது போல காண்பித்தவர்களை கேட்கும் போது ஆகாசத்தின் பக்கம் காண்பித்து இங்கு நீங்கள் பார்க்க வேண்டியது தெரிகின்றது இதுதான் என்று சொல்வார்கள். ஒன்றுமில்லாதது சிதம்பர ரகசியம். இங்கு ஒன்றும் இல்லை என்று சொல்லினால் யாரும் வரமாட்டார்கள் என்னும் அதற்காக நீங்கள் இதை ரகசியமாக யாருக்கும் சொல்லக்கூடாது என்று சொல்வார்கள். சொல்லினால் என்ன ஆகுமோ எந்த கெட்டது நடக்குமோ என்னும் பார்த்து வந்தவர்களும் கூட சொல்லாமல் இருப்பதும் நடக்கின்றது.

நடைமுறை இருந்தாலும் அர்த்தமில்லாமல் போனது. ஆன்மீகப் பரமான பரமார்த்தமானதை சொல்லிக்கொள்ளாமல் இங்கு பார்த்ததை யாருக்கும் சொல்லக்கூடாது என்று சொல்வது தவறானதாகும். யார் யாருக்கும் சொல்லினாலும் சிதம்பரம் என்பது ரகசியம் என்ற அர்த்தத்திலேயே இருக்கும். இப்படிப்பட்ட ரகசியம் இருக்கிறது என்னும் தெரிவிக்கும் விதானமே சித அம்பரம்.

ஜீவன் தேகத்தில் இருக்கும் வரை மோக்ஷம் அடைய முடியாது. கர்மம் இல்லாமல் செய்து கொண்டு தேகம் அடையாமல் போகும் போது பரமாத்மாவில் ஐக்கியமாகி போகுவான். இந்த பக்கம் தேகம் அந்த பக்கம் மோக்ஷம் இரண்டு தான் கம்யங்கள் ஜீவனுக்கு இருக்கிறது என்பது சத்தியம். தேகம் இருக்கும் வரை கடவுள் தெரியப்பட மாட்டார். இறப்பு பிறப்பு கொண்ட தேகம் கடவுளுக்கு உனக்கு நடுவில் குறுக்கே இருக்கின்றது. பிறப்பில் ஆரம்பித்து மரணம் இறுதியான உடனே பிறப்பில் தேகம் ஜீவனுக்கு ஒட்டுகின்றது. தேகம் துணி போன்றது பழைய துணி போனால் புதிய துணி ஒட்டுகின்றது என்னும் கீதாவில் கடவுள் கூறினார். அதனால் அந்த துணி இல்லாமல் போனால் நீ கடவுளிடம் சேரலாம் என்று தேகத்தை துணியாக பரமாத்மாவை பயல்ஆக (வெளிப்படையாக) காண்பித்தார்கள். தேகம் துணியாக பரமாத்மாவை பயல் என்றும் தேகத்தை பரமாத்மாவை பட்ட பயலாக காண்பித்தார்கள். பட்ட (துணி) எடுத்தவுடன் பயல் தெரியும் என்னும் தேகம் இல்லாத போது கடவுள் தெரிவார் என்று தெரிவிப்பது சிதம்பர ரகசியம். வெளியே அர்த்தமாக பட்ட பயல் காண்பித்த போது தேகம் அணிந்து கொண்டிருக்கின்ற ஜீவிகள் பரமாத்மாவை தெரியாமல் இருக்கின்றார் என்பதை சொல்லுவதற்கு தெரியாதது ரகசியம் என்று சிதம்பரத்திற்கு ரகசியம் என்ற சொல் சேர்த்தினார்கள். அந்த விவரம் தெரியாமல் இது ரகசியம் யாருக்கும் சொல்லக்கூடாது என்பதில் அர்த்தம் இல்லை. ச்சேலம் என்றால் சமத தேகம் என்று நினைத்தோம் அல்லவா! இறப்பில் போகும் தேகம் அந்த நேரத்திலேயே பிறப்பில் ஜீவனுக்கு ஒட்டிக் கொள்கின்றது. மேலும் எப்போதும் பயல்ஆக ஒப்பிட்ட பரமாத்மாவுக்கு ச்சேலமாக ஒப்பிட்ட தேகம் குறுக்கே இருக்கிறது என்று தெரிவிப்பதற்கு ஸ்ரீரங்கத்தில் உள்ள சிதம்பரம் என்று தெரிய வேண்டும். துணி குறுக்கே இருந்தால் அந்த பக்கம் இருக்கின்ற பயல்

எப்போதும் தெரியாது என்று தெரிவித்து உங்களுக்கு தேகம் ச்சேலம் குறுக்கே இருக்கின்றதினால் பயல் என்னும் பரமாத்மா தெரியப்பட மாட்டார் என்பதை தெரிவிப்பதற்காக ரகசியம் என்பதில் அர்த்தம் இருக்கின்றது.

துணியை எடுத்தால் பயல் துணி எடுக்காமல் போனால் பயல் இல்லை. அதன் போலவே தேகம் போனால் தான் மோக்ஷம் என்னும் தெரிவித்து துணியில்லாத நிலை இருக்கின்றதை அச்சேலம் என்று சொல்லினார்கள். ச்சேலம் என்றால் துணி, அச்சேலம் என்றால் தேகம் இல்லாத மோக்ஷம் என்று சொல்லினார்கள். அஞ்ஞானத்தில் இருந்து தேகத்தால் ஜென்மம் எடுக்கின்றவர்களை ச்சேலுரு என்னும், ஞானம் தெரிந்து ஜென்மம் இல்லாத நிலையை வேண்டுகின்றவர்களை அச்சேலர்கள் என்னும் பூர்வம் பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். தேகத்தை ச்சேலம் என்னும் மோக்ஷத்தை அச்சேலமென்று பூர்வம் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். மோக்ஷ மார்க்கத்தை அச்சேலம் என்னும் அஞ்ஞானத்தை ச்சேலம் என்று கூட அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஞான மார்க்கம் கொண்ட அச்சேலம் என்ற சொல் காலம் கடந்து கொண்டிருக்கும்போது அசலமாக மாறியது. ஞான மார்க்கத்தை அனுசரிக்கின்றவர்கள் இன்று கூட இருக்கின்றார்கள். மேலும் அவர்கள் எங்களுடையது அசலம் என்பது அர்த்தம் இல்லாத வார்த்தை. அவர்கள் எங்களுடையது அச்சேலமென்று சொல்லலாம் மேலும் அசலம் என்று சொல்லக்கூடாது. சரியான அர்த்தம் பிரகாரம் சிதம்பரத்தை ச்சேல அச்சேலம் என்று சொல்லலாம். தேவாலயத்தில் காட்டியது போல நீங்கள் துணி பக்கமோ பயல் பக்கமோ யோசனை செய்து கொள்ளுங்கள். ச்சேலம் ஆகாமல் அச்சேலத்தை அடையுங்கள். பட்ட பயல் ரகசியங்களை தெரிந்து கொண்டு துணியை விட்டு பயலில் சேரலாம்.

## 36. தேவதாசிகள்

இதுவரை தேவாலயங்கள் நிர்மாணம் பற்றி, அதில் இருக்கின்ற பூஜை விதானங்களை பற்றி தெரிந்து கொண்டோம். இன்னும் சிறிது தெரிந்து கொள்ள வேண்டியது இருக்கின்றது. அது என்னவென்றால்! மனிதர்களில் ஸ்ரீ புருஷர் ஜாதிகள் இரண்டு இருக்கின்றது. துவி ஜாதிகள் மனிதர்களில் ஸ்ரீகளை விட பின்னங்களாக மற்றும் புருஷர்களை விட பின்னங்களாக கூட இருக்கின்றார்கள். ஸ்ரீ ஜாதிகளில் உருவான ஸ்ரீவுக்கு இருக்க வேண்டிய மனோபாவம், தேகம் பொருத்தம் இல்லாமல் சிங்காரம் என்றால் என்னவென்று தெரியாமல், தெரிந்தாலும் சிறிதளவு கூட ஆர்வம் இல்லாமல் இருந்தன. அவர்களை மாச்சகம்மல் என்று அழைக்கப்படுவார்கள். சிங்காரம் மனோபாவம் இல்லாத போல இவங்களுக்கு மாதவிடாய் (பஹிஷ்டு) ஏற்படாது. எவ்வளவு வயதானாலும் இளமை பருவமாகவே இவர்களுடைய தேகம் இருக்கும். சிங்காரம் மனோபாவம் கூட குழந்தை பருவத்தில் தெரியாதது போல் பெரிய வயது வந்தாலும் ஆர்வம் இல்லாதவராக இருப்பார்கள். இப்படிப்பட்ட ஸ்ரீகள் சம்சார ஜீவிதத்திற்கு வேலைக்கு ஆக மாட்டார்கள். அதனால் மனித சமுதாயத்திற்கு தூரமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கை இவரில் இருக்கும். அப்படிப்பட்டவர்கள் சம்சாரம் ஜீவிதத்தில் கூடியிருக்கின்ற மனிதர்களில் நடுவில் வீடுகளில் இருக்காமல் ஆத்மா ஞானம் நிலையமான தேவாலயங்களில் நிவாசித்துக்கொண்டிருப்பார்கள்.

தேவாலயங்களில் நிவாசித்துக் கொண்டு கடவுளுக்கு ஏதோ ஒரு ரகமாக சேவை செய்து கொண்டு இருப்பார்கள். தேவாலயங்களை சுத்தப்படுத்தும் வேலை செய்வதில் இருந்து பூஜை விதானம் வரை நித்தியம் வேலை செய்து கொண்டிருப்பார்கள். இன்னும் சில பேர்கள் நாட்டியத்தை பழகிக் கொண்டு கடவுள் முன்பு நாட்டியத்தை செய்து தேவாலயத்திற்கு வரும் பக்தர்களை கவர்ச்சிக்கும்படி செய்து பக்தர்கள் எண்ணிக்கை வளர்ப்பதற்கு முயற்சி செய்வார்கள். மற்ற சில பேர்கள் சங்கீதத்தை பழகி பாட்டுகளை பாடிக்கொண்டு காலை மாலை செய்து வந்து பக்தர்களுக்கு நன்றாக இருக்கும் படி செய்வார்கள். இந்த விதமாக சம்சார ஜீவிதத்திற்கு வேலைக்கு ஆகாத மாச்ச கம்மல்கள் தேவாலயங்களில் நிவாசம் ஏற்படுத்திக் கொண்டு ஏதோ ஒரு

விதமாக சேவை செய்து கொண்டுயிருக்கும் முறை பூர்வம் இருந்தது. அப்படிப்பட்ட மாச்சகம்மல்களை தேவதாசி என்று அழைக்கப்படுகின்றது.

காலம் கடந்து கொண்டிருக்கும்போது தேவதாசிகள் என்றால் வேசியர்களுக்கு கீழ் கணக்கிடம் காலம் நெருங்கிவிட்டது. இன்று தேவதாசிகளில் மாச்சகம்மல்கள் இல்லை. அவரிடத்தில் சாதாரணமான ஸ்ரீகளே இருக்கின்றார்கள். இன்று தேவதாசிகள் தேவாலயங்களில் நிவாசம் இருக்காமல் வீடுகளிலேயே இருந்து விபச்சாரி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். கிராம தேவதைக்கு எருது மாடு விட்டுவிட்டு கட்டி வைக்காதது போல் எந்த சாலையில் மேய்ந்தாலும் தடை இல்லாதது போல ஒரு தேவதை பெயர் மீது ஒரு ஸ்ரீவுக்கு திருமணம் செய்யாமல் விட்டுவிடுவது தேவதாசியை (பசூவுராலு) செய்தது போல். அவளிடம் எந்த புருஷனாவது போகலாம். இந்த நடைமுறை சில குலங்களில் இருக்கின்றது. தேவதாசியாக மாறும் ஸ்ரீ இஷ்டம் இருந்தாலும் இல்லாமல் போனாலும் பெரியோர்கள் சொல்படி கேட்டு மாற வேண்டிய சூழ்நிலைமை இருக்கின்றது.

பூர்வம் தேவதாசிகள் நிவாசத்திற்கு தகுதி இல்லாதவராக இருந்தால், இப்போது இருக்கின்றவர் தகுதி பெற்றவர்களாக இருந்தாலும் கூட தேவதாசி வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். பூர்வ காலத்தில் மாச்ச கம்மல்கள் தன்னலமின்றி தெய்வ சேவை செய்து தேவதாசிகள் என்னும் பெயர் சம்பாதித்துக் கொண்டால் இன்று காலத்தில் சுயநிலையில் விபச்சாரி வேலை செய்கின்றார்கள். பூர்வ காலத்தில் இருந்த தேவதாசிகளை புனித எண்ணத்துடன் எல்லோரும் கௌரவித்து கொண்டு இருப்பார்கள். இந்த காலம் தேவதாசிகளை எல்லோரும் நீச்சமான எண்ணத்துடன் பார்க்கின்றார்கள். ஒரு காலத்தில் இருந்த தேவதாசிகள் எல்லோரும் பக்தி ஞானம் இதன் போன்ற எத்தனையோ இருந்தது. இன்று சிறிதளவு கூட பக்தி எண்ணம் இல்லாதவர்கள் தேவதாசிகள் ஆனார்கள். தற்போது காலத்தில் தேவதாசிகளை “பசூவுராலு” என்று அழைக்கப்படுகின்றது. நாகரீகம் வளர்ந்து கொண்டிருக்கும்போது இந்த பசூவுராலு எண்ணிக்கை குறைந்து போகின்றது. இருந்தாலும் சில குலங்களில்

ஸ்ரீகளை பசூவுராலுவாக செய்வது இன்றும் ஆங்காங்கே நடக்கின்றது.

## 37. தேவதாசுகள்

ஸ்ரீ ஜாதியில் மாச்சகம்மல் இருப்பது போல புருஷ ஜாதியில் கூட ஆண்மை இல்லாதவர்கள் (நாபுசுங்குலு) இருக்கிறார்கள். அவர்களும் கூட மாச்சகம்மல் போல் சம்சார ஜீவிதத்திற்கு வேலைக்காகத புருஷத்தத்துவம் இல்லாத தேகம் அணிந்து இருப்பார்கள். இவர்கள் கூட பூர்வம் தேவாலயங்களிலேயே இருப்பதற்கு ஸ்தானம் ஏற்படுத்திக் கொண்டு அங்கு தெய்வ சேவைகள் செய்வர்கள். அப்படிப்பட்ட ஆண்மை இல்லாதவர்கள் நாட்டியம் பணி சங்கீதம் முதலியன அவற்றிலும் கூட கை தேர்ந்தவர்களாக தேவாலயங்களுக்கு அழகு சேர்ப்பவர்கள். தன்னலமின்றி தெய்வ சேவைகள் செய்த அந்த ஆண்மை இல்லாதவர்களை தேவதாசுகள் என்று அழைத்தார்கள். இன்று காலத்தில் எந்த கோயிலிலும் தேவதாசிகள் தெரிய மாட்டார்கள், தேவதாசுகள் தெரிய மாட்டார்கள். இன்று ஆண்மை இல்லாதவர்கள் ஸ்ரீகள் போல் வேறொன்று பிச்சை தொழிலை செய்து காலத்தை கழிக்கின்றார்கள். இவர்களை உழிகம்மா என்று கூட சொல்லப்படுகின்றது. புருஷ உருவம் கொண்ட இவர்கள் இப்போதும் கர்நாடகாவில் சம்பிரதாய சித்தமாக சில ஸ்ரீ தேவதை தேவாலயங்களில் வருடத்திற்கு ஒரு தடவையாவது நாட்டியம் செய்வதும் பாட்டுகள் பாடுவதும் நடக்கின்றது.

கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால்! ஸ்ரீ ஜாதியில் மாச்சகம்மலான தேவதாசிகள் புருஷ தேவாலயங்களில் நிவாசித்துக் கொண்டிருப்பார்கள். அதன் போலவே ஆண்மை இல்லாதவர்கள் தேவதாசுகள் ஸ்ரீ தேவதை கோவில்களில் நிவாசித்து கொண்டிருப்பார்கள். அதனால் இன்றும் தேவதாசுகள் ஸ்ரீ தேவாலயங்களில் நாட்டியம் செய்வது, பாட்டுகள் பாடுவதும் நடக்கின்றது. அதன் போலவே விபச்சாரி பணி செய்கின்றவர்களும் கூட புருஷ தேவாலயங்களில் நாட்டியம் செய்வது நடக்கின்றது. ஸ்ரீ தேவாலயங்களில் ஆண்மை இல்லாதவர்கள் சம்பிரதாய சித்தமாக பணம் வாங்கிக் கொள்ளாமல் அவர்களே

பூஜைகள் செய்து நாட்டியங்கள் செய்து பாட்டுகள் பாடுவது கர்நாடகா முதலியன பகுதிகளில் இன்றும் கூட இருக்கின்றது. விபச்சாரி பணி செய்கின்ற ஸ்ரீகள் பண்டிகை நேரத்திலும் கூட பணத்தை வாங்கிக்கொண்டு நாட்டியம் செய்வது இப்போதும் கூட பார்க்கின்றோம். போகமெல்லா நாட்டியம் என்றும் புருஷ தேவாலயங்களில் பண்டிகை நாளில் நடப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். பூர்வ காலத்தில் இருந்த தேவதாசிகளுக்கு, தேவதாசுகளுக்கு இன்று காலத்தில் தேவதாசிகளுக்கு தேவதாசுகளுக்கு எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ நீங்களே யோசனை செய்யுங்கள்.

# 38. நட்சத்திரம்

உலகம் சிறிது காலம் இருந்து மற்றும் சிறிது காலம் இல்லாமல் போகும். உலகம் இருக்கும் போதே இந்த ஜீவராசிகள் இறந்து பிறந்து கஷ்ட சுகங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறது. உலகம் இல்லாத போது எந்த ஜீவராசியும் இல்லை. ஒன்றும் தெரியாத பஞ்சபூதங்களே இல்லாத ஒன்றும் தெரியாத நிலையே உலகம் இல்லாத நிலை. ஜெகத் எல்லாம் அழியக்கூடியது மற்றும் அழியாதது ஒன்று இருக்கின்றது அதுவே பரமாத்மா. அதில் ஐக்கியமான ஜீவிகள் அவர்களும் கூட பரமாத்மாவாக மாறி நாசனம் இல்லாதவராக இருப்பார்கள். உலகம் இருக்கும்போதும் மற்றும் இல்லாத போதும் நிரந்தரமாக மாற்றமில்லாதவராக இருக்கின்றவர் பரமாத்மா. நமக்கு 12 மணி காலம் பகல் 12 மணி காலம் ராத்திரி ஆகும்போது பரமாத்மாவுக்கு ஆயிரம் யுகங்கள் பகல், ஆயிரம் யுகங்கள் ராத்திரியாக இருக்கின்றது. பரமாத்மாவின் பகல் ஆயிரம் யுகங்களில் ஜீவராசிகள் இருக்கின்றது. பரமாத்மா ராத்திரி கால ஆயிரம் யுகங்களில் ஜீவராசிகள் இல்லை மற்றும் உலகமும் இல்லை. உலகம் இருக்கும்போது உலகம் இல்லாத போது ஒரே நிலையாக பரமாத்மா இருந்தது.

நட்சத்திரம் ராத்திரி நேரத்தில் தெரியும். பகல் நேரத்தில் தெரியாது. பகலில் தெரியாமல் இருந்தாலும் நட்சத்திரங்கள் எப்போதும் இருக்கும். நிரந்தரமாக இருக்கின்ற

நட்சத்திரம் ராத்திரி காலம் தெரிந்து பகல் காலம் தெரியாமல் இருக்கின்றது. உலகம் இருக்கும்போதும் இல்லாத போதும் நாசனமில்லாத இருக்கின்ற பரமாத்மாவை பகலும் இரவும் நிரந்தரமாக இருக்கின்ற நட்சத்திரத்தில் பூர்வம் இருந்த பெரியோர்கள் ஒப்பிட்டார்கள். மோக்ஷத்திற்கு அடையாளமாக நட்சத்திரத்தை வைத்தார்கள். அதனால் கடவுளில் ஐக்கியமாக வேண்டும் என்றால், கடவுள் இப்படிப்பட்டவர் என்று நட்சத்திரத்தை காட்டுவது இந்து மதத்தில் முதலில் நடைமுறையாக இருந்தது. காலம் கடந்து கொண்டிருக்கும்போது ஹிந்துக்கள் அதனை மறந்து போனார்கள். கிறிஸ்தவ மதத்தில், முகமதிய மதத்தில் நட்சத்திரங்களுக்கு மதிப்பு கொடுப்பது இன்றும் உள்ளது. நட்சத்திரம் பரமாத்மா சின்னமாக இருக்கும்போது அதனில் எப்படி சேர வேண்டும் என்று சந்தேகம் ஏற்படாமல் இருக்காது. அதற்கு பதில் என்னவென்றால்! பரமாத்மாவைதெரிந்து கொள்வதற்கு ஆத்ம ஞானம் தேவை. ஆத்மா ஞானம் தெரிந்து கொண்ட பிறகு பரமாத்மா தெரியபடுவார்.

## 39. சந்திரன்

பிரம்ம வித்தையில் ஞான சின்னமாக சந்திரனை ஒப்பிடுவது சகஜம்தான். “சந்திர மாசம் ஜோதிர்யோகி பிராப்பிய நிவர்த்ததே” கர்ம சேஷத்தினால் மறுபடியும் ஜென்மம் எடுத்த யோகி சந்திர தேஜஸ் உடன் பிறப்பார்கள். இங்கு சந்திர தேஜஸ் என்றால் ஞான சக்தி என்று அர்த்தம். அதனால் ஞான சக்திக்கு பதிலாக சந்திரனை காண்பிக்கின்றார்கள். கடவுளில் ஐக்கியம் ஆகுவதற்கு ஞான சக்தி தேவை என்று சொல்வதற்கு நட்சத்திரத்தை வைத்து அதன் கீழ் சந்திர வட்டத்தை வைத்தார்கள்.



**நட்சத்திரம் சந்திரன்**

பூர்ண சந்திரன் ஆகாமல் வளர்ந்து கொண்டிருக்கின்ற சந்திரன் நிலா வட்டத்தை காண்பித்தார்கள். இதற்கு அர்த்தம் ஞான சக்தி வளர்ந்தால் மோக்ஷம் கிடைக்கும் என்று தெரிந்து கொள்ள வேண்டும். மோக்ஷ சம்பந்தமான நட்சத்திரம் ஞான சம்பந்தமான சந்திரனை பூர்வம் எல்லோரும் கௌரவித்து மதிப்பாக காண்பார்கள். இப்போது இது ஒரு முகமதியருக்கு மட்டுமே இருக்கிறது. ஆனால் நட்சத்திரத்தின் உள் அர்த்தம் அவர்களுக்கு எவ்வளவு தெரியுமோ நமக்கு தெரியாது.

## 40. சிறகுகள் கொண்ட குதிரை

